பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—சுடர் 7

# பாலஸ்தீனம்

வெங்களத்தூர்


சாமிநாத சர்மா.

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்.


முதற் பதிப்பு—பிப்ரவரி 1939

ஜோதி பிரஸ், 47, 31-வது வீதி, இரங்கூன்.

தியாடோர் ஹெர்ஸல



லார்ட் பால்பர்





கிராண்ட் மப்டி
ஹாஜ் அமீன்
எல் ஹுஸேன்



டாக்டர்
செயிம் வீஸ்மான்

# உள் அடக்கம்.


| | | |
|---|---|---|
| | பிரசுராலயத்தின் வார்த்தை | |
| | முன்னணி | |
| I | பூகோளமும் சரித்திரமும் | 1—8 |
| II | பால்பர் அறிக்கை | 9—19 |
| III | அராபியர்களின் தேசிய இயக்கம் | 20—29 |
| IV | யூதர் குடியேற்றத்தின் விளைவு | 30—37 |
| V | யூதர்கள் சாதித்ததென்ன ? | 38—44 |
| VI | கலகங்கள் | 45—62 |
| VII | பிரிவினைப் பிரச்னை | 63—85 |
| VIII | சமரஸ மகாநாடு | 86-101 |
| | அநுபந்தம் | 102 |

# பிரசுராலயத்தின் வார்த்தை

'பிரபஞ்ச ஜோதி' பிரசுராலயத்தில் இப்பொழுது ஏழு குழந்தைகள் தவழ்ந்து விளையாடுகின்றன. ஆனால் இதைக் கண்டு, இந்த ஆலயத்தின் 'கொத்தனோ', நாமோ மகிழ்ச்சி கொள்ள முடியவில்லை; திருப்தியும் அடைய மாட்டோம். ஏன்? தமிழர்களின் அறிவுப் பசி எவ்வளவு அதிகமா யிருக்கிற தென்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். வயிற்றுப் பசியோடு அறிவுப் பசியையும் விரைவில் தணிக்க வேண்டுமென்ற ஆவல் எமக்கு அதிகமா யிருக்கிறபோது, இந்த ஏழு குழந்தைகளைக் கண்டு மட்டும் நாம் எப்படி திருப்தி யடைய முடியும்? ஆனால் அப்படி நாம் திருப்தியடைவது, எமது குழந்தைகளைத் தமிழர்கள் கையி லெடுத்துச் சீராட்டிப் பாராட்டுவதிலன்றோ இருக்கிறது?

இது காறும் எமக்கு ஆதரவு காட்டிய அன்பர்களுக்கு நன்றி; இனியும் காட்டப் போகும் அன்பர்களுக்கு எமது வணக்கம்.

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்.

# முன்னணி

சிறிது காலமாகப் பாலஸ்தீனத்தில் நடை பெற்று வருகிற சம்பவங்களையும், இவை சம்பந்தமாகப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கர்ப்பக் கிரகத்தில் ஏற்பட்டிருக்கிற அதிர்ச்சியையும் பார்க்கிற போது, இந்தப் பாலஸ்தீனப் பிரச்னை, முடிவுக்கு வராத ஒரு பிரச்னையாகவே இருந்துவிடுமோவென்ற எண்ணம் சில அரசியல் வாதிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. 'எகானமிஸ்ட்' (The Economist) என்ற ஒரு பிரிட்டிஷ் வாரப் பத்திரிகை, 10—7—37ல், பாலஸ்தீனப் பிரிவினை சம்பந்தமாக எழுதியது இங்குக் கவனிக்கத்தக்கது.

> பீல் கமிஷனுடைய சிபார்சுகளை பிரிட்டன் நன்கு வரவேற்றபோதிலும், உலகத்தின் மற்ற நாடுகள், இந்தப் பிரிவினையை, பாலஸ்தீனத்தில் வசிக்கிற இரண்டு ஜனங்களின் நஷ்டத்தின் மீது பிரிட்டன் லாப மடையக்கூடிய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முறைக்கு ஓர் உதாரணமென்று கருதுகின்றன.

பாலஸ்தீனம், ஒரு சிறிய நாடா யிருந்தாலும், அது தற்போதைய உலகப் பிரச்னைகளின் முன்னணியில் வந்து நிற்கக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டது. ஸ்பெயினும் இப்படித்தானே. ஆனால் ஸ்பெயினுக்கு ஏற்பட்டுவிட்ட நரம்புத் தளர்ச்சி, புனித பாலஸ்தீனத்


திற்கும் ஏற்படக்கூடா தென்பதே அறிஞர்கள் பிரார்த்தனை.

7—2—39ல் லண்டனில் சமரஸ மகாநாடு கூடிய அதே தருணத்தில், பாலஸ்தீனத்தில் அடக்குமுறை தேவதை காலதேவனோடு கைகோத்துக் கொண்டு கோர தாண்டவம் செய்த வண்ணமாயிருக்கிறாள். அராபியர்கள் மூன்று நாள் வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர். அடக்கு முறையை நிறுத்தி வைக்க வேண்டுமென்ற நிபந்தனையை விதித்து, அஃது அங்கீகரிக்கப்பட்ட பிறகே அராபியப் பிரதிநிதிகள் சமரஸ மகாநாட்டு மேஜைக்குச் செல்ல இசைந்திருக்க வேண்டுமென்றும், இது விஷயத்தில் இவர்கள் 1921ம் வருஷத்தில் ஐரிஷ் பிரதிநிதிகள், பிரிட்டனுடன் சமரஸம் பேசுவதற்கு முன்னர் நடந்து கொண்ட மாதிரியைப் பின்பற்றியிருக்கலாமென்றும் சில ராஜதந்திரிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். இந்தச் சர்ச்சையில் நான் தற்போழ்து நுழைய விரும்ப வில்லை. மகாநாடு தொடங்கி விட்ட பிறகு அதைப்பற்றி வாதம் செய்து என்ன பயன்?


வெளி நாட்டு விவகாரங்களில் தமிழர்களாகிய நாம் இன்னும் அதிகமான சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதே என் கோரிக்கை.

வெதத்தாணிய<br>
தை ௨௬

வெ. சாமிநாதன்


யூதர் சொந்தமான
இடங்கள் ..
ரெயில்வே
சிரியா
டைரே
ஏக்ரே
ஹைபா
நாஜரேத்
காலிலி
ஏரி
ஜார்டன் நதி
டிரான்ஸ் ஜார்டான்
டெல் அவிவ்
ஜாபா
நாப்ளுஸ்
லிட்டா
ஜெருசலேம்
ஹெப்ரான்
காஜா
மரணக்கடல்
பீர்ஷேபா
கெய்ரோவுக்கு
0
25
50
100 மைல்.

இதுதான் பாலஸ்தீனம்




பீல் கமிஷன், பாலஸ்தீனத்தை இந்த மாதிரி தான் பிரிக்க வேண்டுமென்று சிபார்சு செய்தது.

# பாலஸ்தீனம்

## 1. பூகோளமும் சரித்திரமும்

வேகமாகச் செல்லும் ஒரு மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு இரண்டு மணி நேரம் நீங்கள் பிரயாணஞ் செய்வீர்களானால், பாலஸ்தீனத்தை வடக்கும் தெற்குமாகச் சென்று பார்த்து விடலாம். நில விஸ்தீரணத்தில் மிகச்சிறிய பிரதேசந்தான். ஆனால் முக்கியமான இடத்தில் இருப்பதினாலேயே எல்லாருடைய பார்வையும் இதன் மீது விழுந்திருக்கிறது.

பாலஸ்தீனம் ஒரு முச்சந்தியில் இருக்கிறது. ஐரோப்பா, ஆப்ரிக்கா, ஆசியா ஆகிய மூன்று கண்டங்களையும் இணைத்து வைக்கிற ஒரு பாலம் மாதிரியுள்ளது இந்த நாடு. அராபியர்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் ஆகிய மூன்று மதத்தினரும், தங்களுடைய புனித நாடாக இதனைக் கொண்டாடுகிறார்கள். பிரிட்டன், ஜெர்மனி, இத்தலி ஆகிய மூன்று வல்லரசுகளும் இந்த நாட்டின் மீது கண்ணோட்டம் செலுத்தி வருகின்றன. கீழ் நாட்டையும் மேனாட்டையும் சேர்த்து வைக்கிற ஆகாய விமான வழிகள், கடல்

மார்க்கங்கள் ஆகிய இவற்றிற் கெல்லாம் ஒரு 'ஜங்க்ஷன்' மாதிரியாகவும், சூயஸ் கால்வாயின் பாதுகாவலனாகவும் பாலஸ்தீனம் இருக்கிறது.

பாலஸ்தீனத்திற்கு வடக்கில் சிரியா; கிழக்கில் ட்ரான்ஸ்—ஜார்டோனியா; தெற்கே ஹெட்ஜாஸ், எகிப்து முதலியன; மேற்கே மத்திய தரைக்கடல். ஐரோப்பிய யுத்த முடிவுக்குப் பின்னரே இந்த எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டன வென்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. இந்த எல்லைக்குட்பட்ட தற்போதைய பாலஸ்தீனம் சுமார் பதினாயிரம் சதுர மைல் விஸ்தீரணமுடையது. 1931ம் வருஷத்தில் எடுக்கப் பட்ட ஜன கணிதப்படி மொத்த ஜனத்தொகை 10½ லட்சம். ஆனால் இதற்குப் பிறகு ஜனத்தொகை அதிகரித்திருக்கிறது. சமீபத்தில் எடுத்த ஒரு கணக்குப்படி அராபியர்கள் மட்டும் பத்து லட்சம் பேரும், யூதர்கள் மட்டும் நாலரை லட்சம் பேரும் இருக்கிறார்களென்றால், மற்ற ஜாதியாருடைய எண்ணிக்கையையும் சேர்த்து, ஜனத்தொகை அதிகம் பெருகியிருக்கிற தல்லவா?

யூதர்களில் பெரும்பாலோர் ஜையோனியர்கள். அதாவது பாலஸ்தீனத்தில் புதியதொரு யூத சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்ற நோக்கமுடையவர்கள். யூதர்களில் நூற்றுக்கு இருபத்தைந்து பேர் விகிதம் விவசாயத்தையே ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கிறார்கள். யூதர்களில், அரசியல் கட்சி பேதங்கள் அதிகமாயில்லை.

அராபியர்கள் நாடோடி வாழ்க்கையை நடத்தும் ஒரு பூர்விக ஜாதியார் என்று சிலர் நினைக்கின்றனர். இது மிகத் தவறு. இவர்களுடைய தலையணி முதலியன, புராதன நாகரிகத்தைக் காட்டுகிறதேயாயினும், நவீன நாகரிகப் போக்கில் இவர்கள் ஈடுபடாமலில்லை. அராபியர்களில் ஐந்தில் மூன்று பங்கினர் விவசாயிகள். இவர்கள் அநேகமாக மலைப் பிரதேசங்களிலேயே தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். அராபியர்களின் மொத்த ஜனத்தொகையில் எட்டில் ஒரு பங்கு பேர் கிறிஸ்தவர்கள். இவர்கள் அநேகமாக நகரங்களில் வசிக்கும் வியாபாரிகளாகவும் உத்தியோகஸ்தர்களாகவும் இருக்கிறார்கள். அராபியர்களில் ஆறு விதமான அரசியல் கட்சிகள் இருந்தன. ஆனால் 1935ம் வருஷத்தில் இவற்றில் ஐந்து கட்சிகள் ஒன்று சேர்ந்து விட்டன.

1936ம் வருஷத்திற்கு முன்னர் யூதர்களும் அராபியர்களும் சிநேகப்பான்மையுடனேயே பழகி வந்தார்கள். ஆனால் இப்பொழுது இந்தப் பழக்கமெல்லாம் நின்று விட்டன. இரு ஜாதியினரும் ஒரே நகரமாயிருந்தாலும் தனித் தனி இடங்களிலேயே வசிக்கிறார்கள். யூதர்கள், தங்கள் ஜாதியினருடைய ஹோட்டல்களில்தான் சாப்பிடுகிறார்கள்; மோட்டாரில் ஏறிச் செல்கிறார்கள்; சிகரெட் பிடிப்பதும், தீப்பெட்டி உபயோகிப்பதும்கூட யூதருடையதுதான். இங்ஙனமே அராபியர்களும், தங்கள் ஜாதியினருடைய சாமான்களையே உபயோகிக்கிறார்கள். இரு ஜாதியினருக்கும் தனித்தனிப் பள்ளிக்கூடங்கள்

இருக்கின்றன. அந்தந்த ஜாதிப் பிள்ளைகள், அந்தந்த ஜாதிப் பள்ளிக்கூடங்களுக்கே செல்கின்றன.

பாலஸ்தீனத்தில், மத்திய தரைக்கடலோரமாகத் தென் கிழக்கில் உள்ள சமதரைப் பிரதேசம் செழிப்புள்ளது. மத்தியிலுள்ள பிரதேசத்தில் குன்றுகளும், மேட்டுதர்களும் நிரம்பியிருக்கின்றன. தெற்குப் பிரதேசம் வெறும் வனாந்திரம். இங்ஙனம் மூன்று விதமாகப் பாலஸ்தீனத்தைப் பிரிக்கலாம்.

பாலஸ்தீனத்தில் இயற்கை வளம் மிகக் குறைவு. கடலோரப் பிரதேசத்தில் ஆரஞ்சு, திராட்சை முதலிய பழ தினுசுகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. நீர்ப்பாசன வசதிகள் மிகக் குறைவாயுள்ளபடியால், விவசாய அபிவிருத்திக்கு இந்த நாட்டில் வழி கிடையாது. மரணக் கடலிலிருந்து, கைத் தொழில்களுக்கு வேண்டிய சில ரஸாயனப் பொருள்கள் கிடைக்கின்றன.

'பாலஸ்தீனம் எப்பொழுதுமே ஒரு சமூகத்தாருக்குச் சொந்தமாயிருந்ததில்லை. இனியும் அநேகமாக அப்படியிராது' என்று ஸர் ஜார்ஜ ஆடம்ஸ் ஸ்மித் என்ற ஓர் ஆங்கிலேய அறிஞன் கூறினான். பாலஸ்தீனத்தின் பூர்விக சரித்திரத்தை நாம் சிறிது புரட்டிப் பார்க்கிறபோது இந்த வாக்கியங்கள் எவ்வளவு உண்மையாயிருக்கின்றன?

முறகாலத்தில் எதியோப்பியர், அஸ்ஸிரியர், பாரசீகர், மங்கோலியர் முதலிய இன்னும் யாராரோ

இந்த நாட்டில் ஆதிக்கம் செலுத்தி யிருக்கிறார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் தங்கள் அதிகார பலம் குன்றியவுடன், தங்களாலியன்றவளவு இந்த நாட்டை அழித்தும் விட்டிருக்கிறார்கள். கிரேக்க மன்னனாகிய மஹா அலெக்ஸாந்தர், கி. மு. 322ம் வருஷத்தில் இந்த நாட்டின் வழியாகத்தான் எகிப்தின் மீது படை யெடுத்துச் சென்றான். இந்த நாட்டின் தெற்குப் பாகத்திலுள்ள காஜா என்ற ஊரைக் கைப்பற்ற இவன் இரண்டு மாத காலம் முற்றுகை போட வேண்டியிருந்தது. மஹா அலெக்ஸாந்தரின் செல்வாக்குக்கு இந்த நாடு உட்பட்டிருந்ததேயாயினும், இவன், நாட்டு மக்களின் தினசரி வாழ்க்கையில் தலையிடவில்லை.

அலெக்ஸாந்தருக்குப் பிறகு, அவனுடைய முக்கிய தளகர்த்தர்களில் ஒருவனாகிய டாலெமி என்பவனுடைய ஆதிக்கத்தின் கீழ் பாலஸ்தீனம் இருந்தது. இவன் காலத்தில் கிரேக்க நாகரிகம் இந்த நாட்டில் தலை காட்டத் தொடங்கியது. ஆனால் கிரேக்கர்களுடைய ஆதிக்கம் அதிக நாள் நீடிக்கவில்லை. கி. மு. 63ம் வருஷத்தில் பாம்பே (Pompey) என்பவனுடைய முயற்சியால் இந்த நாடு, ரோம ஏகாதிபத்தியத்தின் செல்வாக்குக்குட்பட்டது. இவர்களுடைய காலத்தில், பாலஸ்தீன ஜனங்கள் கலகத்திற்குக் கிளம்பினார்கள். இதனால் ரோமர்கள் கோபங்கொண்டு தங்களின் சிறந்த தளகர்த்தனாகிய வெஸ்பேஸியான் என்பவனுடைய தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பி கி. பி. 70ம் வருஷம் செப்டம்பர் மாதம்

ஜெருசலேம் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அப்பொழுது இந்த ஊரிலுள்ள பல கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்தக் காலத்திலிருந்தே, பாலஸ்தீனத்தின் புராதன வாசிகள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டிருந்த யூதர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று பரவத் தொடங்கினார்கள்.

கி. பி. ஏழாவது நூற்றாண்டிலிருந்து பாலஸ்தீனத்தின் ஆட்சி அராபியர்களிடமிருந்து வந்தது. கி. பி. 11, 12வது நூற்றாண்டுகளில், முஸ்லீம்களிடமிருந்து, கிறிஸ்தவர்களின் புனித ஸ்தலமாகிய ஜெருசலேத்தை விடுவிக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் ஐரோப்பாவிலிருந்து பல 'சமயத் தொண்டர் படை'கள் (Crusades) கிளம்பின. இவர்கள் வசத்தில் இந்த நாடு கொஞ்ச காலம் இருந்தது. இதற்குப் பிறகு, கி. பி. 1516ம் வருஷத்திலிருந்து துருக்கியர்கள், இந்த நாட்டின் ஆதிக்கத்தை ஏற்று நடத்தி வந்தார்கள். 1914ம் வருஷம் ஐரோப்பிய மகா யுத்தம் தொடங்கிய காலம்வரை துருக்கிய சாம்ராஜ்யத்தின் செல்வாக்கே இந்த நாட்டில் ஓங்கி நின்றது.

ஐரோப்பிய யுத்தத்தில், துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்திருந்ததல்லவா? இதனால் நேசக்கட்சியினர், துருக்கியின் ஆதீனத்திற்குட்பட்டிருந்த நாடுகளையும் தாக்க வேண்டுமென்று திட்டம் போட்டனர். இதன்படி, நேசக் கட்சியினரில் முக்கியஸ்தர்களான பிரிட்டிஷார், பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். 1918ம் வருஷம்

செப்டம்பர் மாதத்திற்குள் பாலஸ்தீனம் முழுவதும் நேசக் கட்சியினர் வசமாகி விட்டது. பின்னர், சர்வ தேச சங்கத்தின் சார்பாக இதன் நிருவாகம் பிரிட்டிஷார் வசம் ஒப்புவிக்கப்பட்டது. இதனை ஒரு ஹை கமிஷனர் மேலதிகாரியா யிருந்து நிருவாகம் செய்கிறார். இவர், பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரி இலாகாவினால் நியமிக்கப் படுகிறவர். இவருடைய வருஷச் சம்பளம் 4,000 பவுன்.

பாலஸ்தீனத்தி லுள்ள முக்கியமான நகரங்களும் அவற்றின் ஜனத்தொகையும் வருமாறு:—

| பெயர் | ஜனத்தொகை |
|---|---|
| டெல்—அவீவ் | 100,000 |
| ஜெருசலேம் | 90,526 |
| நாஜெரெத் | 74,000 |
| ஜாபா | 51,876 |
| ஹைபா | 50,689 |
| காஜா | 17,500 |
| நாபுளுஸ் | 16,000 |
| ஹெப்ரோன் | 16,700 |
| பெத்லெஹம் | 6,700 |

நிருவாக சௌகரியத்திற்காக, பாலஸ்தீனத்தை வட பாலஸ்தீனம் என்றும் தென் பாலஸ்தீனமென்றும் இரண்டு ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவும் ஒவ்வொரு டிப்டி கமிஷனரின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறது. வட பாலஸ்தீன ஜில்லாவின் தலைநகரம் ஹைபா. தென் பாலஸ்தீன ஜில்லாவின் தலைநகரம் ஜாபா. ஜெருசலேம்

நகரத்தை மட்டும் தனி ஜில்லாவாகப் பிரித்து ஒரு டிப்டி ஜில்லா கமிஷனரின் மேற்பார்வையில் விடப்பட்டிருக்கிறது.

பாலஸ்தீனத்தின் தலைநகரம் ஜெருசலேம். இங்கு கிறிஸ்தவர்களுக்குப் புனிதமான ஒரு தேவாலயமும், முஸ்லீம்களின் முக்கிய மசூதியொன்றும், யூதர்களின் 'அழுகைச் சுவரும்' சரித்திரப் பிரசித்தமான சின்னங்களாக இலங்குகின்றன. உலகத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் மிகப் புராதனம் வாய்ந்த தேவாலயம் பெத்லெஹம் என்ற நகரத்தில் இருக்கிறது. நாஜரெத் என்ற நகரத்தில்தான் கிறிஸ்து நாதர் தமது இளமையைக் கழித்தாரென்று விவிலிய நூல் கூறுகிறது.

பாலஸ்தீனத்தின் முக்கிய துறை முகங்கள் இரண்டு. அவையே, ஜாபா, ஹைபா என்பன. இரண்டும் செயற்கைத் துறை முகங்கள்தான். ஹைபா துறைமுகம் 1933ம் வருஷந்தான் கட்டி முடிக்கப் பட்டது. மோசூல் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து குழாய் வழியாக இந்தத் துறை முகத்திற்கு பெட்ரோல் கொண்டு வரப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது.

பாலஸ்தீனத்தில் பேசப் படுகிற முக்கியமான பாஷைகள் மூன்று. அவையே இங்கிலீஷ், அரபு, ஹீப்ரு.

# II

## பால்பர் அறிக்கை

ஐரோப்பிய மகாயுத்தம் முடிந்ததும் நேசக் கட்சியினர் விருப்பப்படியே வார்சேல் சமாதான உடன்படிக்கை தயாரிக்கப்பட்ட தென்பதும், இந்தக் காலத்திலேயே சர்வ தேச சங்கம் சிருஷ்டிக்கப் பட்ட தென்பதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதற்குப் பிறகு, தோல்வி யடைந்து போனதாகக் கருதப் பட்ட ஜெர்மனி, துருக்கி முதலிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்த குடியேற்ற நாடுகளை, நேச வல்லரசுகள் தங்கள் தங்கள் நாடுகளுடன் தாங்களே சேர்த்துக் கொள்ளாமல் சர்வ தேச சங்கத்தின் மேற் பார்வையில் விடுவ தென்றும், அச்சங்கத்தின் பிரதி நிதியாக இருந்து ஒவ்வொரு வல்லரசும் சில சில நாடுகளை நிரு வாகம் செய்து வருவதென்றும் ஏற்பாடு செய்யப் பட்டன. இங்ஙனம் சர்வ தேச சங்கத்தின் சார்பாக ஒரு நாட்டை ஆள்வதற்குரிய அதிகாரத்திற்கே, 'மாண்டேட்' என்று பெயர். இந்த அதிகாரத்திற் குட்பட்டு ஆட்சிபுரியும் அரசாங்கத்திற்கு 'மாண்டே டரி அரசாங்கம்'* என்றும், ஆளப்படுகிற நாட்டுக்கு

* Mandatory Power.

'மாண்டேடெட் நாடு'‡ என்றும் அரசியல் வழக்கில் கூறுவார்கள்.

சர்வ தேச சங்க ஒப்பந்தத்தின் 22வது ஷரத்துப்படி, 'மாண்டேடரி' ஆட்சிக்குட் படுத்தப்பெறும் நாடுகள் அ, ஆ, இ என்று மூன்று பிரிவாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. அந்தந்த நாடுகளின் பூகோள அமைப்பு, ஜனங்களின் அரசியல் பரிபக்குவ நிலை, பொருளாதார நிலை முதலியவைகளைப் பொறுத்து இந்தப் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது.

<u>பிரிவு அ</u>: சுதந்திர நாடுகளென்று தற்காலிகமாக அங்கீகரிக்கப் படலாமெனக் கருதப்பட்டவையும், முன்னர் துருக்கிய ஏகாதிபத்தியத்துக்குட்பட்டிருந்தவையுமான நாடுகள் இந்தப் பிரிவைச் சேர்ந்தவை. இங்ஙனம் சுதந்திர நாடுகளாக அங்கீகரிக்கத்தக்கவையே யெனினும், இவை தங்கள் சுய பலத்தைக் கொண்டு ஆளக்கூடிய நிலைமைக்கு வரும் வரையில், 'மாண்டேடரி' அரசாங்கமானது, இவற்றிற்கு அரசாங்க நிருவாக சம்பந்தமாக ஆலோசனைகள் கூறிக் கொண்டிருக்கும்.

<u>பிரிவு ஆ</u>: மத்திய ஆப்ரிக்காவிலுள்ள நாடுகள். இந்த நாடுகளில் வசிக்கும் பிரஜைகளின் மதம், நாகரிகம் முதலிய வற்றின் உரிமைக்குப் பங்கம் வராமல் பாதுகாப்பதும், அடிமைத் தொழில், ஆயுதங்களை உற்பத்தி செய்து அதில் வியாபாரம் செய்தல், மது பான வியாபாரம் முதலியன நடைபெறாமல் தடுப்

‡ Mandated Territory.

பதும் 'மாண்டேடரி' அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

பிரிவு இ: தென் மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள சில பிரதேசங்களும், பசிபிக் மகாசமுத்திரத்திலுள்ள தீவுகளும் இந்தப் பிரிவைச் சேர்ந்தவை. நில விஸ்தீரணம், ஜனத்தொகை முதலியன குறைவாயிருப்பதாலும், இங்குள்ள ஜனங்கள் அதிக நாகரிகமில்லாதவர்களாயிருப்பதாலும், இந்த நாடுகளை 'மாண்டேடரி' அரசாங்கத்திற்குட்பட்ட ஒரு நாட்டின் உட் பிரிவாகக் கருதி ஆளலாம்.

இந்த மூன்று பிரிவைச் சேர்ந்த நாடுகளின் விவரத்தை அநுபந்தத்தில் பார்க்க.

1920ம் வருஷம் ஏப்ரல் மாதம் 24ந் தேதி சான் ரிமோ என்ற நகரத்தில் கூடிய சமாதான மகாநாட்டில், சர்வ தேச சங்கத்தின் மேற்படி 22வது ஷரத்துப்படி, பாலஸ்தீனத்தின் நிருவாகம் பிரிட்டன் வசம் ஒப்புவிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதனை 24-7-1922ல் சர்வ தேச சங்கம் ஊர்ஜிதம் செய்தது. இந்த அதிகாரப் பத்திரத்தில் 28 ஷரத்துக்கள் அடங்கியுள்ளன. இவற்றின் சாரத்தை மட்டும் இங்குத் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

> பாலஸ்தீனத்தில் 'யூதர்களின் தேசிய ஸ்தலம்' ஏற்படுவதற்கு அநுகூலமாக அதன் அரசியல், நிருவாக, பொருளாதார நிலைமைகள் அமைக்கப்பட வேண்டும். மேற்படி யூதர்களின் தேசிய ஸ்தல சம்பந்தமான விஷயங்களில்

அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறவும், அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவும் 'ஜையோனிய ஸ்தாபனம்' யூதர்களின் பிரதிநிதி ஸ்தாபனம் என்று அங்கீகரிக்கப்பட வேண்டும். தவிர, மேற்படி 'யூதர்களின் தேசிய ஸ்தலம்' ஏற்படுத்தும் விஷயத்தில் எல்லா யூதர்களின் ஒத்துழைப்பையும் பெற அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். யூதர்கள் தகுந்த நிலைமைகளில் குடிபுகுவதற்கு அநுகூலங்கள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களிலும், கரம்பு நிலங்களிலும் யூதர்கள் ஒன்று சேர்ந்து வசிப்பதற்கு ஆதரவு காட்டப்பட வேண்டும். பாலஸ்தீனத்திலேயே நிரந்தரமாக வசிக்க வேண்டு மென்று விரும்புகிற யூதர்கள், பாலஸ்தீனத்துப் பிரஜா உரிமையைப் பெற சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பெற வேண்டும். பொதுநல சம்பந்தமான கம்பெனிகளை ஆரம்பிக்கவோ, நடத்தவோ, தேசத்தின் இயற்கைப் பொருள்களை விருத்தி செய்யவோ, மேற்படி 'ஜையோனிய ஸ்தாபன'த்துடன் அரசாங்கம் ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

பாலஸ்தீனத்தின் நிருவாகத்தை பிரிட்டன் வசம் ஒப்புவிக்கிற இந்த அதிகார பத்திரத்தில், யூதர்களுக்கு ஏன் இவ்வளவு விசேஷமான சலுகைகள் காட்டப்படவேண்டு மென்று யாருமே கேட்கக் கூடுமல்லவா?

இந்தப் பூர்வாங்கப் பிரச்னையில் நாம் பிரவேசிப்பதற்கு முன்னர் 'ஜையோனிஸம்' என்றால் என்ன என்பதைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொண்டு விடுதல் நல்லது. பாலஸ்தீனம் தங்களுடைய பூர்விக நாடென்றும், அது மீண்டும் தங்களுக்குரித்தான நாடாக வேண்டுமென்றும் யூதர்கள் நீண்டகாலமாகக் கிளர்ச்சி செய்து வந்தார்கள். ஆனால் இதனை ஓர் அரசியல் இயக்கமாக உருவகப்படுத்தியவன் தியாடோர் ஹெர்ஸல் (Theodor Herzl) என்பான். இவன் 1896ம் வருஷத்தில் இந்த ஜையோனிய இயக்கத்தை ஆரம்பித்தான் ¶ தங்களுடைய தேசிய புனருத்தாரணத்திற்காக ஏற்படுத்தப் பெற்ற இயக்கம் இஃது என்று நம்பி, உலகத்தின் நானுபாகங்களிலுமுள்ள யூதர்கள் இதற்கு ஆதரவு அளித்து வந்தார்கள். 1901ம் வருஷம் இந்த இயக்கத்தின் சார்பாக 'யூதர்களின் தேசிய நிதி' யொன்று தொடங்கப் பெற்றது. ஏராளமான பணம் இதற்குச் சேர்ந்தது. யூதர்கள் சென்று குடியேறுவதற் கநுகூலமாக, பாலஸ்தீனத்தில் விஸ்தீரணமான பூப்பிரதேசங்கள், இந்த நிதிப்பணத்திலிருந்து வாங்கப் பெற்றன. வெளிநாடுகளிலிருந்த யூதர்கள் பலர், பாலஸ்தீனத்தில் வந்து குடிபுகுந்தார்கள். அப்பொழுது இந்த நாடு, துருக்கி சுல்தான் ஆதீனத்திலிருந்ததல்லவா?

---

¶ ஜையோன் (Zion) என்ற ஒரு குன்றின் மீது பாலஸ்தீன நகரம் கட்டப் பெற்றிருப்பதாக யூதர்களின் ஐதிகம். யூதர்களின் தேசிய இயக்கத்திற்கு 'ஜையோனிஸம்' என்ற பெயர் கொடுக்கப்பட்டது, இந்தக் குன்றின் பெயரைக் கொண்டுதான்.

சுல்தான், யூதர்கள் இங்ஙனம் பாலஸ்தீனத்தில் நிலம் வாங்குவதை விரும்பவில்லை. ஆனாலும் யூதர்கள், உலகத்தின் மற்றப் பாகங்களில் தங்களுக்குள்ள செல்வாக்கை உபயோகித்து பாலஸ்தீனத்தில் தங்கள் உரிமையை விருத்தி செய்து கொண்டு வந்தார்கள். 1908ம் வருஷத்தில் 'பாலஸ்தீன நில அபிவிருத்தி கம்பெனி' யொன்று ஏற்படுத்தி அதன் மூலமாக தென்னமெரிக்கா, ஈரான் முதலிய நாடுகளிலிருந்து கூட அநேக யூதர்களை வரவழைத்துக் குடியேற்றினார்கள். ஐரோப்பிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, துருக்கிய அதிகாரிகள் அநேக யூதர்களை பாலஸ்தீனத்திலிருந்து தேசப்பிரஷ்டம் செய்தார்கள். இதன் விளைவாக, இவர்களின் ஜனப் பெருக்கம் சிறிது குறைந்திருந்தது. 1918ம் வருஷம் பாலஸ்தீன யூதர்களின் ஜனத்தொகை சுமார் 55,000 தான். இப்பொழுது—சுமார் இருபது வருஷங்களுக்குப் பிறகு—நாலரை லட்சம் பேருக்குமேல் இருக்கிறார்கள்.

இங்கு ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கது. பாலஸ்தீனத்தை யூதர்களுக்கு உரிமை நாடாக்கிக் கொடுக்க வேண்டுமென்ற கிளர்ச்சிக்கு, பதினெட்டாவது பத்தொன்பதாவது நூற்றாண்டுகளிலிருந்தே பிரிட்டிஷார் ஆதரவு காட்டி வந்ததற்குக் காரணங்கள் என்ன என்ற விவரங்களைப்பற்றி நாம் இந்த நூலில் ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. பொதுவாக ஜையோனிய இயக்கத்திற்கு பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுடைய ஆதரவு, ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு

மட்டுமல்ல, சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக இருந்து வந்திருக்கிறது என்பதை மட்டும் தெரிந்து கொண்டால் போதுமானது. இந்த விஷயத்தை நாம் மனத்தில் வைத்துக் கொண்டு, ஐரோப்பிய மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், பாலஸ்தீன விஷயமாக யூதர்கள் கொண்டிருந்த அபிலாஷைகளை ஆதரித்து பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் வெளியிட்ட அறிக்கைகளைப் படித்தால், அதில் ஆச்சரியம் ஒன்றும் நமக்கு ஏற்படாது.

ஐரோப்பிய யுத்தத்தின் போது, உலகத்தின் பல பாகங்களிலும் சிதறிக் கிடந்த—ஆனால் செல்வாக்கு நிறைந்த—யூதர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் நேசக் கட்சியினருக்கு—சிறப்பாக பிரிட்டிஷாருக்கு—தேவையாயிருந்தது. அப்பொழுது அமெரிக்காவின் துணையை நேசக் கட்சியினர் தேடிக் கொண்டிருந்தனர். அமெரிக்காவிலோ யூதர்களின் எண்ணிக்கையும் செல்வாக்கும் அதிகம். எனவே, யூதர்களின் அநுதாபம் நேசக் கட்சியினருக்கு அப்பொழுது அவசியமாயிருந்தது.

இன்னொரு விஷயம். ஐரோப்பிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பிரிட்டிஷாருடைய யுத்த தளவாடங்களில் ஒருவித பலக் குறைவு ஏற்பட்டிருந்தது. அதாவது, சத்துருக்களின் கப்பல்களை உடைத்தெறிவதற்காக வெடி குண்டுகள் உபயோகிக்கப் பட்டனவல்லவா? இந்த வெடி குண்டுகளில் சேர்க்கப் பட்டு வந்த முக்கியமான ரஸாயனப் பொருள் ஒன்று குறைந்து விட்டது. இந்தப் பொரு

ளின் ரகசியத்தை ஜெர்மானியர்கள் மட்டுந்தான் தெரிந்து வைத்திருந்தார்கள். பிரிட்டிஷார் என்ன செய்வர்? 'இந்த ரகசியத்தைக் கண்டு பிடித்துச் சொல்லுங்கள்' என்று அப்பொழுதைய பிரிட்டிஷ் மந்திரிச் சபையானது, பிரிட்டிஷ் விஞ்ஞான சாஸ்திரிகளுக்கு விண்ணப்பம் செய்து கொண்டது. அந்தச் சமயம் மான்செஸ்டர் சர்வ கலாசாலையில் டாக்டர் செயிம் வீஸ்மான் (Dr. Chaim Weizmann) என்ற ரஸாயன போதகாசிரியன் ஒருவன் இருந்தான். இவன் யூதன். 'ஜையோனிய இயக்க'த்தின் தலைவன். இவன் மேற்படி ரஸாயனப்பொருளின் ரகசியத்தைக் கண்டு பிடித்துப் பிரிட்டிஷாருக்குத் தெரிவித்தான். நேசக் கட்சியினரின் வெற்றிக்கு இஃதொரு முக்கிய காரணமாயிருந்தது. இந்தப் பேருதவியைச் செய்த டாக்டர் வீஸ்மானுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சன்மானமளிக்க விரும்பினர். ஆனால் சமூக நலச் சிந்தை வாய்ந்த வீஸ்மான் இதனை மறுத்துவிட்டான். அதற்குப் பதிலாக பாலஸ்தீனத்தில் யூதர்கள் கொண்டாடும் உரிமைகளுக்கு நேசக் கட்சியினர் ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டான். யூதர்களின் சாஸனமென்று கருதப் படுகிற பால்பர் அறிக்கை (Balfour Declaration) பிறந்ததற்கு இஃதொரு முக்கிய காரணம்.

1917ம் வருஷம் பிரிட்டிஷ் மந்திரிச் சபையில் ஏ. ஜே. பால்பர் என்பவன் அந்நிய நாட்டு மந்திரியாயிருந்தான். இவன் 2-11-1917ல் பிரிட்டிஷ் மந்திரிச் சபையின் பூரண அங்கீகாரம் பெற்று, லார்ட் ராத்ஸ்

ஸில்ட் என்ற யூத முதலாளியின் மூலமாகப் பின்வரும் அறிக்கையை வெளியிட்டான்:—

பாலஸ்தீனத்தில் 'யூதர்களின் தேசிய ஸ்தலம்' ஸ்தாபிக்கப் படுவதை, அரசாங்கத்தார் ஆதரிப்பர். இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு வேண்டிய அநுகூலங்களைச் செய்வர். ஆனால் இதனால் தற்போது பாலஸ்தீனத்திலுள்ள யூதர்களல்லாத பிற சமூகத்தாருடைய பிரஜா உரிமைகளோ மத சம்பந்தமான உரிமைகளோ பாதிக்கக் கூடிய காரியங்கள் செய்யப் படமாட்டா. அல்லது இதனால் பிற நாடுகளில் யூதர்கள் அநுபவித்து வரும் உரிமைகளும் அரசியல் அந்தஸ்தும் பாதிக்கப்படமாட்டா.

இதுதான் பால்பர் அறிக்கை யென்று சொல்லப் படுவது. இந்த அறிக்கை சம்பந்தமாக நாம் இரண்டொரு விஷயங்களைத் தெளிவு படுத்திக் கொண்டு விட வேண்டும். முதலாவது, இந்த அறிக்கையானது, பிரிட்டிஷாருடைய தனிக் கொள்கையை மட்டும் வெளிப்படுத்துவதா யில்லை. இந்தக் கொள்கையை— அதாவது பாலஸ்தீனத்தில் யூதர்களின் உரிமையை அங்கீகரிக்கிற கொள்கையை—மற்ற எல்லா நேசக் கட்சியினரும் அங்கீகரித்தனர். பின்னர்க் கூடிய சமாதான மகா நாட்டிலும் இஃது ஊர்ஜிதம் செய்யப் பட்டது.

இரண்டாவது, இந்த பால்பர் அறிக்கை வெளியான பிறகு, உலகத்தின் பல பாகங்களி லிருந்தும்

யூதர்கள் வந்து பிரிட்டிஷ் படையில் போர் வீரர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டு நேசக் கட்சியினரின் சார்பாக யுத்தம் செய்திருக்கிறார்கள். பாலஸ்தீனத்தில் துருக்கியர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் நடைபெற்ற போராட்டத்தின் போது யூதர்கள் மட்டும் அடங்கிய ஒரு தனிப்படை பிரிட்டிஷார் பக்கம் இருந்து போர் புரிந்திருக்கிறது. இதனால் ஒரு சமயம் யூதர்கள் வசித்து வந்த இடத்திற்குக் கூட ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் யூதர்கள், பிரிட்டிஷ் தளகர்த்தர்கள் வியந்து பாராட்டும் வண்ணம் மிகத் தைரியமாகப் போர் புரிந்து பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் அபிமானத்தையும் அநுதாபத்தையும் பெற்று விட்டார்கள்.

மூன்றாவது, பாலஸ்தீனத்தைத் தன்னுடைய செல்வாக்குக்குட்பட்ட ஒரு சமூகத்தார் வசம் வைத்திருப்பது பிரிட்டனின் ஏகாதிபத்திய எண்ணத்திற்கு அநுகூலமாயிருந்தது. ஏனென்றால், பாலஸ்தீனத்தின் பூகோள அமைப்பானது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஸ்திரமாக இருப்பதற்குச் சௌகரியமான ஓரிடத்தில் இருக்கிறது. இதைப்பற்றி முதல் அத்தியாயத்தில் கூறியிருக்கிறோம்.

எனவே பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நலனுக்கும் பாலஸ்தீனத்தில் யூதர்களின் தேசீய ஸ்தலம் ஸ்தாபனமாவதற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்பது நன்கு புலனாகிறது. மெனாஷெம் உஸ்ஸிஷ்கின் என்ற பிரபல ஜைனியத் தலைவன் ஒருவன்,

'பாலஸ்தீன் ரெவ்யு' என்ற பத்திரிகையில் 1936ம் வருஷம் பின் வருமாறு எழுதி யிருக்கிறான்:—

பாலஸ்தீன முழுவதும் அராபியர் வசமாகி விட்டால், சீக்கிரத்தில் பிரிட்டிஷார், எகிப்தி லிருந்து மெது மெதுவாக விலகிக் கொண்டிருப் பது போல் பாலஸ்தீனத்தி லிருந்தும் விலகிக் கொள்ள வேண்டியதுதான்! பாலஸ்தீனம் யூதர் வசமாகி விட்டால், யூதர்களுக்கும் பிரிட்டிஷா ருக்கும் நெருங்கிய அரசியல் தொடர்பு ஏற் பட்டுவிடும்.

## III

# அராபியர்களின் தேசிய இயக்கம்

ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னர் அராபியா, பாலஸ்தீனம், சிரியா முதலிய நாடுகள் துருக்கிய ஏகாதிபத்தியத்துக்குட் பட்டிருந்தன வல்லவா? இந்தப் பிரதேசங்களிலுள்ள அராபியர்கள், துருக்கிய சாம்ராஜ்யத்தினின்று விடுதலையடைய வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வந்தார்கள். இவர்களிடையே தேசீய உணர்ச்சியானது வலுத்து வந்தது. இந்த உணர்ச்சியின் வெளித்தோற்றந்தான் 1911ம் வருஷம் பாரிஸில் கூடிய அராபிய காங்கிரஸ். ஆனால் இந்தத் தேசிய இயக்கமானது, அராபியர்களில் படித்த வகுப்பாரிடையே மட்டுந்தான் பரவி யிருந்தது. பாமர ஜனங்கள், இந்த இயக்கத்தில் தங்களைச் சம்பந்தப் படுத்திக் கொள்ளவில்லை. படித்த வகுப்பாரும் இதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளவில்லை. இங்ஙனம் ஒரு சிறு கூட்டத்தாரிடையே தேசிய உணர்ச்சி பரவி யிருந்ததைக்கூட அப்பொழுதைய துருக்கிய அரசாங்கம் விரும்பவில்லை. சில அடக்கு முறைகளைக் கையாண்டது. இந்த நிலையில் ஐரோப்பிய யுத்தம் ஏற்பட்டது. துருக்கியின் நிருவாகத்தி லிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கு இந்த யுத்தத்தை

அராபியர்கள் நல்ல சந்தர்ப்பமாக உபயோகித்துக் கொண்டார்கள். இதற்கு பிரிட்டனும் உதவியா யிருந்தது. துருக்கிக்கு விரோதமாக அராபியர்களைக் கிளப்பி விடுவதில் பிரிட்டிஷார் சிரத்தை காட்டினர். டி. இ. லாரென்ஸ் என்பவன், பிரிட்டனின் கையாளா யிருந்து துருக்கிக்கு விரோதமாக அராபியர்களி டையே பிரசாரஞ் செய்து வந்தான். அதனோடு அவர்களுடைய சுதந்திர ஆவலையும் அதிகரிக்கச் செய்தான். எப்படியும் துருக்கிக்கு ஆதரவாக அராபியர்கள் இருக்கக் கூடாதென்பது பிரிட்டனின் கவலையா யிருந்தது.

1915ம் வருஷம், அப்பொழுது எகிப்தின் ஹை கமிஷனரா யிருந்த ஸர் ஹென்ரி மக்மோஹன் என்ப வன் மூலமாக, மெக்கா நகரத்தின் அப்பொழுதைய ஷெரிப்பாக (அதிபதியாக) இருந்த ஹுஸேனுக்கு பிரிட்டன் கொடுத்த வாக்குறுதியின் மூலம், அராபிய சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது. இந்த அங்கீகார மானது ஓர் ஒப்பந்தத்தின் மூலம் ஊர்ஜிதம் செய்யப் பட்டது. இது அராபியர்களுக்கு ஒருவித உற்சா கத்தையும் நம்பிக்கையையும் உண்டு பண்ணியதோடு கூட, பிரிட்டனிடத்தில் ஒரு நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தி வைத்தது. மேற்படி ஒப்பந்தத்தில் பாலஸ்தீனமும், சுதந்திர அராபியாவில் சேர்க்கப் பட்டிருக்கும் என்று குறிப்பாகச் சொல்லப்படவில்லை. பாலஸ்தீனம் ஒரு தனி நாடாக இல்லாமையினாலும், அராபியாவுக்குட்பட்ட பிரதேசமா யிருந்தபடியா லும், எப்பொழுது அராபியாவின் சுதந்திரம் அங்கீ

கரிக்கப்பட்டதோ அப்பொழுதே அதற்குட்பட்ட பாலஸ்தீனமும் தங்களுடைய சுவாதீனத்தில்தான் இருக்குமென்றும் அராபியர்கள் நம்பினார்கள்.* பின்னர், பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள், இந்த அராபிய சுதந்திர ஒப்பந்தத்திற்கு வியாக்கியானம் செய்ததும், இதனின்றும் பாலஸ்தீனம் விலக்கப்பட்டதும், அராபியர்களிடையே பெரிய ஆத்திரத்தைக் கிளப்பி விட்டன. பாலஸ்தீன அராபியர்களின் தலைவருள் ஒருவனான அவுனி பே அப்துல் ஹாதி என்பவன் பின்வருமாறு கூறுகிறான் :—

> கிரேட் பிரிட்டனைப் பொறுத்த மட்டில் அதன் எல்லா வாக்குறுதிகளும் ஒப்பந்தங்களும், சந்தர்ப்பம், தன்னலம் இவைகளை யொட்டியே இருக்கின்றனபோலும். பிரிட்டிஷ் அரசாங்கத்தார், தங்களுடைய ஒப்பந்தங்களை, தேவைக்குத் தகுந்தாற் போல் மாற்றிக் கொள்ளவோ, அல்லது அதனைத் திருத்தவோ, அல்லது அதற்குப் புது வியாக்கியானம் செய்யவோ தயாரா யிருக்கிறார்கள்.

பிரிட்டிஷாருடைய வாக்குறுதிக்கு இங்ஙனம் பங்கம் ஏற்பட்டு விடவே, அராபியர்களின் தேசீய இயக்கமானது, பிரிட்டிஷாருக்கு விரோதமான ஒரு கிளர்ச்சியாக மாறி விட்டது. 1919ம் வருஷம் சிரியா, பாலஸ்தீனம், ஈராக் முதலிய நாடுகள் பிரிட்டிஷ்

---

* இதனை பீல் கமிஷன் அறிக்கையும் (Peel Commission Report) வலியுறுத்திக் கூறுகிறது. மேற்படி அறிக்கையின் 42-ம் பக்கம் பார்க்க.

ராணுவ ஆக்ரமிப்பின் கீழ் இருந்த காலத்தில், இந்த நாடுகளின் நிலைமையைப்பற்றி விசாரித்து வரும்படி அமெரிக்கக் குடியரசின் பிரசிடெண்டான வில்ஸன், அமெரிக்க அறிஞர்கள் அடங்கிய ஒரு சிறு கமிஷனை அனுப்பினன். இந்தக் கமிஷன் வெளியிட்ட அறிக்கையில், அராபியர்கள், பாலஸ்தீனத்திற்குப் பூரண சுதந்திரம் வேண்டுமென்று கோருகிறார்களென்றும், இதை பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கு எடுத்துக்காட்டினல், அவர்கள் பால்பர் அறிக்கையைத் திருப்பி எடுத்துக் காட்டி, இந்த அறிக்கையிலே கண்ட உறுதியை மீறி, பாலஸ்தீனத்தை எவ்வாறு அராபியர்கள் வசம் ஒப்புவித்து விட முடியுமெனக் கேட்கிறார்களென்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எனவே, ஐரோப்பிய யுத்தம் முடிவுபெற்ற பிறகு, அராபியர்களின் சுதந்திர பாலஸ்தீனம் உருக்கொண்டு எழுவதற்குப் பதிலாக, 'யூதர்களின் தேதிய ஸ்தல' மொன்றை பாலஸ்தீனத்தில் ஸ்தாபிக்க வேண்டு மென்ற நோக்கத்தோடுகூடிய 'மாண்டேடரி' நிருவாகத்திற்குட்பட்ட பாலஸ்தீனம் தோன்றியது. 'யுத்தத்திற்கு முன்னர் துருக்கியர்களின் ஆதீனத்திற்குட் பட்டிருந்தோம்; இப்பொழுது பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கிறோம்' என்றும், இந்த ஆதிக்கத்தை ஸ்திரப்படுத்துவதற்காகவே இந்த 'மாண்டேடரி' நிருவாகம் ஏற்படுத்தப் பட்டிருக்கிற தென்றும் பாலஸ்தீன அராபியர்கள் நம்பி விட்டார்கள். யுத்த சமயத்தில் பிரிட்டிஷார் கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட்டனவே யென்பது இவர்கள் மனத்தில்

அதிகமாகப்படவில்லை. ஆனால் தாங்கள் கொண்டிருந்த தேசிய அபிலாஷைகளெல்லாம் பயனற்றுப் போய் விட்டனவே யென்றுதான் வருந்தினார்கள்; கனன் றெழுந்தார்கள்.

பால்பர் அறிக்கை வெளியான காலத்திலிருந்து, அதனை அராபியர்கள் எதிர்த்து வந்திருக்கிறார்கள். ஒரே ஒரு முறைதான்—அதாவது 1919ம் வருஷம்—அப்பொழுது அராபியத் தலைவனென்று அங்கீகரிக்கப் பட்ட எமிர் பெய்ஸலும், யூதர்களின் தலைவனான டாக்டர் வீஸ்மானும் ஒருவித ஒப்பந்தத்திற்கு வந்தார்கள். சுதந்திர ஐக்கிய அராபிய ராஜ்யம் ஸ்தாபிக்கப் படவேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் பால்பர் அறிக்கையை இருசாராரும் அங்கீகரிப்பதாகவும், பாலஸ்தீனத்தில் யூதர்கள் தாராளமாக வந்து குடியேறுவதை ஏற்றுக் கொள்வதாகவும் இந்த ஒப்பந்தம் கூறியது.

பின்னர் 1920ம் வருஷம் மார்ச் மாதம் அராபியத் தலைவர்கள் ஒன்றுகூடி, மேற்படி பெய்ஸலை சிரியாவுக்கும் பாலஸ்தீனத்திற்கும் சேர்ந்து அரசனைத் தெரிந்தெடுத்தார்கள். ஆனால் ஆறுமாதங்களுக் குப் பிறகு சிரியாவின் மீது ஆதிக்கஞ் செலுத்த விரும்பிய பிரெஞ்சு அரசாங்கம், பெய்ஸலை அப்புறப் படுத்திவிட்டது. இதனால், அராபியர்களின் சார்பாக பால்பர் அறிக்கையை பெய்ஸல் அங்கீகரித்துக் கொண்டது பயனற்று விட்டது. இந்த ஒப்பந்தத் தைப்பற்றி அராபியர் யாருமே சிந்தனை செய்யவில்லை,

இதனை ஒரு முக்கிய விஷயமாகவும் அவர்கள் கருத வில்லை.*

பால்பர் அறிக்கையை எதிர்த்துவந்த அராபியர்கள், பாலஸ்தீனத்தில் ஏற்பட்ட 'மான்டேரி' அரசாங்கத்திற்கு விரோதமாகவும் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். இந்தக் கிளர்ச்சி பல சமயங்களில் பெரிய கலகங்களாகப் பரிணமித்து அநேக உயிர்ச் சேதங்களையும் பொருள் நஷ்டத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. இதைப்பற்றி நாம் ஆராயு முன்னர் அராபியர்களின் தேசிய இயக்கத்தைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம்.

பிரிட்டிஷாரிடத்திலும் யூதர்களிடத்திலும் சுயநலங்காரணமாகத் துவேஷங் கொண்ட ஒரு சில சோம்பேறி பணக்காரர்களால் தூண்டிவிடப்பட்டதே இந்த அராபிய தேசியக் கிளர்ச்சியென்றும், இவர்கள், ஒன்றுந் தெரியாத அராபிய ஏழை விவசாயிகளைப் பயமுறுத்தித் தவறான வழியில் அழைத்துச் செல்கிறார்களென்றும் ஒரு சிலர் பிரசாரஞ் செய்கின்றனர். இங்ஙனம் பிரசாரஞ் செய்வோர் யார், இவர்களுடைய நோக்க மென்ன, சுதந்திர தாகத்தினால் தவித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நாட்டிலும்

---

* பெய்ஸல் பின்னர் (23-8-1921) ஈராக் என்று அழைக்கப்படுகிற மெஸொ பொடேமியா நாட்டின் அரசனாக்கப்பட்டான். இவனுடைய பெரு முயற்சியின் பேரில், 1932ம் வருஷம், ஈராக் நாடு சர்வ தேச சங்கத்தில் ஓர் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இவன் 8-9-1933ல் ஸ்விட்ஜர்லாந்தில் இறந்து போனான்.

இத்தகைய பிரசாரஞ் செய்யப் படுகின்றனவா வென்ற நுணுக்கங்களைப் பற்றி நாம் இங்கு ஆராய வேண்டுவதில்லை.

பாலஸ்தீனத்தில் தேசீய இயக்கத்தோடு மத உணர்ச்சியும் பிணைக்கப்பட்டிருக்கிறது. இதனால் மதத் தலைவர்களும், இவர்களுக்கு அநுசரணையா யிருக்கிற சில நிலச் சுவான்தார்களும் முதலாளிகளும், இந்த இயக்கத்தின் தலைவர்களா யிருக்கிறார்க ளென்பது உண்மைதான். எந்த ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகிய இவர்களுடைய உழைப்பின் பயனாகத் தாங்கள் பணஞ் சம்பாதிக்கிறார்களோ, அந்த விவசாயிகளும், தொழிலாளர்களும் யூதர்களோடு தொடர்பு கொண்டு விட்டால், தங்களுடைய செல்வாக்குக் குறையுமே யென்ற எண்ணம் இந்த அராபிய நிலச் சுவான்தார்களுக்கும் முதலாளிகளுக்கும் இருக்கலாம். இதற்காக இவர்கள், ஏழை விவசாயிகளை அச்சுறுத்தியோ, வேறு விதமாக நெருக்கியோ தேசீய இயக்கத்தில் கலந்து கொள்ளுமாறு செய்திருக்கலாம். இந்த மாதிரியான உதாரணங்களை ஏக தேசமாகத்தான் காட்ட முடியும். ஆனால் பொதுவாகப் பார்க்கிற போது, பாலஸ்தீன அராபியர்கள் தேசப்பற்று நிரம்பியவர்கள். தேசம் ஒன்று தான் இவர்களுக்குத் தெரியும். அரசியல் சம்பந்தமான நுணுக்கங்கள் இவர்களுக்குத் தெரியாது; தெரிந்து கொள்ளவும் இவர்கள் விரும்புவதில்லை. தேசத்திற்காக, தங்கள் தலைவர்கள் சொல்கிறபடி எதையும் செய்ய இவர்கள் சித்தமா யிருக்கிறார்கள். அரசியல்

கட்சியினராகத் தங்களை வகுத்துக்கொண்டு, அந்தக் கட்சிக் கொள்கைக்காக இயக்கத்தை நடத்துவதென்பதோ, கிளர்ச்சி செய்வதென்பதோ இவர்களுக்குத் தெரியாது. கட்சி அபிமானமென்பதை இவர்கள் அறிய மாட்டார்கள். எஜமான விசுவாசம் ஒன்றுதான் இவர்களுக்குத் தெரியும். ஆனால் அந்த எஜமான விசுவாசமானது, தேச நலன் ஒன்றனையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும். இதனால் ஏழைகள், பணக்காரர்கள் என்ற வேற்றுமையின்றி, கிராம வாசிகள், நகர வாசிகள் என்ற வித்தியாசமில்லாமல் எல்லாரிடத்திலும் தேசீய உணர்ச்சியானது வலுத்து நிற்கிறது. இல்லாவிட்டால், சென்ற 1936ம் வருஷத்திலிருந்து, பிரிட்டிஷ் படைகளுடன் இடைவிடாத போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்குமா? 1929ம் வருஷம் பாலஸ்தீனத்தைச் சுற்றிப் பார்த்த ஒரு பிரிட்டிஷ் கமிஷன்*, அறிக்கையில் பின் வருமாறு கூறுகிறது:—

> அராபிய விவசாயிகள், அரசியலில் நேர்முகமான சிரத்தை கொள்வதில்லையென்று சொல்லப் படுவதற்கு, எங்களுடைய அநுபவத்தில் எவ்வித ஆதாரமும் காணப்படவில்லை. நாங்கள் கிராமங்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்தபோது எங்களை ஆரவாரத்துடன் வரவேற்று, எங்களுக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தார்கள். இந்த உபசாரப் பத்திரங்களைப் படித்

* Shaw Commission.

துப் பார்த்தால், கிராம ஜனங்களும் விவசாயி களும், 'யூதர்களின் தேசிய ஸ்தலம்' அமைக் கப் படுவதனால் உண்டாகும் விளைவுகளைப் பற்றிக் கவலையும் சிரத்தையும் கொண்டிருக்கிறார்கள் என்பது நன்கு தெரிகிறது. இங்ஙனமே பாலஸ் தீனத்தில் சுய ஆட்சி ஸ்தாபனங்கள் அபி விருத்தி செய்யப் படுவதைப் பற்றியும் ஊக்கங் காட்டுகிறார்கள். அராபிய விவசாயிகளும் கிராம ஜனங்களும், ஐரோப்பாவி லுள்ள அநேக ஜனங் களை விட அதிகமான அரசியல் மனப்பான்மை யைக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

பத்து வருஷங்களுக்கு முன்னால் எழுதப்பட் டவை இந்த வாக்கியங்கள். அப்பொழுதே, பாலஸ் தீனத்தின் தேசிய இயக்கமானது பொதுஜன இயக்க மாக இருந்திருக்கிறது. இப்பொழுது கேட்க வேண்டுமா?

'யூதர்களின் தேசிய ஸ்தலம்' அமைக்கப்படு மென்ற நோக்கத்தோடு பாலஸ்தீன அரசாங்க நிரு வாகம் நடைபெறத் தொடங்கியது முதல், அராபியர் களிடையே தேசிய உணர்ச்சியானது வலுத்து நிற்பா னேன்? யூதர்களின் குடியேற்றத்தை இவர்கள் என் மறுக்க வேண்டும்? யூதர்கள் மீது கொண்ட துவேஷம் மட்டுந்தான் இதற்குக் காரணமா? அப்படி காரணங் கற்பிப்பது, அராபியர்களின் தேசிய உணர்ச்சியை அவமானப் படுத்துவதாகும். 'யூதர்களின் தேசிய

ஸ்தல' ஸ்தாபனத்தினால் அராபியர்களின் பொருளாதார வாழ்க்கையே மாறி விட்டது. பொதுவாக பாலஸ்தீனத்தின் பொருளாதார நிலைமையில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டு விட்டது. இதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். ஏனென்றால் இதுவே அடிப்படையான பிரச்னை.

# IV

## யூதர் குடியேற்றத்தின் விளைவு

**1919**ம் வருஷத்திலிருந்து 1938ம் வருஷத்திற்குள் பாலஸ்தீனத்தில் சுமார் மூன்று லட்சம் யூதர்கள் குடியேறி யிருக்கிறார்கள். இவர்கள் அங்க ஹீனர்களோ, வயதான கிழவர்களோ இல்லை. உழைக்கிற சக்தியும், இடத்தையும் பொருளையும் சந்தர்ப்பம் பார்த்து உபயோகிக்கிற திறமையும் நிரம்பப் பெற்றவர்கள். இவர்கள், தாங்களாக மட்டும் வரவில்லை. சுமார் எட்டு கோடி பவுன் மூலதனத்தையும் கூடவே கொண்டு வந்தார்கள். உழைப்பும் பணமும் ஒரு சமூகத்தாரிடத்தில் ஒன்று சேர்ந்திருக்குமானால் அந்தச் சமூகத்தார் எந்த நாட்டிலும், எத்தகைய தர்மசங்கடமான நிலையிலுங்கூட வெற்றிகாண முடியுமல்லவா? இவர்கள், தங்களுக்கு அநுகூலமான சந்தர்ப்பங்கள் ஏற்படவில்லையென்று சும்மாயிருக்க மாட்டார்கள்; சந்தர்ப்பங்களைச் சிருஷ்டி செய்து கொள்வார்கள். பாலஸ்தீனத்தில் குடியேறிய யூதர்கள் இம்மாதிரியினரே.

யூதர்களின் குடியேற்றத்திற்கு முன்னர், அராபியர்கள், ஏதோ அற்பசொற்பமாக, தங்களுடைய அன்றாட ஜீவனத்திற்குப் போதுமான அளவு சிறு

சிறு துண்டு நிலங்களில் விவசாயஞ் செய்து வந்தார்கள். இந்த நிலங்களும் இவர்களுக்குச் சொந்தமா யிராது. நிலச் சுவான்தார்களிடமிருந்து குத்த கைக்கோ, வாடகைக்கோ பெறப்பட்டதாக இருக் கும். மகசூலில் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பாகம் முதல், மூன்றில் ஒரு பாகம் வரை, நிலச் சொந்தக் காரர்களுக்குக் கொடுத்து விடுவார்கள். இங்ஙனம் இவர்கள் ஒழுங்காகக் கொடுத்துக் கொண்டுவந்த போதிலும், சாசுவதமாக ஒரே நிலத்திலேயே சாகு படி செய்து கொண்டிருக்கலாம் என்ற நிச்சயம் இராது. நிலச் சொந்தக்காரர்கள், தங்கள் இஷ்டப்படி நிலத்தைப் பிரித்தோ மாற்றியோ வேறு யாருக் கேனும் கொடுத்து விடுவார்கள். இங்ஙனம் விவசாயி கள் தங்கள் உழைப்பின் ஊதியத்தில் ஒரு பகுதியை நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுத்து விடுவதோடு, தாங்கள் கடன் பட்டிருக்கும் லேவாதேவிக்காரனுக்கு ஒரு பகுதியைக் கொடுத்து விடுவார்கள். விவசாயிக் குத் தேவை இருக்கிறதோ இல்லையோ, தேவையை உண்டுபண்ணியோ, அதிகப் படுத்தியோ விடுகிறான் லேவாதேவித் தொழில் நடத்துகிறவன். இந்தச் சாபக்கேட்டிற்கு பாலஸ்தீன அராபிய விவசாயிகள் புறம்பாகவில்லை.

விவசாயம் இந்த நிலையிலிருக்க, கைத்தொழில் கள் இல்லவே இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். பாரம்பரையாக வந்த சில குடிசைத் தொழில்கள் விவசாயிகளின் மற்றத் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தன.

யூதர்கள் குடியேற்றத்திற்குப் பின்னர், விஸ்தீரணமான பிரதேசங்களில் ஏகபோக விவசாயம் நடைபெற்றது. இயந்திரங்களை வைத்து நடத்தப் பெற்ற கைத்தொழிற் சாலைகள் தோன்றின. பெரும் பற்றான வியாபாரம் நடைபெறத் தொடங்கியது. இவைகளோடு, அராபியர்களின் சாதாரண விவசாயமும் குடிசைத் தொழிலும் போட்டி போட முடியுமா?

•

குடியேறின யூதர்கள், பெரும்பற்றான விவசாயத்தைச் செய்வதற்காக, அராபிய நிலச்சுவான்தார்களிடமிருந்தும், தனிப்பட்ட விவசாயிகளிடமிருந்தும் நல்ல விலை கொடுத்து, சாகுபடி செய்யப்படுகிற விவசாய நிலங்களையும், காம்பாயிருந்த பிரதேசங்களையும் வாங்கினார்கள். விற்ற நிலச்சுவான்தார்கள், தங்கள் நிலத்தோடு ஒட்டிவாழாமல், நிலத்திலிருந்து கிடைக்கிற வருமானத்தை வைத்துக்கொண்டு நகரங்களில் ஆடம்பரமாக வாழ்ந்து வந்தவர்கள். இவர்கள், தங்கள் நிலங்களுக்கு நல்ல விலை கிடைக்கிறபோது, அவற்றை விற்காம விரும்பார்களா? தங்களுடைய நிலத்தை நம்பி வாழ்க்கையை நடத்தி வந்த விவசாயிகளைப்பற்றி இவர்களுக்கு என்ன கவலை?

யூதர்கள் வாங்கிக்கொண்ட நிலங்களில் அராபியர்கள் இனி விவசாயஞ் செய்வதெப்படி? அநேகருக்கு ஜீவனோபாயமே இல்லாமற் போய்விட்டது. ஒரு சிலர் விவசாயக் கூலிகளாய் அமர்ந்து வேலை செய்தார்கள். இன்னுஞ் சிலர், நகர்ப் புறங்களுக்குச்

சென்று புதிதாக யூதர்களால் ஸ்தாபிக்கப்பட்ட தொழிற்சாலைகளில் கூலி யாட்களாய் அமர்ந்தார்கள். ஆனால் இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கூலியோ மிகச் சொற்பம்.

இது நிற்க. யூதர்களின் கட்சியைச் சிறிது கேட்போம். தாங்கள் எந்த நிலங்களை விவசாயத்திற்கென்று சுவாதீனப்படுத்திக் கொண்டார்களோ, அவை தங்கள் சுவாதீனமாவதற்கு முன்னர் வெறுஞ் சதுப்பு நிலமாகவோ அல்லது கரம்பாகவோ இருந்தனவென்றும், விவசாயஞ் செய்யப்பட்டு வந்த நிலங்களைத் தாங்கள் அதிகமாகச் சுவாதீனப்படுத்திக் கொள்ள வில்லை யென்றும், அப்படி சுவாதீனப் படுத்திக் கொண்டிருந்தாலும் அவைகளுக்கு நல்ல விலை கொடுத்திருப்பதாகவும், சாகுபடி நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட அராபிய விவசாயிகளுக்கு வேறு நிலமோ, போதிய பணமோ நஷ்டஈடாகக் கொடுக்கப்பட் டிருக்கிறதென்றும் யூதர்கள் கூறுகிறார்கள்.

இவற்றை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அராபிய விவசாயிகள் இதனால் திருப்தி யடையவில்லையே. தாங்கள் பரம்பரையாகச் சாகுபடி செய்து வந்த நிலங்களி லிருந்து வெளியேற்றப்பட்டதுதான், அவர்களுக்கு அதிக அதிருப்தியை அளித்திருக்கிறது. எந்த நிலத்தில் தலைமுறை தலைமுறையாகத் தங்கள் வியர்வையைப் பாய்ச்சி அதிலிருந்து கிடைக்கிற தானியங்களைக் கொண்டு வயிறு வளர்த்து வந்தார்களோ. அதிலிருந்து வெளியேறிச் செல்வ

தென்றால்,—அதிலும் பிறருடைய பலவந்தத்தின் பேரில்—யாருக்குமே கஷ்டமாகத்தானிருக்கும். மற்றும் இவர்களுக்கு நஷ்ட ஈடாகக் கொடுக்கப் பெற்ற மாற்று நிலங்களோ, விவசாயத்திற்கு லாயக் கில்லாதவைகளாகவோ போதுமானவையாகவோ இல்லை. பணமாக நஷ்டஈடு பெற்றவர்களோ, அதனால் எவ்வித பலனையும் அநுபவிக்க முடியவில்லை. இவர் களுக்குக் கடன் கொடுத்திருந்த லேவாதேவிக்காரர் கள் மொத்தமாக அதனை வாங்கிக்கொண்டு போய் விட்டார்கள்.

அராபியர்களுக்கு மற்றொரு பயமும் ஏற்பட் டிருக்கிறது. இவர்களின் ஜனத்தொகையானது, 1922ம் வருஷத்தில் ஆறரை லட்சமாயிருந்தது. இது 1936ம் வருஷத்தில் பத்து லட்சமாகி விட்டது. இந்த நிலையில், தங்களுடைய பிதிரார்ஜிதமான நிலங்கள் கொஞ்சம் கொஞ்சமாக யூதர்கள் வசம் போய்விட்டால், நாளாவட்டத்தில் தங்க ளுக்குச் சொந்தமாயுள்ள சராசரி நிலங்களின் ஈவு குறைந்து போகுமேயென்று இவர்கள் அஞ்சுகிறார் கள். 'விவசாய முறையில் ஏதேனும் மாற்றஞ் செய்யப்பட்டாலன்றி, ஜனத்தொகை அதிகமாகி வரும் அராபியர்களின் ஜீவனத்திற்குப் போதிய அளவு நிலம் இராது' என்று பீல் கமிஷன் அறிக்கை யும் கூறுகிறது.

அராபிய விவசாயிகளின் நிலைமை இப்படியிருக்க நகரங்களிலே வசிக்கும் அராபியத் தொழிலாளர் களின் நிலைமை யென்ன? சுமார் இரண்டு லட்சம்

அராபியர்கள், நகரங்களில் கூலிவேலை செய்து அற்ப ஜீவனம் நடத்துகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் அரசாங்கத்தாருடைய மராமத்து இலாகா, ரெயில் வேக்கள், துறைமுகங்கள் முதலியவற்றில் வேலை செய்கிறார்கள். இன்னுஞ் சிலர், யூதர்களின் தொழிற் சாலைகளிலும் அராபியர்களின் தொழில் ஸ்தாபனங் களிலும் வேலைக்கமர்ந்திருக்கிறார்கள். யூதத் தொழி லாளர்களுக்குக் கொடுக்கப் பெறும் கூலி விகிதத்தை விட இவர்களுக்குக் கொடுக்கப் பெறும் கூலி விகிதம் குறைவு. அறிவின் உபயோகத்திற்கு அவசியமில்லாத வேலைகளில் அராபியர்களே பெரும்பான்மையோராக இருக்கின்றனர். இவர்களுக்குக் கொடுக்கப் பெறும் கூலி விகிதமானது சுற்றுப் புறமுள்ள ஈராக், சிரியா முதலிய நாடுகளில் கொடுக்கப்பெறும் கூலிவிகிதத்தை விட அதிகமே யானாலும், இவர்களின் வாழ்க்கைச் செலவானது வருமானத்தைவிட அதிகமாயிருக்கிறது. உதாரணமாக ஹைபா என்ற துறைமுகப் பட்டினத் தில் வீட்டு வாடகை மிக அதிகம். ஒரு வீட்டில் ஓர் அறைக்கு மட்டும் சுமார் இருபது ரூபாய் விகிதம் மாத வாடகை செலுத்த வேண்டும். அராபியத் தொழிலாளி ஒருவனுடைய தினசரி கூலி சராசரி ஒரு ரூபாய்க்கு மேல் இரண்டு ரூபாய்க்குட்பட்டுத்தா னிருக்கிறது. இந்த வருமானத்தில் ஏறக் குறைய பாதி பாகத்தை வீட்டு வாடகைக்கு மட்டும் செல வழித்து விட்டால் அவனுடைய மற்றக் குடும்ப காரியங்கள் நடப்பதெங்ஙனம்? மேற்படி ஹைபா நகரத்தில் சுமார் எண்ணூறுக்கு மேல் பட்ட அரா

பியத் தொழிலாளர்கள் தங்கள் குடும்பங்களோடு நகருக்குப் புறம்பான ஓரிடத்தில் தகரக் கொட்டகைகள் அமைத்துக் கொண்டு வசிக்கிறார்கள். மற்றும் அராபியத் தொழிலாளர்களை ஒருமுகப் படுத்திச் செலுத்தக் கூடிய தொழிற் சங்க ஸ்தாபனங்கள் எதுவும் இல்லை. அப்படி ஏதேனும் தொழிற் சங்க ஸ்தாபன முயற்சி செய்யப் படுமானால் அதனை அரசாங்கத்தார் உடனே அடக்கி விடுகின்றனர். யூதர்களுக் கென்று தனியான ஒரு தொழில் ஸ்தாபன மிருக்கிறது. இதற்கு 'ஹிஸ்தாத்ருத்' (Histadruth) என்று பெயர். இதனிடமிருந்தும் அராபியத் தொழிலாளர்கள் எவ்வித உதவியும் பெறுவதில்லை. இதற்கு மாறாக இவர்கள் மேற்படி ஸ்தாபனத்தைச் சந்தேகிக்கிறார்கள். இன்னும் இதிகமான யூதர்களை பாலஸ்தீனத்தில் குடி புகுத்துவதற்கும் தங்களுக்கு வேலை கிடைக்காமற் செய்து விடுவதற்குமே மேற்படி 'ஹிஸ்தாத்ருத்' ஏற்பட்டிருப்பதாக அராபியத் தொழிலாளர்கள் நம்புகிறார்கள்.

இது நிற்க, யூதர்களின் குடியேற்றத்தினால் சில அராபியர்கள் நன்மையும் அடைந்திருக் கிறார்கள். யூதர்களுக்கு நல்ல விலைக்குத் தங்கள் நிலங்களை விற்றதனால், இவர்களிற் பலர் எதிர்பாராத வண்ணம் பணக்காரர்களாகி விட்டனர். அராபியர்கள் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருள்களில் சுமார் ஒரு கோடி பவுன் பெருமானவற்றை யூதர்கள் வருஷந்தோறும் வாங்குகிறார்கள். இந்த ஒரு கோடி பவுனும் அராபியர்களில் ஒரு சிலருடைய பொருளாதார அந்தஸ்தை உயர்த்திக் கொடுக்கிறதல்லவா? இந்தக் காரணங்களி

னல், பாலஸ்தீனத்தில் ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு அராபிய முதலாளி இனம் ஒன்று தோன்றி விட்டது. சிறப்பாகக் கடலோரப் பிரதேசங்களில் யூதர்களுக்குப் போட்டியாக அராபியர்களும் பெரிய பெரிய பழத்தோட்டங்கள் வைத்து அதில் வியாபாரம் செய்கிறார்கள். 1931ம் வருஷத்தில் அராபியர்களுக்குச் சொந்தமாக 14,740 ஏக்கரா விஸ்திரணமுள்ள ஆரஞ்சு, திராட்சை முதலியன விளையும் பழத் தோட்டங்கள் இருந்தன. 1935ம் வருஷத்தில் இவை 34,000 ஏக்கராவுக்குப் பெருகின. 1914ம் வருஷத் தொடக்கத்தில் அராபியர்களுக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் 1,235. 1936ம் வருஷத்தில் இவை 2,290க்குப் பெருகின. இங்ஙனம் பெருகி வரும் அராபிய முதலாளிஇன்மானது, தன்னைவிட தொழில் திறமையிலும் பணத்திலும் முற்போக்கடைந்துள்ள யூத முதலாளி இனத்தோடு அடிக்கடி போட்டி போட்டுக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. இதனால் முன்னது தேசிய மனப்பான்மை கொண்டதா யிருப்பதில் ஆச்சரிய மில்லை யல்லவா? தேசிய விடுதலை ஏற்பட்டால்தானே அந்நியர்களின் பொருளாதார ஆதிக்கம் குறையும்.

V

# யூதர்கள் சாதித்த தென்ன?

பாலஸ்தீனத்தில் யூதர்கள் குடியேறியதைப் பற்றியும், அவர்கள் அந்த நாட்டில் என்னென்ன காரியங்கள் சாதித்திருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் சிறிது கூறுவோம். பாலஸ்தீனத்தின் நிருவாகத்தைப் பிரிட்டன் ஏற்றுக் கொண்ட பிறகு, இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ள யூத முதலாளிகள், தங்களுடைய மூலதனத்தை பாலஸ்தீனத்தில் அதிகமாகக் கொண்டு போட்டார்கள். தங்களுடைய பூர்விக நாடான பாலஸ்தீனம் மீண்டும் தங்களுடைய உரிமை நாடாக்கப் பட்டதைக் கேட்டு மகிழ்ச்சி யடைந்து, பாலஸ்தீனத்திலேயே நிரந்தர வாசம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு, உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் அநேக யூதர்கள் வந்து குடியேறினார்கள். மத்திய ஐரோப்பிய நாடுகளில் யூத துவேஷம் வளர வளர பாலஸ்தீனத்தில் யூதர்களின் குடியேற்றமும் அதிகமாகிக் கொண்டு வந்தது. சிறப்பாக, ஹிட்லர் 1933ம் வருஷம் மார்ச் மாதம் ஜெர்மனியின் சர்வாதிகாரியான பிறகு பாலஸ்தீனத்தில் யூதர்களின் குடிப் பெருக்கம் அதிகம். உதாரணமாக,

| | |
|---|---|
| 1932ம் வருஷம் | 9,553 யூதர்கள் |
| 1933 ,, | 30,327 ,, |
| 1934 ,, | 42 359 ,, |
| 1935 ,, | 61,854 ,, |

பாலஸ்தீனத்தில் குடிபுகுந்திருக்கிறார்கள். இங்ஙனமே வருஷந்தோறும் சராசரி 50,000 யூதர்கள் விகிதம் குடி புகுவார்களானால் 1950ம் வருஷத்தில் அராபியர்களைவிட யூதர்களே பெரும்பான்மையோரான சமூகத்தினராகி விடுவரென்று ஓர் அறிஞன் கருதுகிறான்.

குடி புகுந்த யூதர்கள் மேனாட்டு சமுதாய அமைப்பை அப்படியே கொண்டு வந்து புகுத்தினார்கள். அதனோடு தங்கள் உழைப்பினாலும் திறமையினாலும், எந்தத் தொழிலில் பிரவேசித்தாலும் அதனை அபிவிருத்தி செய்தார்கள். ஆயிரம் பவுன் மூலதனமுள்ள எந்த யூதனும் தாராளமாகக் குடியேறலாம் என்ற விதி அநேக சிறிய பணக்காரர்களை பாலஸ்தீனத்தில் கொண்டு நிரப்பியது. இவர்கள் தனிப்பட்ட முறையில் வியாபாரம், விவசாயம் முதலியன செய்து வந்ததோடு கூட, பொதுவுடைமை முறையிலும் விவசாயம், வியாபாரம் முதலியன செய்து வந்தார்கள். சமுதாயத்திற்குப் பொதுவான விவசாய நிலங்கள், தொழில் ஸ்தாபனங்கள் முதலிய

வற்றைச் சுற்றி அநேக யூத நகரங்கள் நவீன நாகரிக முறையில் தோன்றி யிருக்கின்றன.*

ஜாபா நகரத்திற்கு வெளியில் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வெறும் மணற்காடாக இருந்த இடம் இப்பொழுது டெல்—அவீவ் (Tel-Aviv) என்ற சிறந்த யூத நகரமாக விளங்குகிறது. இதில் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் யூதர்கள் வசிக்கிறார்கள். இவை தவிர, யூத முதலாளிகள் பிரிட்டிஷ், அமெரிக்க முதலாளிகளின் துணை கொண்டு

* இந்தப் பொதுவுடமை விவசாய ஸ்தாபனங்கள் யூதர்களின் ஒழுங்கிற்கும், கட்டுப்பாட்டிற்கும் சிறந்த உதாரணங்களாய் விளங்குகின்றன. இவைகளுக்கு 'க்வூஸோ' (Kvutzot) என்று பெயர். இங்ஙனம் சுமார் 230 'க்வூஸோ'க்கள் இருக்கின்றன. ஒரு குடும்பத்தினரைப் போலவே இங்குள்ளவர்கள் வசிக்கிறார்கள். எல்லோருக்கும் பொதுவான சமையல், பொதுவான கடை, பள்ளிக்கூடம், புஸ்தகசாலை முதலியன இருக்கின்றன. எல்லாரும் சேர்ந்துதான் இங்கு வேலை செய்கிறார்கள். கூலிக்கு ஆட்களை அமர்த்துவது கிடையாது. அவரவர் திறமைக்கும் தேவைக்கும் தகுந்தபடி வேலை செய்ய வேண்டும் என்ற நியதி அநுஷ்டானத்தில் இருந்து வருகிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய உழைப்பை சமுதாயத்திற்குக் கொடுத்து அதற்குப் பதில் தங்களுடைய தேவைகளை அந்தச் சமுதாயத்திலிருந்தே பெறுகிறார்கள். சமுதாய அந்தஸ்து விஷயத்திலோ பொருளாதார நிலைமை காரணமாகவோ எவ்வித வேற்றுமையும் இங்குக் காண்பிக்கப்படுவதில்லை. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம அந்தஸ்தும் சம சுதந்திரமும் உண்டு. ஒவ்வொரு 'க்வூஸோ'விலும் சராசரி 100 பேருக்கு மேல் 700 பேர் வரையில் வசிக்கிறார்கள். இவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்று பணமாக்க 'மத்திய கூட்டுறவு ஸ்தாபனம்' ஒன்றிருக்கிறது. 'யூத தேசிய நிதி'யிலிருந்து இந்த 'க்வூஸோ'க்களுக்குப் பண வுதவி கிடைக்கிறதென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீனத்தின் இயற்கைப் பொருள்கள் பலவற்றைச் சுரண்டி வியாபாரப் பொருள்களாக விநியோகிக்கக்கூடிய வண்ணம் அநேக தொழில் ஸ்தாபனங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். 'டெட் ஸீ பொடாஷ் கம்பெனி'* 'பாலஸ்தீன் எலெக்ட்ரிக் கார்ப்பொரேஷன்'† 'நெஷர் ஸிமெண்ட் கம்பெனி'‡ ஆகிய இந்த மூன்றும் பாலஸ்தீனத்தின் பெரிய தொழில் ஸ்தாபனங்கள். இந்த மூன்றிலும் யூத, பிரிட்டிஷ், அமெரிக்க மூலதனம் சேர்ந்திருக்கிறது.

இந்தப் புதிய நகரங்களையும் தொழில் ஸ்தாபனங்களையும் எடுத்துக் காட்டி 'எங்களுடைய குடியேற்றத்தினால் பாலஸ்தீனத்தில் என்னென்ன சாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன பார்த்தீர்களா' என்று யூதர்கள் பெருமையாகப் பேசுகிறார்கள். இவர்கள் கூறும் வாதங்களில் சில வருமாறு:—

1 உலகனைத்தும் பொருளாதார மந்தத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் பாலஸ்தீனம் ஒன்றுதான் அதனால் பாதிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் எங்களுடைய வியாபாரத் திறமைதான்.

2 எங்கள் குடிப் பெருக்கத்தினால் தேசத்தின் செல்வ நிலை உயர்ந்திருக்கிறது.

---

* Dead Sea Potash Company.

† Palestine Electric Corporation.

‡ Nesher Cement Company.

3 நாங்கள் செய்யும் வியாபாரத்திலோ நடத்தும் தொழில்களிலோ அராபியருக்கு பாதகம் ஏற்படவில்லை. அதற்கு மாறாக சாதகமே ஏற்பட்டிருக்கிறது. எப்படியென்றால் எங்களின் தொழில் ஸ்தாபனங்கள் பெருகப் பெருக அராபியர்களுக்கு அதிகமான கூலிவேலை கிடைக்கிறது. அவர்களுடைய விவசாயப் பொருள்களுக்கும் நல்ல விலை கிடைக்கிறது.

4 நாங்கள் நவீன வைத்திய வசதிகளையும் சாஸ்திரீய விவசாய வசதிகளையும் பாலஸ்தீனத்தில் கொண்டு புகுத்தி யிருக்கிறோம்.

5 எங்களுடைய குடியேற்றத்தினால் அராபியர்களின் வாழ்க்கை அந்தஸ்து உயர்ந்திருக்கிறது.

இப்படி யெல்லாம் இவர்கள் கூறிக்கொண்டு வந்தபோதிலும், டெல்—அவீவ் நகரத்திற்கு வெகு சமீபத்தில்தான், ஆயிரக்கணக்கான அராபிய விவசாயிகள் மண் குடிசைகளிலும் மரப் பொந்துகளிலும் வசிக்கிறார்கள். யூதர்கள் வசிக்கிற புதிய ஜெருசலேம் நகரத்தைத் தாண்டி அராபியர்கள் வசிக்கும் பழைய ஜெருசலேம் நகரத்தைச் சென்று பார்த்தால் யாருக்குமே ஒரு திகைப்பு உண்டாகும். அராபிய விவசாயிகளின் அல்லது தொழிலாளர்களின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்தும் விஷயத்தில் யூதர்கள் எவ்வளவு சிரத்தை கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்விக்கு, மேலே கூறப்பட்ட காட்சிகள் மௌனமாகப் பதிலளிக்கின்றன.

பொதுவாகவே, அராபியர்களுடைய தேசிய உணர்ச்சிக்கு யூதர்கள் அவ்வளவு மதிப்புக் கொடுக்க வில்லையென்றுதான் சொல்ல வேண்டும். தங்களுக்கு விரோதமாக அராபியர்கள் காட்டும் எதிர்ப்பெல்லாம் வெறும் போலி எதிர்ப்பே என்பது இவர்கள் கருத்து. பாலஸ்தீனத்தில் யூதர்கள் கொண்டு புகுத்தி யிருக்கும் புதிய நாகரிகம், உயரிய' வாழ்க்கை அந்தஸ்து முதலியவைகளினால் தங்களுடைய செல்வாக்கு எங்குக் குறைந்துவிடுமோ வென்று அஞ்சும் சில அராபிய நிலச்சுவான்தார்கள், மதத்தலைவர்கள் முதலி யோருடைய தூண்டுதலின் பயனாகவே இந்த அராபியக் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிற தென்று யூதர்களுக்கு அநுதாபங் காட்டுகிற வேற்று நாட்டார் சிலர் கூட நினைக்கிறார்கள். என்ன விந்தை!

யூதத்தலைவர்கள் பேசும் பேச்சுக்களில் கூட, அராபிய உணர்ச்சிக்கு மதிப்புக் காட்டவில்லை. தாங் கள் அராபியர்களோடு சமரஸம் பேசத் தயாரா யிருப்பதாக மட்டும் இவர்கள் கூறுகிறார்கள். ஆனால் ஒரே ஒரு நிபந்தனையுடன். யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடிபுகும் உரிமையானது, இந்தச் சமரஸப் பேச்சுக் களினால் எவ்விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என் கிறார்கள். இதுதானே மூலாதாரமான பிரச்னை. இதில் அராபியர்கள் எளிதில் இணங்கிப் போவார்களா? 'அராபிய அரசியல்வாதிகளோடு சமரஸம் பேசுவ தென்பது நடைபெற முடியாத காரியம்' என்கிறான் யூதத்தொழிலாளர் கட்சித் தலைவர்களில் ஒருவன்.

1936 வருஷம், அகில உலக ஜையோனிய ஸ்தாபனத்தின் தலைவனான டாக்டர் வீஸ்மான் பின்வருமாறு கூறினான் :—

எங்கள் பொறுப்பை நன்கு உணர்ந்து கொண்டு, அராபியத் தலைவர்களுக்கு நாங்கள் கூறுவதென்னவென்றால், இன்று நாங்கள் சிறுபான்மையோராக இருக்கலாம்; நாளை நாங்கள் பெரும்பான்மை யோராகி விடலாம். இன்று நீங்கள் பெரும் பான்மையோராக இருக்கலாம்; நாளை நீங்களே சிறுபான்மையோராக விடலாம். பாலஸ்தீனத்திலே என்ன நடைபெற்றாலும் சரிதான்; நாங்கள் பிறரை ஆதிக்கம் செலுத்தவும் விரும்பவில்லை. பிறரால் ஆதிக்கம் செலுத்தப்படவும் விரும்பவில்லை.

# VI

## கலகங்கள்

பாலஸ்தீனத்தின் நிருவாகத்தை பிரிட்டனிடம் ஒப்புவிப்பது என்ற பேச்சு நேசக் கட்சியினருக்குள் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே, அங்கு—பாலஸ்தீனத்தில்—யூத—அராபியக் கலகம் தோன்றி விட்டது. 'மாண்டேடரி' அரசாங்கம் ஏற்படுமென்ற சூசகம் தெரிந்த காலத்திலேயே அராபியர்கள் ஆக்ரோஷத்தோடு கிளம்பினார்கள். எனவே, 1936ம் வருஷம் ஏற்பட்ட கலகந்தான், யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் ஏற்பட்ட முதல் கலகம் என்று யாருமே எண்ண வேண்டுவதில்லை.

1920ம் வருஷம் ஏப்ரல் மாதம் அராபியர்கள் யூதர்களைத் தாக்கினார்கள். இதில் ஐந்து பேர் மரணமடைந்தனர்; 211 பேருக்குக் காயம். இந்தக் கலகத்திற்குக் காரணமென்னவென்பதைப் பற்றி பீல் கமிஷன் அறிக்கை பின் வருமாறு விளக்குகிறது:—

1. யுத்த காலத்தில், தங்களுக்குச் சுதந்திரம் கொடுக்கப்படுமென்று பிரிட்டிஷார் அளித்த உறுதி மொழிகள் நிறைவேற்றப்படாமையினால், அராபியர்கள் கலகத்திற்குக் கிளம்பினார்கள்.

2. பால்பர் அறிக்கையில் கூறப்பட்டுள்ள முறைகள் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் படுமானால், அரசியல் விஷயத்திலும் பொருளாதார விஷயத்திலும் தாங்கள் அடிமைகளாகவே இருக்கும்படி நேரிடும் என்ற அராபியர்களின் நம்பிக்கை.

3. உலகத்திலுள்ள எல்லா முஸ்லீம்களும் ஒன்று சேர்ந்திருக்க வேண்டும் என்ற இயக்கம் அராபியர்களிடையே பரவி வந்தது.

1921ம் வருஷம் ஜாபா நகரத்தில் ஒரு கலகம் ஏற்பட்டது. அதுபோழ்து யூதர்களில் 47 பேர் கொல்லப்பட்டனர்; 146 பேர் காயமடைந்தனர். போலீஸார் இந்தக் கலகத்தை அடக்கியதன் விளைவாக அராபியர்களில் 48 பேர் கொல்லப்பட்டனர். 73 பேருக்குக் காயம் ஏற்பட்டது. இந்தக் கலகத்தின் காரணங்களைப்பற்றி விசாரிக்க நியமனம் செய்யப் பெற்ற கமிஷன், தன் அறிக்கையில், யூதர்களின் குடியேற்றத்தினால் ஏற்பட்ட அரசியல் பொருளாதார மாறுதல்களினால் அராபியர்களுக்குக் கோபம் ஏற்பட்டு அது யூதர்கள் மீது கலகமாகக் கிளம்பியது என்று குறிப்பிட்டிருக்கின்றது.

இவைகளைக் கொண்டு நாம் ஆராய்ந்து பார்த்தோமானால் மத வெறியினால் இந்தக் கலகங்கள் ஏற்படவில்லை யென்பது நன்கு புலனாகும். உண்மையான தேசிய உணர்ச்சிதான், அராபியர்களை இங்ங

னம் கலகம் செய்யும்படி தூண்டியது என்னலாம். சாதாரணமாக பாலஸ்தீனத்தில் கிறிஸ்தவ அராபியர்களுக்கும், முஸ்லீம் அராபியர்களுக்கும் பரஸ்பர அவநம்பிக்கை உண்டு. ஒருவரை யொருவர் எப்பொழுதும் சந்தேகித்த வண்ணமா யிருப்பார்கள். ஆனால் இந்தக் கலகங்களின்போது இவர்கள் தங்கள் பரஸ்பரப் பகைமைகளை யெல்லாம் மறந்து, பொதுச் சத்துருவுக்கு விரோதமாக ஒன்றுபட்டுக் கலகத்தில் இறங்கினார்கள். இஃது எதைக் காட்டுகிறது? அராபியர்களிடையே உட்பிணக்குகள் எத்தனை யிருந்த போதிலும், அவை, தேசிய சுதந்திரம் என்ற பெரிய லட்சியத்திற்கு முன்னர் அடங்கி ஒடுங்கி விடுகின்றன. இதனை தேசிய உணர்ச்சி என்று கூறாது, யூத துவேஷம் என்று உலகத்திலுள்ள முதலாளி வர்க்கம் பறை சாற்றுகிறது. ஆனால் அராபியர்களுக்கு அதைப்பற்றி என்ன கவலை?

1922ம் வருஷத்தில் ஓர் அராபியப் பிரதிநிதிக் கூட்டம் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரியைப் பேட்டிகண்டு பேசியபோது 'மாண்டேடரி' நிருவாக அரசாங்கத்தை அராபியர்கள் அடியோடு நிராகரிக்கிறார்கள் என்றும், பாலஸ்தீனத்திற்கு உடனே பரிபூரண சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தி யிருக்கிறார்கள். இதற்குக் கண்துடைப்பாக ஒரு சட்டசபையை ஏற்படுத்திக் கொடுப்போமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கூறினர். ஆனால் அராபியர்கள் இதனை மறுத்து விட்டார்கள். இந்த ஆசைத் தூண்டுதலுக்கு அவர்கள் இணங்காமற்

போய்விட்டது ஒரு சில பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கு ஆச்சரியமா யிருந்தது.

பாலஸ்தீனத்திற்கு வடக்கிலுள்ள சிரியா நாடு பிரெஞ்சு அரசாங்க நிருவாகத்துக் குட்பட்டிருக்கிற தல்லவா? இந்த அரசாங்க நிருவாகத்துக்கு விரோதமாக சிரியாவிலுள்ள அராபியர்கள் 1925ம் வருஷம் ஒரு பெரிய கலகம் செய்தார்கள். இவர்களுக்கு அநுதாபம் காட்டும் முறையில் பாலஸ்தீன அராபியர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள். இதனால் வெளிப்படையான நன்மைகள் ஒன்றும் உண்டாக வில்லையாயினும் அராபியர்களிடையே இருந்த ஒற்றுமை உணர்ச்சி வலுப்பட்டது.

1925ம் வருஷத்திலிருந்து 1928ம் வருஷம் வரையில் சில பொருளாதார காரணங்களுக்காக யூதர்கள் பாலஸ்தீனத்தில் அதிகமாகக் குடிபுகவில்லை. 1925ம் வருஷம் 33,000 யூதர்கள் குடிபுகுந்திருக்க, 1926–27ம் வருஷங்களில் குடிபுகுந்த யூதர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக 2,000 யூதர்கள் பாலஸ்தீனத்திலிருந்து வெளியேறி யிருக்கிறார்கள்! இந்தக் காலங்களில் அராபியர்களின் கிளர்ச்சி சிறிது அடங்கி யிருந்த தென்றே கூறவேண்டும். 1929ம் வருஷத்தில் எகிப்து, ஈராக், சிரியா முதலிய நாடுகளில் சுதந்திர உணர்ச்சி முறுக்கேறி நின்றது. இது பாலஸ்தீன அராபியர்களுக்கு ஒருவித ஊக்கத்தையும் நம்பிக்கையையும் அளித்தது. இதே சமயத்தில் யூதர்கள் அதிகமாக வந்து குடிபுக ஆரம்பித்தார்கள். இவர்களுடைய செல்வாக்கோ நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு

வந்தது. இந்த உற்சாகமும் ஆத்திரமும் ஒன்று சேர்ந்து 1929ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் ஒரு பெரிய கலகமாகப் பரிணமித்தது. இதில் நூற்றுக் கணக்கான யூதர்கள் கொல்லப் பட்டார்கள். அநேகருக்குக் காயம். அரசாங்கத்தார் எகிப்திலிருந்து பிரிட்டிஷ் துருப்புகளை வரவழைத்து அமைதி ஏற்படுத்தினார்கள். இந்த அமைதிகாணு முறையில் நூற்றுக்கணக்கான அராபியர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் போனார்கள். இந்தக் கலக சம்பந்தமாக விசாரணை செய்த கமிஷன், தன் அறிக்கையில், அராபியர்கள் தங்களின் அரசியல் லட்சியங்கள் சிதற அடிக்கப் பட்டுவிட்டதாகக் கருதியதாலும், யூதர்கள் பெரும் பான்மையோராகக் குடிபுகுவதனால் தங்கள் எதிர் காலப் பொருளாதார வாழ்வு என்ன ஆகுமோ என்று கொண்ட பயத்தினாலுமே இந்தக் கலகம் ஏற்பட்ட தென்று கூறுகிறது.

இந்த 1929ம் வருஷக் கலகத்திற்குப் பிறகு அராபியர்களின் தேசீய இயக்கமானது ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் வளரத் தொடங்கியது. இதுகாறும் இவர்கள் இந்தத் தேசீய இயக்கத்தின் பெயரால் நடத்திவந்த போராட்டமானது, அவ்வளவு அரசியல் அநுபவ மில்லாத முறையில் இருந்தது. இப் பொழுதோ, அராபியத் தலைவர்கள் பலர், உலகத்தின் பலபாகங்களிலும், சிறப்பாக இந்தியா, எகிப்து முதலிய நாடுகளில் நடைபெற்று வந்த தேசீயப் போராட்டத்தின் போக்குகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு வந்தனர். இதன் பயனாக, 1932ம் வருஷம்

இஸ்திக்ளாலிஸ்ட்ஸ்' (Istiqlalists) என்ற ஒரு புதிய கட்சி தோன்றியது. தேசிய இயக்கத்தை இன்னும் ஒழுங்காகவும் உறுதிப்பாடுடனும் நடத்த வேண்டு மென்பதே இந்தக் கட்சியின் கொள்கையா யிருந்தது. அதாவது, பெயரளவில் இதுகாறும் தேசிய இயக்கத்தில் சேர்ந்திருந்தவர்களுக்கு இனி இடமில்லாமற் செய்யப்பட்டது.

1933ம் வருஷம் மார்ச் மாதம் ஜாபா நகரத்தில் ஒரு பெரிய மகாநாடு கூட்டப் பட்டது. இதற்கு, பாலஸ்தீனத்தின் பல பாகங்களிலு முள்ள அராபிய நகரங்களின் நகரசபைத் தலைவர்கள் வந்திருந்தார்கள். ஒத்துழையாமைத் தத்துவத்தை அங்கீகரிப்பதாகவும், இதன் மூலமாக பிரிட்டிஷ் சாமான்களையும் யூதர்கள் உற்பத்தி செய்யும் பொருள் களையும், மேற்படியார்களுடைய வியாபார ஸ்தலங் களையும் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் இந்த மகா நாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தக் காலத்திலிருந்தே, பாலஸ்தீனத்தில் அராபியர் களின் தேசியப் போராட்டமானது இனி மிக உறுதி யுடன் நடைபெறு மென்பதற்குத் தேவையான சூசகங்கள் ஏற்பட்டு விட்டன.

பாலஸ்தீன அரசாங்கத்தார், சர்வதேச சங்கத் திற்கு 1933ம் வருஷம் சமர்ப்பித்த ஓர் அறிக்கையில், அராபிய தேசிய இயக்கமானது, முன் போலில் லாமல் இப்பொழுது ஜனங்களின் மனத்தில் நன்று கப் பதிந்து கொண்டு விட்ட தென்றும், இதற்குக் காரணம், சுற்றுப்புற நாடுகளிலுள்ள அராபியர்களின்

தேசிய அபிலாஷைகள் ஒன்று திரண்டதேயாகு மென்றும் குறிப்பிட்டிருக்கின்றனர். 1933ம் வருஷத் திலிருந்து, அராபியப் பத்திரிகைகள், பிரிட்டிஷா ரைத் தாக்கியும், பாலஸ்தீனத்தின் அரசாங்க நிரு வாகத்தைப் பிரிட்டிஷார் ஏற்றுக் கொண்டது பிரிட் டிஷ் ஏகாதிபத்தியக் கொள்கையை யநுசரித்தே யென்றும் எழுதி வந்தன. இவற்றின் விளைவாகவோ என்னவோ, 1933ம் வருஷக் கடைசியில் பிரிட்டிஷா ருக்கு விரோதமாக ஒரு பெரிய கலகம் கிளம்பியது. இது பின்னர் அடக்கப்பட்டு விட்ட தென்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை.

இந்த 1933ம் வருஷத்துக் கலகத்திற்கு இன் னொரு முக்கியமான காரணமு முண்டு. இந்த வருஷம் மார்ச் மாதம், ஜெர்மனியில் நாஜி கட்சியினர் அதிகா ரத்தை ஏற்றுக் கொண்டனர். இதன் விளைவாக, பாலஸ்தீனத்திற்கு ஜெர்மனியிலிருந்து ஆயிரக் கணக் கான யூதர்கள் வந்து குடி புகுந்தார்கள். 1933ம் வருஷத்தில் 30,327 யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடி புகுந்திருக்கிறார்கள். இஃது அராபியர்களுக்குப் பெரிய திகிலை உண்டு பண்ணி விட்டது. தங்களுடைய பொருளாதார வாழ்வுக்குச் சாவுமணி அடிக்கப் பட்டு விட்டதாகவே இவர்கள் கருதினார்கள்.

1935–36ம் வருஷங்களில் அராபிய தேசிய இயக்கத்திற்கு ஒரு புதிய சக்தி பிறந்த தென்று கூற வேண்டும். எப்படி யென்றால் 1935ம் வருஷக் கடைசியில், எகிப்தில் ஒரு பெரிய கிளர்ச்சி ஏற்பட் டது. எகிப்திய தேசிய சுதந்திரம் அங்கீகரிக்கப்பட

வேண்டு மென்ற நோக்கத்தோடு எழுந்த இந்தக் கிளர்ச்சி, பல ஆண்டுகளாகப் பிரிந்து கிடந்த அநேக அரசியல் கட்சிகளை ஒன்று படுத்தியது. கிளர்ச்சியின் பயனாகக் கலகங்கள் கிளம்பின. எகிப்தின் தேசிய சுதந்திரத்தை அங்கீகரிப்பதாகப் பிரிட்டிஷ் அரசாங் கத்தார் கூறினர். இதன் பிறகே இந்தக் கிளர்ச்சி நின்றது. எகிப்தியர்கள் அடைந்த இந்த வெற்றி, பாலஸ்தீன அராபியர்களுக்கு ஒரு புதிய ஊக்கத்தைக் கொடுத்த தென்பதில் ஆச்சரியமில்லை யல்லவா? இது தவிர, 1936ம் வருஷம் ஜனவரி மாதம், சிரியாவி லுள்ள அராபியர்கள், பிரெஞ்சு அரசாங்கத்தாருக்கு விரோதமாக ஐம்பது நாள் வேலை நிறுத்த மொன்று நடத்தினர். இஃது அவர்களுக்கு வெற்றி யளித்தது. சிரியாவின் மீது தாங்கள் செலுத்தி வரும் ஆதிக்கத் தினின்று விலகிக் கொள்வதாகவும், சுதந்திரம் பெற்ற நாடு என்ற முறையில், சிரியா, சர்வ தேச சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து கொள்ள விண்ணப்பம் செய்து கொள்ளுமானால் அதனைத் தான் ஆதரிப்பதாக வும் பிரெஞ்சு அரசாங்கம் தெரிவித்தது.* அடுத்தாற் போல் சிரியாவில் தங்கள் சகோதரர்களின் நிலைமைக் கும் தங்களுடைய நிலைமைக்கும் ஒப்பிட்டுப் பார்த் துக் கொண்டார்கள் பாலஸ்தீன அராபியர்கள். தாங்

---

* 29-3-1937ல் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தப்படி சிரியா, லெபனோன் பிரதேசங்களின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டி ருக்கிறது. இதன்படி 1939ம் வருஷத்தோடு பிரெஞ்சு நிரு வாகம் சிரியாவில் முடிந்துவிட வேண்டும். ஆனால் சிரிய ராஜதந்திரிகளுக்கு இது விஷயத்தில் சந்தேகமும் கவலையும் இருக்கிற தென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

களும் வெற்றியடைவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இவர்களுக்கு ஏற்பட்டு விட்டது இயற்கைதானே.

1935ம் வருஷ ஆரம்பத்திலிருந்தே, பாலஸ்தீன தேசீய இயக்கமானது சில நிர்மாண வேலைகளைச் செய்ய முற்பட்டது. அராபிய பாங்கி ஒன்று திறக்கப்பட்டது. அராபிய இளைஞர் சங்கங்கள் ஆங்காங்குத் தோன்றி ஜனங்களிடையே பிரசாரஞ் செய்தன. அராபிய அரசியல் வாதிகளிடையே ஆறு விதமான அரசியல் கட்சிகள் இருந்தன வல்லவா? இவற்றில் ஐந்து கட்சிகள், தங்களுடைய கருத்து வேற்றுமைகளை யெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு தேச நலனுக்காக ஒன்று சேர்ந்தன. இவை தவிர, யூதர்களுக்கு நிலங்களை விற்கக் கூடாதென்று மசூதிகளிலும் பத்திரிகைகளிலும் பலத்த பிரசாரஞ் செய்யப் பட்டது.

இதனோடு அராபிய தேசீய வாதிகள் நிற்க வில்லை. 1935ம் வருஷம் நவம்பர் மாதம், இவர்கள் ஒரு பிரதிநிதிக்கோஷ்டியாகச் சேர்ந்து, அப்பொழுதைய பாலஸ்தீனத்து ஹை கமிஷனராயிருந்த ஸர் ஆர்தர் வாக்கப் (Sir Arthur Wauchope)பைப் பேட்டி கண்டு ஒரு மகஜரைச் சமர்ப்பித்தனர். இதில் தங்கள் கோரிக்கை இன்னின்னவை யென்று விரிவாகக் குறிப்பிட்டிருந்தனர். இவற்றுள் முக்கியமானவை (1) பாலஸ்தீனத்தில் ஜன நாயக முறையில் அரசாங்கம் அமைதல் வேண்டும்; (2) யூதர்களுக்கு நிலங்கள் விற்கப்படுவது தடுக்கப் பட வேண்டும்; (3) யூதர்கள் குடி புகுவது நிறுத்தப் பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைக்குப் பதிலளிக்கு முகத்தான் ஹை கமிஷனர் விடுத்த அறிக்கையில், பாலஸ்தீனத்திற்கென்று வரம்பிட்ட சில அதிகாரங்களுடைய ஒரு சட்ட சபை ஏற்படுத்தப் பெறுமென்றும், இதில் தெரிந்தெடுக்கப் பட்ட அங்கத்தினர்கள் பன்னிரண்டு பேரும் நியமன அங்கத்தினர்கள் பதினாறு பேரும் இருப்பர் என்றும் காணப்பட்டிருந்தன. இதனை அராபியத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தாங்கள் கோரிய ஜனநாயக அரசாங்கத்திற்கும் இந்தச் சட்ட சபை அமைப்புக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்றும், தேசிய சுதந்திரமே தங்களுடைய லட்சியமென்றும் வற்புறுத்திப்பேசி வந்தார்கள்.

ஆனால், யூதத் தலைவர்கள், இந்தச் சட்டசபை அமைப்பைக் கூட எதிர்த்து வந்தார்கள். 'பாலஸ்தீனம் தற்போது அபிவிருத்தியாகிக் கொண்டு வரும் நிலையில், இந்தச் சட்ட சபை அமைப்பானது, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் சர்வ தேச சங்கத்தினால் அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கு முரண்பட்டதாகும்' என்று இவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். இதனோடு கூட 1936ம் வருஷம் மார்ச் மாதம், பாலஸ்தீனத்தில் சட்ட சபை அமைக்கும் திட்டமானது, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கொண்டு வரப் பட்டுத் தோல்வியடைந்தது. அந்தச் சம்பவங்களைக் கொண்டு, பிரிட்டிஷ் அரசாங்கத்தார், தாங்களாக மனமுவந்து சுய ஆட்சியின் ஓர் அமிசத்தைக் கூட கொடுக்க மாட்டார்கள் என்று அராபியர்கள் தீர்மானித்து விட்டார்கள்.

1936ம் வருஷம் ஏப்ரல் மாதம் 15ந் தேதியிலிருந்து 19ந் தேதிக்குள், ஜாபா நகரத்திலும் அதற்கருகாமையிலுள்ள டெல்-அவீவ் நகரத்திலும் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் சில்லரைச் சச்சரவுகள் ஏற்பட்டு வந்தன. இதனால் பாலஸ்தீனத்தின் மற்றப் பாகங்களிலுள்ள அராபியர்களுக்கு ஒருவித ஆத்திரம் உண்டாயிற்று. நாப்ளூஸ் என்ற நகரத்தில் கூடிய ஒரு கூட்டம், பொது வேலை நிறுத்தம் நடத்த வேண்டுமென்று தீர்மானித்தது. இதற்காக ஒரு கமிட்டியும் தெரிந்தெடுக்கப்பட்டது. இங்ஙனமே அராபியர்கள் வசிக்கும் எல்லா நகரங்களிலும் கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. யூதர்கள் குடி புகுவதைத் தடுக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு நிலங்கள் விற்கப்படுவதை நிறுத்த வேண்டுமென்றும், தேசீய அரசாங்கத்தை உடனே ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்தக் கமிட்டிகள் பலவும் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பி வந்தன. இங்ஙனம் கமிட்டிகள் ஆங்காங்குத் தனித் தனியாக வேலைசெய்து வருவது சரியில்லையென்றுகருதி 1936ம் வருஷம் ஏப்ரல் மாதம் 25ந் தேதி 'அராபிய பெரிய கமிட்டி' (Arab Higher Committee) யொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இதனை 'மத்திய காரியக் கமிட்டி' யென்று சொல்லலாம். இதில் 'இஸ்திக்லாலிஸ்டுகள்' உள்பட எல்லா அராபியக் கட்சியினரும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தார்கள். இதன் தலைமைப் பதவி ஜெருசலேம் நகரத்தின் 'கிராண்ட் மப்டி' (Grand Mufti) யாகிய ஹாஜ் அமீன் எல் ஹுஸேனிக்கு அளிக்கப்பட்டது. பாலஸ்தீனத்திலுள்ள

அராபியர்களுக்கு இந்த 'மப்டி' மதத் தலைவராக மட்டும் இல்லை; அரசியல் தலைவராகவும் இருந்தது இங்குக் குறிப்பிட்டது. தவிர, உலக முஸ்லீம்களிடையே ஜெருசலேம் 'மப்டி'க்கு அதிகமான செல்வாக்கு உண்டு.¶

முதலில் சிறிய கமிட்டிகள் ஆங்காங்கு ஏற்பட்டு பிறகு பெரிய கமிட்டி ஏற்பட்டது நமக்கு எதை அறிவுறுத்துகிறது? பாலஸ்தீனத்தில் தோன்றிய தேசிய உணர்ச்சியானது ஆரம்பத்தில் பாமர ஜனங்களிடத்திலிருந்தே உற்பத்தியாயிற்றென்பதும், இந்து ஒரு வகையாக வளர்ந்து வருகையில்தான், தலைவர்கள் இதனைக் கைப்பற்றிக்கொண்டு நடத்தத் தொடங்கினார்களென்பதும் விளங்கவில்லையா? இதனால், மேலே கூறப்பட்ட சிறிய கமிட்டிகள், சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் சுபாவமுடைய தலைவர்கள் யாரேனும் இருந்தால் அவர்களை ஒழுங்குபடுத்தி ஒரு நிலையில் நிறுத்தி வைக்கக்கூடிய சக்தி பெற்றிருந்தன.

---

¶ 'மப்டி' என்பது அராபியச் சொல். சட்டத்தை விவகரிப்போர் என்று அர்த்தம். துருக்கி சாம்ராஜ்யத்தில் இந்த 'கிராண்ட் மப்டி' பதவிக்கு அதிகமான செல்வாக்கு இருந்தது. 1924ம் வருஷம் துருக்கியக் குடியரசு அரசாங்கம் இந்தப் பதவியை ரத்து செய்துவிட்டது. ஜெருசலேத்தின் 'கிராண்ட் மப்டி', பாலஸ்தீனத்திலுள்ள முஸ்லீம்களின் பிரச்னைகள் சம்பந்தமாக அரசாங்கத்தாருக்கு ஆலோசனை கூற 1921ம் வருஷம் ஹைகமிஷனரால் நியமிக்கப்பட்ட 'முஸ்லீம் தலைமைச் சங்க'த்திற்கும் (Moslem Supreme Council) தலைமை வகிப்பது கவனிக்கத்தக்கது.

பொதுவாகவே இந்தச் சிறிய கமிட்டிகளுக்குத்தான் அதிகமான செல்வாக்கு இருந்தது.

பொது ஜனங்களுடைய உற்சாகத்திலும் கட்டுப்பாட்டினாலுமே அராபிய தேசிய இயக்கம் முறுக்கேறி நிற்கிற தென்பதற்கு ஒரு சிறிய உதாரணம். 1936ம் வருஷம் மே மாதம் வரிகொடா இயக்கம் தொடங்கப் பெற்றது. இந்த இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டு மென்று தலைவர்கள் யோசனை கூறவில்லை. வாடகைக்கு மோட்டார் ஓட்டும் அராபியர்களின் கமிட்டிதான் இந்த யோசனையைக் கூறியது. பிறகே அனைவராலும் இஃது அங்கீகரிக்கப்பட்டது.

சிறிய கமிட்டிகளின் ஏற்பாட்டின்படியும், ஒழுங்கான வேலைத் திட்டப்படியும் பாலஸ்தீனத்தின் பல பாகங்களிலும் சுமார் ஆறுமாத காலம்வரை வேலை நிறுத்தங்கள் நடைபெற்று வந்தன. ஒத்துழையா இயக்கம் தீவிரமாகப் பரவி நின்றது. ஆனால் சிறிது காலத்திற்குப் பிறகு பலாத்காரம் தோன்றி விட்டது. நகரங்களில் வெடிகுண்டு எறிவதும், துப்பாக்கிப் பிரயோகமும் தினசரி சம்பவங்களாகி விட்டன. கிராமங்களில் போக்கு வரவு சாதனங்களாகிய பாலங்கள் உடைக்கப்பட்டன; தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன; ரெயில் தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டன. யூதர்கள் வசித்த நகரங்கள் அடிக்கடி தாக்கப்பட்டு பல சேதங்கள் விளைவிக்கப் பட்டன. கலகக்காரர்களின் செய்கையினால் அநேக இடங்களில் மரங்கள் சாய்ந்து வீழ்ந்தன. மகசூல் செய்யப்பட்டு நிலங்களில் குவிந்திருந்த விளை பொருள்கள், நெருப்பி

ஞலும் வேறு வகையாலும் சேதமாயின. பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் பல இடங்களில் தாக்கப்பட்டார்கள். 1936ம் வருஷம் ஜூலை மாதத்திலிருந்து, மோசூலிலிருந்து வரும் பெட்ரோல் எண்ணெய்க் குழாய், பல இடங்களில் துளை செய்யப்பட்டும் தீ வைக்கப்பட்டும் சேதங்கள் உண்டுபண்ணப் பட்டன. இறுதியாக, மலைப் பிரதேசங்களில் ஆயுதந் தரித்த சிறு சிறு கூட்டங்கள் ஒன்று சேர்ந்து கொள்ளை படிக்க ஆரம்பித்தன. கொலைகளும் நடைபெற்றன. அமைதியாகத் தொடங்கிய வேலை நிறுத்தமானது ஆயுதந் தரித்த புரட்சியாக மாறிவிட்டது.

வேலை நிறுத்தம் தொடங்கிய காலத்தில் அரசாங்கத்தார் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவில்லை. தானுகவே அடங்கிவிடும் என்று கருதினர்போலும். பின்னர் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளத் தீர்மானித்தனர். 1936ம் வருஷம் மே மாதம் எகிப்திலிருந்து துருப்புகள் வரவழைக்கப்பட்டன. ஜூன் மாதம் அராபியத் தலைவர்கள் பலர் காப்பில் வைக்கப் பட்டார்கள். அடக்குமுறை தாண்டவம் செய்யத் தொடங்கியது. கலகக்காரர்களை ஒளித்து வைத்திருக்கிற இடங்கள் என்று சந்தேகிக்கப்பட்ட வீடுகள் தகர்த் தெறியப்பட்டன. ஏதேனும் ஒரு கிராமத்தில் பலாத்காரச் செயல் நடைபெற்றால், அந்தக் கிராமத்திலுள்ள அனைவருக்கும் சேர்த்து அபராதம் விதிக்கப்பட்டது.

இந்தச் சமயத்தில் ஜாபா என்ற நகரத்தில் ஒரு சிறிய சம்பவம் நடைபெற்றது. இஃது அராபியர்களுக்கு இன்னும் அதிகமான ஆத்திரத்தை உண்டு

பண்ணிவிட்டது. நகரத்தின் நெருக்கமான கோரிடத்திலிருந்த சில வீடுகள் இடிக்குச் சமதரையாக்கப்பட வேண்டுமென்று அதிகாரிகள் தீர்மானித்தார்கள் கட்டிடங்கள் இங்ஙனம் சேர்ந்தாற்போலிருப்பதால் நகர சுகாதாரத்திற்குத் தீங்கு ஏற்படுகிறதென்றும், நகர புனர் நிர்மாண திட்டத்தை உத்தேசித்து இவை இடிக்கப்பட வேண்டுமென்றும் அதிகாரிகள் சமாதானம் கூறினார்கள். இந்த நெருக்கமான இடத்திலுள்ள கட்டிடங்களில்தான் கலகக்காரர்கள் ஒளிந்து கொண்டிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து வந்தார்கள் என்ற பேச்சும் அப்பொழுது இருந்தது. கடைசியில் இந்த இடத்திலிருந்த சுமார் ஆறுபிரம்பேர், சில மணிநேர முன்னெச்சரிக்கையுடன் காலி செய்யுமாறு கூறப்பட்டார்கள். இவர்கள் தங்கள் உயிரைத்தான் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது; தங்கள் உடைமைகளை அப்படியே விட்டு விட்டுப் போய் விட்டார்கள். இது சம்பந்தமாக பாலஸ்தீன ஹைகோர்ட்டில் நடைபெற்ற ஒரு வழக்கில் பிரதம நீதிபதியான ஸர் மைக்கல் மக்டோனல்ட் தீர்ப்பளிக்கிறபோது, 'நகர நிர்மாண திட்டத்தை உத்தேசித்தும், சுகாதார காரணங்களுக்காகவும் இந்தக் கட்டிடங்களை இடிக்கிறோமென்று அரசாங்கத்தார் சமாதானம் கூறாமல், தற்காப்புக்காக இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருந்ததென்று உண்மையாகச்சொல்லியிருந்தால் அது மிகவும் கௌரவமாயிருந்திருக்கும்' என்று குறிப்பிட்டது பலருடைய கவனத்தையும் இழுத்தது. ¶

¶ What's up in Palestine—Michael Greenberg p. 52.

1936ம் வருஷம் செப்டம்பர் மாதம் ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. சுமார் இருபதினாயிரம் துருப்புகளை பாலஸ்தீனத்தின் பல பாகங்களுக்கும் அனுப்பி பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ராணுவச் சட்டத்தின் கீழ் நாடெங்கணும் கண்டிப்பான உத்திரவுகள் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டன. பார்த்தார்கள் அராபியத் தலைவர்கள். இந்த மகத்தான சேனுபலத்தின் முன்னர், மிகச் சிறிய நாட்டிலே யுள்ள அவர்கள் என்ன செய்ய முடியும்? சுற்றுப்புற முள்ள சகோதர ஜாதியாரிடமிருந்து இவர்களுக்குப் பல வகை உதவிகள் கிடைத்தனவென்று சொல்லப் பட்டது கூட உண்மையாயிருக்கலாம். ஆனால் அந்த வெளி உதவிகளை வைத்துக் கொண்டு இவர்கள் எவ்வளவு காலம் தாக்குப் பிடிக்க முடியும்? ஒளிந்து ஒளிந்து சண்டை போடுவதற்குக் கூட முடியாதபடி பிரிட்டிஷ் துருப்புகளின் பந்தோபஸ்து ஏற்பாடு இருந்தது. சுமார் ஆறுமாத காலம், இவர்களுடைய வியாபாரமே இல்லாமற் போய் விட்டது. புரட்சிக்காரர்களுக்கு யார் இனி உணவு அளிப்பது? அப்படி யாராவது கொடுக்க முன் வந்தாலும் எவ்வளவு காலம் கொடுக்க முடியும்?

பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் பாலஸ்தீனத்தை ரத்தக் களரியாக்க விரும்பவில்லை. இதை உத்தேசித்தே, 1936ம் வருஷம் ஜூலை மாதம், பாலஸ்தீனத்தில் அமைதி ஏற்பட்ட பிறகு, அங்கு ஏற்பட்ட கலகங்களுக்கு அடிப்படையான காரணங்கள் என்ன

வென்று விசாரிப்பதற்கும், 'மாண்டேடரி' அரசாங்க நிருவாகத்தின் கீழ் அராபியர்கள், யூதர்கள் முதலி யோர் அநுபவித்துவரும் கஷ்ட நிஷ்டூரங்களைப் பற்றி விசாரிப்பதற்கும் லார்ட் பீல் என்பவனுடைய தலைமையில் ஒரு ராயல் கமிஷன் நியமனம் பெறு மென்று ஓர் அறிக்கை வெளியிட்டனர்.

இது தவிர, பாலஸ்தீனத்தைச் சுற்றியுள்ள இஸ் லாமிய நாடுகளின் அரசர்களும், இந்தக் கலகம் நீடித் துச் செல்வதை விரும்பவில்லை. அராபியா, ஈராக், ட்ரான்ஸ் ஜார்டோனியா ஆகிய இந்த மூன்று நாட்டு மன்னர்களும், இனியும் ரத்தப் பெருக்கு ஏற்படாமல் சமாதானம் செய்து கொள்வது நல்லதென்ற கருத் துப்பட 'அராபிய பெரிய கமிட்டி'க்கு (Arab Higher Committee) கடிதங்கள் எழுதினார்கள். இந்த மூவர் எழுதிய கடிதங்களையும் மேற்படி கமிட்டியார் 1936ம் வருஷம் அக்டோபர் மாதம் 12ந் தேதி வெளியிட் டனர். அடுத்த நாள் 13ந் தேதி, வேலை நிறுத்தம் இனித் தேவையில்லை யென்றும், இனி அவரவர் அலு வல்களைக் கவனிக்கலாமென்றும் 'அராபிய பெரிய கமிட்டி'யார் அறிக்கை வெளியிட்டனர். அதற்கு மறுநாள் 14ந் தேதி, மலைப் பிரதேசங்களில் ஆயுத பாணிகளாக இருந்து கொள்ளை, கொலை முதலியன நடத்தி வந்த பல திறக் கூட்டத்தினரையும், அவற் றின் தலைவனான பவுஜீத்தின்—அல்—காலாக்ஜீ என்ப வன் கலைத்து விட்டான்.

நாட்டில் ஒரு வகையாகச் சமாதானம் ஏற்பட் டது. அராபியர்கள் எழுப்பிய புரட்சி, தோல்வி

யடைந்து விட்டதென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தின ரும், அவர்களின் நிழலில் வாழ்கின்ற யூதர்களும் கூறிக் கொண்டார்கள். ஆனால் அராபியர்களோ, தற் காலிகமாக இந்தப் புரட்சி தோல்வியடைந்து போன தாகக் காணப் பட்டாலும், பாலஸ்தீன தேசிய இயக் கத்திற்கு அராபிய உலகம் முழுவதும் ஆதரவளிக் கிறதென்பதை இது நிரூபித்துவிட்டதென்றும், இதன் மூலமாக அராபியர்களின் ஒற்றுமை வெளியாயிற் றென்றும் சொல்லிக் கொண்டார்கள்.

# VII

## பிரிவினைப் பிரச்னை

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி, 1936ம் வருஷம் நவம்பர் மாதம் லார்ட் பீல் தலைமையில் நியமனம் பெற்றிருந்த ராயல் கமிஷன், பாலஸ்தீனத்தில் வந்திறங்கியது. ஆரம்பத்தில் அராபியர்கள் இதற்கு முன்னர் சாட்சியங் கொடுக்க மறுத்தார்கள். சிறிது காலம் கமிஷனுடைய விசாரணைக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டன. பின்னர், சுற்றுப்புறமுள்ள நாடுகளின் தலைவர்கள் ஏற்படுத்திக் கொடுத்த சமாதானச் சூழலின் மத்தியில், ஒரு விதமாக விசாரணை தொடங்கப்பெற்றது சுமார் ஏழு மாத காலம் வரை, கமிஷனர், பாலஸ்தீனத்தின் பல பாகங்களுக்கும் சென்று விசாரணை நடத்தினார்கள் விசாரணை தொடங்கிய காலத்திலிருந்து, கமிஷனின் அறிக்கை வெளியாகிற காலம் வரை, குழப்பங்கள் ஒன்றும் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். சில்லறைச் சச்சரவுகள் ஆங்காங்கு நடை பெற்றதேயாயினும், இவை, ஒழுங்கு பட்ட புரட்சியைச் சார்ந்தவை யென்று சொல்ல முடியாது.

1937ம் வருஷம் ஜூலை மாதம் பீல் கமிஷன் அறிக்கை வெளியாயிற்று. இந்த அறிக்கையைப்

பற்றி விரிவாக வியாக்கியானஞ் செய்து கொண்டு போவது இந்த நூலின் நோக்கமன்று. இது செய்த சிபார்சுகளை மட்டும் சுருக்கமாக இங்குக் கூறுவோம்.

1. பாலஸ்தீனத்தில் ஏற்பட்ட தொந்திரவுகளுக்கெல்லாம் மூல காரணம், ஒன்றுக்கொன்று சமரஸமாகப் போக முடியாத இரண்டு வித மான தேசீய சக்திகள் இருக்கின்றன. இவற்றில் ஒவ்வொன்றும், தேசத்தை ஆள வேண்டுமென்று முனைந்து நிற்கின்றன. ஒவ்வொரு சக்தியும், தன்னுடைய கட்சியே சரியென்று சாதிக்க விரும்புகிறது.

2. இந்த இரண்டு சக்திகளையும் ஒன்று படுத்தி வைக்க 'மாண்டேட்ரி' அரசாங்கம் சென்ற இருபது வருஷ காலமாகப் பிரயத்தனம் செய்து வந்தும், பயன் உண்டாகவில்லை.

3. 'மாண்டேட்ரி' நிருவாகம் கோரிய பலனைக் கொடுக்கவில்லை.

4. ஆகவே பாலஸ்தீனத்தை மூன்று கூறுகளாகப் பிரித்துவிட வேண்டும்.

5. மத்திய தரைக் கடலோரத்திலுள்ள சம தரைப் பிரதேசம் யூதர்களின் நாடாக்கப்பட வேண்டும்; குன்றுகள், வனந்திரங்கள் நிறைந்ததும், ட்ரான்ஸ் ஜார்டோனியாவை கிழக்கெல்லையாகவும், காஜா துறை முகத்தோடு கூடிய ஒரு சிறு பிரதேசத்தை மேற்குப் பக்கத்திலும் கொண்ட இடை வெளிப் பிரதேசம் அராபியர்

களின் நாடாக்கப்பட வேண்டும். இந்த நாடு, டிரான்ஸ் ஜார்டோனியா நாட்டுடனேயே சேர்க்கப்பட்டு விடும். ஜெருசலேம், பெத்லெஹம் போன்ற புண்ணிய ஸ்தலங்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பிரிட்டனிடமே இருக்க வேண்டியிருப்பதால், ஜெருசலேத்திலிருந்து ஜாபா துறை முகம் வரையில் செல்லக்கூடியதொரு பிரதேசம் பிரிட்டனுடைய நிரந்தர நிருவாகத்தின் கீழிருக்கும்.* இந்தப் பிரதேசம் தவிர, ஹைபா, டிபேரியாஸ், ஸபாத், ஏக்ரே, அக்காபா ஆகிய துறைமுகப் பட்டினங்களும், நகரங்களும் பிரிட்டன் வசத்திலேயே இருக்கும். யூதருக் கென்று வகுக்கப் பட்டுள்ள பிரதேசத்தில் வசிக்கும் 2,25,000 அராபியர்களும், அராபியர்களுக் கென்று ஒதுக்கப் பட்டுள்ள நாட்டிற்கு பலவந்தமாக மாற்றப் பட்டு விட வேண்டும்.‡

இந்தப் பிரிவினையில் சம்பந்தப் பட்டவர் மூன்று கட்சியினரல்லவா? அதாவது பிரிட்டிஷ் அரசாங்கத்தார், யூதர், அராபியர். இந்த மூன்று கட்சியினரும், மேற்படி பீல் கமிஷன் செய்த சிபார்சுகளைப் பற்றி என்ன அபிப்பிராயங் கொண்டனர் என்பதைத் தெரிந்து கொள்வோம்.

---

* இந்தப் பிரதேசத்தில்தான், பாலஸ்தீனத்தின் முக்கியமான ரெயில் பாதையும் 'ட்ரங்க் ரோட்டு'ம் செல்கின்றன.

‡ அராபியர்களுக்கென்று ஒதுக்கப் பட்ட பிரதேசத்தில் உள்ள யூதர்கள் மிகச் சொற்பமே.

பாலஸ்தீனத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்குக் காரணங்கள் என்னவென்பதைப் பற்றிக் கமிஷனர் கூறியிருப்பதையும், இதற்கு அவர்கள் சிபார்சு செய்துள்ள பரிகாரங்களையும், பொதுவாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அங்கீகரித்துக் கொண்டனர். தவிர, பிரிவினை செய்யப்பட்ட பிரதேசங்களின் எல்லைகளை நிர்ணயிக்கிற விவரங்கள் சம்பந்தமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படுமென்றும், அது வரையில், யூதர்களுக்கு நிலங்கள் விற்பனை செய்வது கட்டுப் படுத்தப் பெறுமென்றும், மற்றும், வருஷத்தில் சராசரி 8,000 யூதர்கள்தான் பாலஸ்தீனத்தில் குடிபுகலாம் என்ற வரையறை ஏற்படுத்தப் பெறுமென்றும் அறிக்கை வெளியிட்டனர்.

யூதர்களுக்கு, இந்தப் பீல் அறிக்கை ஒரு வெடிகுண்டு மாதிரி வந்து விழுந்தது. 'மாண்டேடரி' நிருவாகம், கோரிய பலனைக் கொடுக்கவில்லையென்று பீல் அறிக்கை கூறி விட்டது இவர்களுக்கு வருத்தமாயிருந்தது. தவிர, தங்களுக்கென்று வகுக்கப் பட்ட பிரதேசமோ ஒரு ஜில்லா விஸ்தீரண முடையதாயிருந்தது இவர்களுக்கு அதிருப்தி தான்.* யூதர்களில் பெரும்பாலோர் இந்த மாதிரியான அபிப்பிராயத்தையே கொண்டார்கள்.

---

* அதிக நீளம் சுமார் 110 மைலும் அதிக அகலம் சுமார் 30 மைலும் உள்ள பிரதேசமே யூதருக்கென்று பிரிக்கப்பட்டது.

தொழிற் கட்சியினர்§, பாலஸ்தீனம் முழுவதும் யூதர்களுக்குச் சொந்தமான நாடாக வேண்டுமென்றும், யூதர்களின் குடிபுகும் விகிதத்தை வரையறுக்கக் கூடாதென்றும் கூறினார்கள். ஆனால் இந்தக் கட்சியினருக்கு நாட்டிலே அதிகமான செல்வாக்கில்லை.

ஜையோனிய ஸ்தாபனத்தின் நிருவாகக் கௌன்சில் தலைவனாகிய உஸ்ஸிஷ்கின் என்பவனுடைய தலைமையில் ஒருகட்சியினர் பிரிவினைச்சிபார்சை எதிர்த்து நின்றனர். பழையபடியே, 'மாண்டேடரி' நிருவாகம்நடைபெற வேண்டுமென்றும், பிரிவினை செய்வது அநுபவ சாத்தியமற்றதென்றும் இவர்கள் கூறினார்கள். இந்த அபிப்பிராயங் கொண்டவர்கள் பெரும்பாலும், யூத மத்திய வகுப்பினரே.

யூதர்களிலேயே இன்னொரு கட்சியினர், இந்தப் பிரிவினையை வேறொரு திருஷ்டியில் எதிர்த்தனர். இவர்கள், தொழிற் கட்சியினரிலே தீவிர வாதிகள். இவர்கள், இந்தப்பிரிவினையினால் பாலஸ்தீனத்தில் அராபியர்களும் யூதர்களும் ஒரே நாட்டில் ஒன்று சேர்ந்து வாழ்வதற்குப் பதிலாக பிரிந்து வாழ நேரிடுமென்று கூறினர். இவர்கள் இப்படிச்சொன்னபோதிலும், யூதர்கள் குடிபுகும் விகிதத்தைக்குறைக்கவோ, அராபியர்களின் தேசீய சுதந்திர உரிமையை அங்கீகரிக்கவோ விரும்பவில்லை. எனவே, இவர்கள் கொண்ட அபிப்பிராயத்திற்கு யாரும் மதிப்புக் கொடுக்கவில்லை.

§ பாலஸ்தீனத்திலுள்ள யூதர்களில் கூட தொழிற் கட்சியினர் என்றும், பாசிஸ்ட்டுகள் என்றும், மிதவாதிகளென்றும், தீவிரவாதிகளென்றும் பல பிரிவுகள் இருக்கின்றன. ஆனால் அனைவரும், சமூக நலன் என்ற விஷயத்தில் ஒன்றுபட்டவர்களே.

டாக்டர் வீஸ்மானைத் தலைமையாகக் கொண்ட ஒரு சாரார், அராபிய பாலஸ்தீனத்தில் சிறு பான்மையினராக யூதர்கள் இருப்பதை விட, தனிப்பட்ட ஒரு நாட்டினராகப் பிரிந்து விடுதலே நல்லதென்றும், அப்பொழுதே, யூதர்களின் சுய முயற்சி அதிகரிக்குமென்றும், இதன் மூலமாகப்பிற்கால அராபியர்களின் எதிர்ப்பைக் கூட சமாளிக்கலாமென்றும், தவிர, தங்களுக்குப்பிரிட்டிஷ் ராணுவபலத்தின் ஆதரவு எப்பொழுதும் இருக்கு மென்றும் கூறி, பிரிவினையை ஆதரித்தனர்.

லார்ட் சாமியலைத் தலைமையாகக் கொண்ட வேறொரு பிரிவினர், சுதந்திர அராபிய பாலஸ்தீனத்தில், யூதர்கள் சிறு பான்மையோருக்குரிய எல்லா உரிமைகளையும்பெற்று அமைதியாக வாழ்தலே நல்லதென்றும், அவர்களுடைய ஜன விகிதத்தைப் பொறுத்து அந்த நாட்டு அரசாங்க நிருவாகத்தில்பங்கு பெறுவதோடு திருப்தியடைய வேண்டு மென்றும் அறிக்கை வெளியிட்டனர். இந்தக் குழுவினருடைய அபிப்பிராயத்திற்கு, சாய்வு நாற்காலியில் உல்லாசமாக அமர்ந்து கொண்டு அரசியலைப் பற்றி வாசாமகோசரமாகப் பேசும் யூத அரசியல் வாதிகளிடத்தில்தான் மதிப்பு இருந்தது. இங்ஙனம், குடிபுகுந்த யூதர்களுக்குள் இந்தப் பிரிவினையைப் பற்றிப் பல விதமான அபிப்பிராய வேற்றுமைகள் உலவின.

1937ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் ஸ்விட்ஜர்லாந்திலுள்ள ஜூரிச் நகரத்தில் இருபதாவது அகில உலக ஜையோனிய காங்கிரஸ் கூடியது. அப்பொழுது, பாலஸ்தீனப் பிரிவினை சம்பந்தமாக யூதர்களுக்குள்

ஏற்பட்டுள்ள அபிப்பிராய வேற்றுமைகளைச் சமரஸப் படுத்தத் தீவிர முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனால் இந்தக் காங்கிரஸில் கலந்து கொண்ட எந்தக் கட்சியினருமே, பிரிவினையை அப்படியே நிராகரிக்க விரும்ப வில்லை. யூதர்களுக் கென்று பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் பிரதேசத்தை இன்னுஞ்சிறிது விசாலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்னும் விஷயமாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருடன் சமரஸம் பேசுமாறுகாங்கிரஸின் நிருவாக சபைக்கு அதிகாரங் கொடுப்பதாகக் கடைசியில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இனி அராபியர்களுடைய அபிப்பிராயங்கள் எங்ஙனம் உருக் கொண்டு எழுந்தன வென்பதைப் பற்றிச் சிறிது கவனிப்போம். இவர்கள் எவ்வித கட்சி பேதமுமில்லாமல், இந்தப் பிரிவினைத் திட்டத்தை எதிர்த்தார்கள். 'நமது தாய் நாடாகிய பாலஸ்தீனத்தைப் பிரிக்க முடியாது. அதன் ஓர் அங்குலப் பிரதேசத்தையும் எந்த முஸ்லீமும் விட்டுக் கொடுக்க மாட்டான்' என்று 'மப்டி'யின் பத்திரிகையாகிய 'அல் லீவா' எழுதியது. 1937ம் வருஷம் ஜூலை மாதம் 23ந் தேதி 'அராபிய பெரிய கமிட்டி'யார், சர்வதேச சங்கத்தைச் சேர்ந்த 'நிரந்தர மாண்டேட்ஸ் கமிஷனு'க்கும், பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரிக்கும், பிரிவினை சம்பந்தமாகத் தங்கள் கருத்துக்களைத் தொகுத்து ஒரு யாதாஸ்து சமர்ப்பித்தனர். இதில் 'மாண்டேடரி' நிருவாகம் திருப்திகரமாக வேலை செய்ய வில்லை யென்பதை பீல் கமிஷன்

அங்கீகரித்து விட்டதைத் தாங்கள் பாராட்டுவதாகத் தெரிவித்து விட்டு, அராபியர்கள் ஏன் பிரிவினைக்கு விரோதமாயிருக்கின்றனர் என்பதற்கு வரிசைக் கிரமமாகச் சில காரணங்களைக் குறிப்பிட்டனர்.

1. பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கென்று தனி நாடு ஒன்று ஒதுக்கிக் கொடுக்கப்படுமானால், அந்த நாட்டிலுள்ள அராபியர்களுக்குக் கடல் தொடர்பும், சிரியாவிலுள்ள தங்கள் அராபிய சகோதரர்களுடைய தொடர்பும் இல்லாமற் போய் விடும். தவிர, இப்பொழுது யூதர்களுக் கென்று பிரிக்கப்பட்டுள்ள பிரதேசம் பாலஸ்தீனத்திலுள்ள மற்றப் பிரதேசங்களைக் காட்டிலும் மிகச் செழுமையானது. இதனால் யூதர்கள், நாளா வட்டத்தில் தங்கள் எல்லையை விஸ்தரித்துக் கொள்வார்கள்.

2. யூதர்களுக் கென்று ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசத்தில், அராபியர்களுக்குச் சொந்தமான பல ஆரஞ்சுப் பழத் தோட்டங்கள் முதலியன இருக்கின்றன. இவைகளையெல்லாம் அராபியர்கள் இழந்துவிட வேண்டியிருக்கும்.

3. பாலஸ்தீனத்திலுள்ள புனித ஸ்தலங்களைப் பாது காப்பதாகிற முகாந்திரத்தை வைத்துக் கொண்டு, சில பிரதேசங்கள், பிரிட்டிஷாருடைய நிரந்தர நிருவாகத்திற்குட்படுத்தப்பட வேண்டுமென்ற யோசனையை நாங்கள் பலமாக எதிர்க்கிறோம்.

இந்த மூன்றாவது ஆட்சேபத்தைப் பற்றி ஒரு பிரபல அராபியப் பத்திரிகை பின் வருமாறு எழுதியது:—

பிரிட்டிஷாருடைய நிரந்தர நிருவாகத்திற்குட்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் அமைக்கப் பெறும் இந்தப் பிரதேசத்தையும், ஹைபா, அக்காபா என்ற துறைமுகங்களைப் பற்றிக் கூறப் பெற்றுள்ள சிபார்சுகளையும் பட்சபாதமற்ற ஒருவன் கூர்ந்து கவனிப்பானால், மத சம்பந்தமான பிரச்னைகளுக்குப் பதில், ஏகாதிபத்திய, ராணுவ பிரச்னைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப் பெற்றிருக்கின்றது என்பது நன்கு புலப்படும். லிட்டா, ராம்லே என்ற நகரங்களிலுள்ள ஆகாய விமான நிலையங்களும், எகிப்து, ஹைபா, ஜெருசலேம், ஜாபா ஆகிய பல இடங்களிலிருந்து வரும் ரெயில்வேக்கள் சந்திக்கிற லிட்டா ரெயில்வே 'ஜங்க்ஷனு'ம், யதேச்சையாக பிரிட்டிஷாருடைய நிருவாகப் பிரதேசத்தில் அமைந்து கிடக்கின்றன வென்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஸூயஸ் வாய்க்காலையும், செங்கடலையும் காத்து நிற்கிற அக்காபா துறைமுகத்தின் முக்கியத்துவம் எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இந்த அக்காபா துறைமுகத்திற்கும், புனித ஸ்தலங்களுக்கும் இப்பொழுது என்ன சம்பந்தம் இருக்கிறது, இனி எத்தகைய சம்பந்தம் இருக்கும் என்ற விவரங்கள் சொல்லப் படவில்லை.

பொதுவாக அராபியர்களுக்கு அதிகமான ராஜ தந்திர அநுபவம் போதாதென்று, வார்சேல் உடன் படிக்கைக்கு உடந்தையா யிருந்த ஒரு சிலர் கூறிய போதிலும், பீல் கமிஷன் செய்த சிபார்சுகளைக் கண்டித்து அராபியத் தலைவர்கள் விடுத்த அறிக்கைகளையும், அராபியப் பத்திரிகைகள் எழுதிய தலையங்கங்களையும் கூர்ந்து கவனித்துப் பார்ப்பவர்களுக்கு, ஏகாதிபத்தியக் கொள்கையின் அடிப்படையான தத்துவம் என்ன, அதற்காகத் தங்கள் நாடு எவ்வாறு உபயோகிக்கப் படுகிறது என்பனபோன்ற விவரங்களை இவர்கள் எவ்வளவு அருமையாக உணர்ந்திருக்கிறார்கள் என்பது நன்கு புலப்படும். ஆக, பாலஸ்தீனப் பிரிவினையை அராபியர்கள் ஒரு முகமாக நிராகரித்து விட்டார்கள். பாலஸ்தீனத்திலுள்ள அராபியர்கள் அனைவரும், இந்தப் பிரிவினை விஷயத்தில் ஒற்றுமைப்பட்ட அபிப்பிராய முடையவர்களா யிருக்கிறார்கள் என்பதைக் காட்ட வேண்டுமானால், மீண்டும் கலகம் கிளம்பும் என்று அராபியத் தலைவர்கள் பலர் பகிரங்கமாகக் கூறினார்கள். இவர்கள் சொன்னபடியே, 1937ம் வருஷம் கடைசி பாகத்தில் முன்போல் கலகம் ஆரம்பித்து விட்டது.

வெடிகுண்டுகள் எறியப்பட்டன. தந்திக்கம்பிகள், ரெயில் தண்டவாளங்கள் முதலியன அறுக்கப்பட்டும் பெயர்க்கப்பட்டும் போயின. அராபியர்கள் கூட்டங் கூட்டமாக ஆங்காங்கு ஒளிந்திருந்து பிரிட்டிஷாரையும் யூதரையும் கொன்றனர். காலிலீ என்ற பிரதேசத்திலுள்ள அராபியர்கள் மிகவும்

நிதானஸ்தர்கள் என்று பீல் கமிஷன் அறிக்கை புகழ்ந்து எழுதியிருந்தது. ஆனால் அந்தப் பிரதேசத்தில்தான் கலகத்தின் உத்வேகம் அதிகமாகக் காணப்பட்டது. 1937ம் வருஷம் ஆகஸ்ட் மாதம், அராபியக் குடியானவர்கள் ஆங்காங்குத் தனித்தனி ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக் கொண்டு, கட்டுப்பாடாக யூதர்களின் பொருள்களையும் பிரிட்டிஷ் பொருள்களையும் பகிஷ்காரஞ் செய்தனர். காலிலீ என்ற பிரதேசத்தில், கலக உணர்ச்சி அதிகமாயிருந்தபடியால், அங்குச் சென்று சமனப்படுத்த எல். ஓய். ஆண்ட்ரூஸ் என்ற உத்தியோகஸ்தன் விசேஷக் கமிஷனராக நியமிக்கப் பெற்று அனுப்பப்பட்டான். இவன், அராபியர்களோடு பழகுவதில் மிகவும் நிபுணன் என்று பெயர் பெற்றவன். ஆனால் இவன் 1937ம் வருஷம் அக்டோபர் மாதம் கொலை செய்யப் பட்டான். பீல் கமிஷன் செய்த பிரிவினைச் சிபார்சுக்கு இவனே காரணனாயிருந்தான் என்று அராபியர்கள் கொண்ட சந்தேகமே இவன் கொலைக்குக் காரணம் என்று பின்னர் கூறப்பட்டது. 1937ம் வருஷம் செப்டம்பர் மாதம் சிரியாவிலுள்ள ப்ளவ்டான் என்ற ஊரில் அராபியர்களின் காங்கிரஸ் ஒன்று கூடியது. பாலஸ்தீனத்துப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த இங்கு ரகசியமாகப் பல திட்டங்கள் போடப்பட்டனவென்று தெரிகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொரு புதிய அம்சமும் வந்து கலந்து கொண்டது. இத்தாலியர்கள், அராபியர்களிடையே பலத்த பிரசாரஞ் செய்து வந்தார்களென்றும், இஸ்லாமுக்குப் பாதுகாப்பாளனாக

முஸோலினி தன்னை பிரகடனப் படுத்திக் கொண்ட பிறகு, ரோமாபுரி சர்வகலாசாலையில் அராபிய மாணாக்கர் சிலருக்கு இலவசக் கல்வி போதிக்க ஏற்பாடு செய்ததாகவும் சொல்லப் பட்டன. முஸோலினியின் பிரசாரம், பாலஸ்தீன அராபியர்களிடையே நடை பெற்றதா இல்லையா வென்பதைப் பற்றிய ஆராய்ச்சி ஒரு புற மிருக்கட்டும். ஆனால் அராபிய பத்திரிகைகள், இந்தச் சமயத்தில், பாசிஸக்கொள்கைகளை விளக்கியும், அவற்றின் உயர்வைப் பாராட்டியும் கட்டுரைகளை வெளியிட்டன. முஸோலினி, ஹிட்லர் முதலியோருடைய படங்கள், அவர்களைப் பாராட்டும் பான்மையோடு வெளியாயின. இத்தலியிலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும், அராபியர்களுக்கு ஆயுதங்களும் பணமும் கிடைத்துக் கொண்டிருந்தன வென்ற வதந்தி பலமாக இருந்தது.

இனியும் பிரிட்டிஷ் அரசாங்கம் சும்மா யிருக்குமா? இருக்கத்தான் முடியுமா? 'அராபிய பெரிய கமிட்டி' கலைக்கப்பட்டது. அதன் அங்கத்தினர்கள் கைதி செய்யப் பட்டு, இந்திய மகா சமுத்திரத்திலுள்ள ஸைப்செல்லெஸ் தீவுகளுக்கு (Seychelles Islands) அனுப்பப் பட்டு விட்டார்கள். ஜெருசலேம் 'கிராண்ட் மப்டி' வகித்திருந்த 'சூப்ரீம் முஸ்லீம் கவுன்சில்' தலைமைப் பதவியிலிருந்து அவர் விலக்கப்பட்டார். அதனோடு, மதஸ்தாபனங்கள் சம்பந்தமான பண நிருவாகமும் 'மப்டி'யிடமிருந்து பறிக்கப்பட்டது. செல்வாக்கு நிறைந்த 'மப்டி'யோ பாலஸ்தீனத்தில் இராமல் லெபனோன் நாட்டின் தலை நகரமாகிய பெய்ரூத்

துக்குத் தப்பித்துச் சென்று விட்டது, அல்லது தப்பித்துச் செல்லுமாறு சந்தர்ப்பம் அளிக்கப் பட்டது, அந்த 'மப்டி'யின் செல்வாக்கையே புலப்படுத்துகிறது. நாளது வரையில் லெபனோன் பிரதேசத்திலிருந்து கொண்டு, பாலஸ்தீன விவகாரங்களை 'மப்டி' நடத்திக் கொண்டு வருவது கவனிக்கத்தக்கது.

இதற்குப் பிறகு, அதிகாரிகள் பல விதமான அடக்கு முறைகளை ஒன்றன் பின்னொன்றாகக் கையாண்டனர். கல்கத்தாவில் போலீஸ் கமிஷனராயிருந்து, வங்காளத்தில் நிலவியிருந்த பலாத்கார இயக்கத்தை அடக்கி விட்டதாகப் பெயர் பெற்ற ஸர் சார்லஸ் டெகார்ட்,* விசேஷ உத்தியோகஸ்தனாக நியமிக்கப் பெற்றான். இவன், வடக்கிலுள்ள சிரியாவிலிருந்து பாலஸ்தீன அராபியர்களுக்கு ஆள் பலமும் ஆயுத உதவியும் கிடைக்கிறதென்று கருதி, இதனைத் தடுப்பதற்காக, பாலஸ்தீனத்தின் வடக்கெல்லை பூராவும் முட் கம்பிகளினாலாய வேலி போட்டான். இதற்கு 'டெகார்ட் சுவர்'† என்று பெயர். இந்த 'டெகார்ட் சுவர்' அமைக்கப் பட்ட விஷயத்தில் ஒரு விசேஷம். அதாவது, இதனை அமைப்பதற்குரிய 'கண்டிராக்ட்', யூத தொழிலாளர் ஸ்தாபனத்திற்கு அளிக்கப் பட்டது! 'ஹிஸ்தாத்ருத்' என்ற இந்த யூதத் தொழிலாளர் ஸ்தாபனத்

---

* Sir Charles Tegart.

† Tegart's Wall. சுமார் அறுபதுமைல் நீளம் இந்த 'முட் கம்பிச் சுவர்' போடப் பட்டிருக்கிறது. இதற்கு ஒரு லட்சம் பவுன் செலவழிந்தது.

தார், வருவாயை உத்தேசித்து, இந்தமாதிரியான பல 'கண்டிராக்டு'களையும் எடுத்து வேலை செய்து வந்தனர். அரசாங்கத்தாருடைய வேலைகள் பல, இந்த ஸ்தாபனத்திடமே 'கண்டிராக்டாக'க் கொடுக்கப்பட்டு வந்தன. ஏற்கனவே, அராபியர்களுக்கு இஃது ஆத்திரமாயிருந்தது. இப்பொழுது இந்த 'டெகார்ட் சுவரை'க் கட்டும் வேலையையும் யூதர்களிடம் ஒப்புவித்தது அராபியர்களுக்கு அதிகமான ஆத்திரத்தை மூட்டிவிட்டதென்பதை விஸ்தரித்துச் சொல்ல வேண்டியதில்லையல்லவா?

1938ம் வருஷத் தொடக்கத்தில், பாலஸ்தீனத்தின் புதிய ஹைகமிஷனராக ஸர் ஹாரோல்ட் மக்மைக்கேல்* நியமிக்கப்பட்டிருப்பதாகவும், பிரிவினை விஷயத்தில் அநுபவ சாத்தியமான பிரச்னைகள் என்னென்ன தோன்றும், அவற்றைச் சமாளிப்ப தெப்படி என்பவைகளைப் பற்றி விசாரிக்க, ஸர் ஜான் வுட் ஹெட்‡டின் தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்படுமென்றும், இந்தக் கமிஷனுடைய அறிக்கை வெளியாகும் வரையில், பாலஸ்தீன சம்பந்தமாக இது காறும் அநுஷ்டிக்கப்பட்டுவந்த கொள்கைகளில் எவ்வித மாற்றமும் இராதென்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தெரிவித்தனர்.

இதன்படியே, வுட்ஹெட் கமிஷனர், 1938ம் வருஷம் ஏப்ரல் மாதம் 27ந் தேதி பாலஸ்தீனத்திற்கு வந்து விசாரணை தொடங்கி, நவம்பர்

* Sir Harold Mac Michacl.

‡ Sir John Woodhead.

மாதம் 9ந் தேதி தங்கள் அறிக்கையை வெளியிட்டனர். பீல் கமிஷன் அறிக்கையானது, அது நியமிக்கப் பெற்ற பன்னிரண்டாவது மாதத்தில் தான் வெளியாயிற்று. வுட்ஹெட் கமிஷன் அறிக்கையோ, எட்டு மாதங்கள் கழித்தே வெளிவந்தது. இந்தத் தாமதத்திற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. 1937ம் வருஷத் தொடக்கத்திலிருந்தே, பாலஸ்தீனப் பிரச்னையைவிட இன்னும் முக்கியமான பிரச்னைகள் பல—பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கே பங்கம் ஏற்படக் கூடிய மாதிரி எழுந்த பிரச்னைகள் பல—பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் கவனத்தை இழுத்து வந்தன வென்பது உண்மைதான். ஆனால் பாலஸ்தீன விஷயத்தில் இவர்கள் வேண்டுமென்றே தாமதங் காட்டினர் என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால், சிறிது காலம் சென்ற பிறகு 'மப்டி' யைத் தலைமையாகக் கொண்ட அராபியத் தீவிரக் கட்சியினரின் செல்வாக்கு ஒடுங்கி விடுமென்றும், ட்ரான்ஸ் ஜார்டோனியா சிங்காதனத்தில் கொலுவீற்றிருக்கும் எமிர் அப்துல்லாவைத் தலைமையாகக் கொண்ட அராபிய மிதவாத கட்சியினர், அரசாங்கத்தாரின் கொள்கைகளை ஆதரிக்கக் கூடுமென்றும், எதற்கும் சிறிது காலம் ஆக வேண்டுமென்றும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் நம்பினார்கள். இந்த நம்பிக்கை, பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கு மட்டு மல்ல, யூதர்களுக்கும் ஏற்பட்டிருந்தது. அராபிய தேசீய இயக்கத்திற்குத் தலைமை வகித்த 'கிராண்ட் மப்டி' பாலஸ்தீனத்திலிருந்து அப்புறப்படுத்தப் பட்டு விட்டபடியால், அராபிய தேசீய இயக்கமே நாளா வட்டத்தில் சீர்

குலைந்து உருத்தெரியாமல் போய் விடும் என்று மேற்படி இருசாராரும் எதிர் பார்த்தனர். ஆனால் இவர்கள் எதிர்பார்த்தபடி, பாலஸ்தீன தேசிய இயக்கம் அடங்கி ஒடுங்கி விடவில்லை; மிதவாத அராபியர்களும், அரசாங்கத்தைத் தழுவி நிற்கவில்லை.

பாலஸ்தீனத்தில் செல்வாக்குள்ள குடும்பங்களில் முக்கியமானவை இரண்டு. ஒன்று ஹூஸேனி குடும்பம்; மற்றொன்று நாஷாஷீபி குடும்பம். தற்போது ஹூஸேனி குடும்பத்தின் தலைவர், ஜெருசலேம் 'கிராண்ட் மப்டி'யாகிய ஹாஜ் அமீன்—எல்—ஹூஸேனி; நாஷாஷீபி குடும்பத்தின் தலைவர் ராகேப் பே நாஷாஷீபி. இந்த இரு குடும்பத்தினருடைய செல்வாக்குக்குட்பட்ட அரசியல் வாதிகளும் மற்றப் பொது ஜனங்களும் சேர்ந்து தனித் தனிக் கட்சியினராகப் பிரிந்திருக்கின்றனர். மேற்படி இரு குடும்பத்தினருக்கும் எப்பொழுதும் பகையுண்டு. சாதாரணமாக ஹூஸேனி குடும்பத்தினரைத் தீவிர வாதிகளென்றும், நாஷாஷீபி குடும்பத்தினரை மிதவாதிகளென்றும் அழைப்பதுண்டு. தீவிர வாதிகளுக்கு நாட்டிலே அதிகமான செல்வாக்கு இருப்பதைக் கண்டு, நாஷாஷீபி குடும்பத்தினர், தங்கள் மிதவாத அபிப்பிராயங்களை வெளியில் சொல்லாமலும் அது சம்பந்தமான பிரசாரஞ் செய்யாமலும் சும்மாயிருந்தனர். ஹூஸேனி குடும்பத்தைச் சேர்ந்த ஜெருசலேம் 'கிராண்ட் மப்டி'யாகிய ஹாஜ் அமீன்—எல்—ஹூஸேனி நாடுவிட்டுச் சென்று விட்டமையாலும், 'மப்டி' கட்சியினரின் செல்வாக்கு ஒடுங்கி

விட்டமையாலும், நாஷாஷீபி குடும்பத்தினர், பகிரங்கமாகவே இனித் தம்மை ஆதரிக்கக் கூடுமென்று அரசாங்கத்தார் எதிர் பார்த்தனர். அதற்கு மாறாக, 'அராபிய பெரிய கமிட்டி' கலைக்கப்பட்டவுடனேயே, மேற்படி நாஷா ஷீபி குடும்பத்தினர், பிரிவினையை எதிர்த்து ஓர் அறிக்கை வெளியிட்டனர். பொதுவாகவே இந்தக் காலத்தில், பிரிட்டனுடன் ஒத்துழைக்க வேண்டுமென்ற அபிப்பிராயங் கொண்டவர்கள்கூட, தங்கள் அபிப்பிராயத்தைப் பகிரங்கமாகச் சொல்ல அஞ்சினர். இதற்கு ஒரு சிறிய உதாரணம். 1936ம் வருஷக் கலகத்தின்போது, அராபியத் தலைவர்கள் பலர் காப்பில் வைக்கப்பட்டனரல்லவா! அவருள் ஒருவரான ஹாஸன் சித்கி தாஜானி, டக்ளஸ் டப் என்ற ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரிடம் பின் வருமாறு கூறியதாகத் தெரிகிறது:—

இந்தக் கலகத்தில் தலைவர்களாகிய எங்களுக்கு, பாலஸ்தீன அரசாங்கத்தோடு சமரஸம் பேசக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்காது. இதற்கு முன்னர் நாங்கள் சமரஸம் செய்து வைத்தோம் என்பது உண்மைதான். ஆனால் இப்பொழுது அப்படியில்லை. இளைஞர்கள், பிரிட்டனைத் தங்கள் பரம சத்துருவாகக் கருதுகிறார்கள். தலைவர்களாகிய நாங்கள், எங்கள் பிராணனுக்குப் பயந்து அரசாங்கத்துடன் எவ்வித சமரஸமும் செய்து கொள்ள மறுக்கிறோம். இளைஞர்களுக்குப் பிரதிநிதிகளாயிருந்து நாங்கள் எந்த யாதாஸ்தில்

கையெழுத்திட்டாலும் அதை அவர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள்.

இங்ஙனம் பயந்து கூறிய ஹாஸன்சித்தி தாஜானி, 1938ம் வருஷம் அக்டோபர் மாதம் 13ந்தேதி கொலை செய்யப் பட்டு விட்டானென்றால், அராபியப் பொது ஜனங்களின் ஆத்திரம் எவ்வளவு உச்ச நிலையிலிருந்த தென்பதை நாம் விரித்துக் கூற வேண்டிய தில்லையல்லவா?

இது காறும் கூறிய வாற்றான், பிரிவினைக்குச் சாதகமாக, அராபியரிலே ஒரு சாரார் கூட இல்லையென்பது தெரிந்து விட்டது. தலைவர்களை அடக்கி விட்டால், இயக்கமும் அடங்கி விடுமென்று அரசாங்கத்தார் கருதியதும் தவறு என்று இப்பொழுது நிச்சயிக்கலாமல்லவா? இதற்குப் பதிலாக, 1938ம் வருஷ இடைக் காலத்திலிருந்து, பாலஸ்தீனக் கலகமானது, அதிதீவிரமாகவும், முன்னை விட அதிக கட்டுப் பாட்டுடனும் நடைபெற்று வரத் தொடங்கியது.

1938ம் வருஷம் ஜூலை மாதம், வெடி குண்டெறிதல், போக்கு வரவு சாதனங்களைத் தடை செய்தல் முதலிய பலாத்காரச்செயல்கள் நடைபெறத்தொடங்கின. ஹைபா என்ற நகரத்தில், இரண்டு முறை வெடி குண்டுகள் வெடித்துச் சுமார் நூறு பேருக்குச் சேதம் உண்டாயிற்று. 1938ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் 250 பேர் கொல்லப்பட்டனர்; 300 பேர் காயமடைந்தனர்; 40 கொள்ளைகள் நடைபெற்றன; 20 இடங்களில் ரெயில்வே தண்டவாளங்களுக்குச் சேதம் உண்டாக்கப் பட்டது; 11 இடங்களில் மரங்கள்

பெயர்க்கப்பட்டன; 7 தடவைகளில் பெட்ரோல் எண்ணெய்க் குழாய்களுக்குச் சேதம் உண்டு பண்ணப் பட்டது. ஜெருசலேம் நகரத்திற்குத் தண்ணீர் 'சப்ளை' நடவாதபடியும் முயற்சிகள் செய்யப்பட்டன. மேற்படி ஆகஸ்ட் மாதம் 24ந் தேதி, வட ஜில்லாவின் கமிஷனர், ஜெனின் என்ற ஊரில், ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு மேலே முகாம் செய்திருந்த போது சுட்டுக் கொல்லப் பட்டான்.

1938ம் வருஷம் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில், பாலஸ்தீனக் கலகமானது, ஒரு சிலர் சேர்ந்து கொண்டு, அங்கு மிங்குமாகச் சில சேதங்களை உண்டு பண்ணுவ தென்ற நிலைமையிலிருந்து மாறி, நாடு முழுவதிலும் அரசாங்க அதிகாரத்திற்கு மதிப்பு இல்லாதபடி செய்துவிட்ட ஒரு நிலைமைக்குப் பிரவேசித்தது. அரசாங்க ஆதிக்கம் இங்ஙனம் மதிப்பிழந்து நின்றதைத் தாங்கள் இதுவரை பாலஸ்தீனத்திலோ மற்றக் கீழைப் பிரதேசங்களிலோ பார்த்ததில்லை யென்று, பிரிட்டிஷ் பத்திரிகைகளின் நிருபர்கள், தங்கள் தங்கள் பத்திரிகைகளுக்குச் செய்திகள் அனுப்பிக் கொண்டு வந்தார்கள். பிரிட்டிஷ் துருப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடங்களாகிய ஜெருசலேம், டெல் அவீவ், ஹைபா முதலிய நகரங்களைத் தவிர, மற்ற எல்லா இடங்களும் வாரங்கள் கணக்காகக் கலகக்காரர்களின் வசமே இருந்தன. நல்ல பட்டப்பகலில்தான் பெத்லெஹம் நகரம் கலகக் காரர்கள் வசம் சிக்கியது. ஜெருசலேத்தின் புதிய துருப்புகள் இருந்து கொண் டிருக்கையில்தான்,

பழைய நகரம் கலகக்காரர்களின் சுவாதீனமாகியது. ரெயில்வே போக்குவரத்துக்களைக்கூட அரசாங்கத்தார் உபயோகிக்க முடியவில்லை. அரசாங்க நீதி ஸ்தலங்கள் சரியானபடி வேலை செய்யவில்லை. ஆனால் அராபிய கலகக்காரர்களோ, ஜில்லாக்கள்தோறும் நீதி ஸ்தலங்கள் ஏற்படுத்தி, அரசாங்கக் கோர்ட்டுகளிலிருந்து வரும் அப்பீல் வழக்குகளை யெல்லாம் விசாரணை செய்து தீர்ப்புக்கூறிவந்தனர். அராபியர்கள் இதுகாறும் சாதாரணமாகக் குல்லாய் (தார்புஷ்) அணிந்து வந்தனர். அதற்குப் பதில் அராபியர்களின் தேசீய தலையணியாகிய சிறு துண்டும் அதன் மீது கயிறும் தரித்துக் கொள்ள வேண்டுமென்று கட்டளை பிறந்தது. இதன்படியே, எல்லா ஜனங்களும் தங்கள் தலையணியை மாற்றிக் கொண்டு விட்டார்கள். கிராமாதிகாரிகள், கலகக்காரர்களுடைய உத்திரவுகளுக்குத்தான் கீழ்ப்படிந்தார்களே தவிர, அரசாங்கத்தாருக்குக் கீழ்ப்படிய மறுத்து விட்டார்கள். விஸ்தரித்துக் கொண்டு போவானேன்? கலகக்காரர்கள் போட்டி அரசாங்கம் ஏற்படுத்தி உத்திரவுகள் பிறப்பித்து வந்தனர்; வரிகள் வசூல் செய்தனர்; அவசரக் கோர்ட்டுகள் ஏற்படுத்தி, தேசத் துரோகிகளுக்கு மரணதண்டனை விதித்து வந்தனர். இந்த அரசாங்க நிருவாக காரியங்களை யெல்லாம் சூத்திரதாரியா யிருந்து நடத்தி வைப்பது, பெய்ரத் நகரத்தில் அஞ்ஞாதவாசம் செய்யும் 'மப்டி' யே என்று சொல்லப்பட்டது.

தவிர, பாலஸ்தீனத்தில் நடைபெறும் இந்தச் சம்பவங்கள், சுற்றுப்புறமுள்ள நாடுகளின் கவ

னத்தை இழுத்தன. சிரியா, ஈராக், எகிப்து முதலிய நாடுகளிலுள்ள அராபியர்கள், பாலஸ்தீனத்தில் நடை பெறும் அடக்கு முறைகளைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்தனர். எகிப்திலுள்ள தேசியக் கட்சியினராகிய 'வாப்த்' (Wafd) கட்சியினர், பாலஸ்தீனப் போராட்டத்தில் துன்புற்று அவதிப்படுவோருக்கு 'கஷ்ட நிவாரண நிதி' யொன்று ஏற்படுத்தி, ஏராளமான நன்கொடைகளை வசூலித்து அனுப்பித் தங்கள் ஆதரவைக் காட்டினர். தவிர, இவர்கள், கெய்ரோ நகரத்தில் 1938ம் வருஷம் அக்டோபர் மாதம் 10ந் தேதி சர்வ அராபிய மகாநாடு ஒன்று கூட்டுவித்து, பாலஸ்தீனம் சுதந்திர அராபிய நாடாக்கப்பட வேண்டுமென்றும், அந்நாட்டில் யூதர்கள் குடிபுகுவதை உடனே நிறுத்த வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றிவைத்தனர்.

பாலஸ்தீன அராபியர்கள், இங்ஙனம் சுற்றுப்புறமுள்ள இஸ்லாமிய நாடுகளின் ஆதரவு பெற்றதோடு சர்வதேசப் பிரச்னைகளில் பாலஸ்தீனத்தையும் கொண்டு புகுத்தும் நிலையை உண்டுபண்ணினர். ஹிட்லரும், நாஜி கட்சியினரும், பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷார் அநுஷ்டிக்கிற கொள்கைகளைப் பரிகசித்துப் பேசிவந்தனர். மற்றும், ஐரோப்பாவின் தென் கிழக்குப் பக்கம் தனது ஏகாதிபத்தியத்தை விரிக்க வேண்டுமென்ற கொள்கையை முன்னிட்டு, நாஜி ஜெர்மனியானது, அராபியர்களுக்கு ஆதரவு காட்ட வேண்டியது அவசியமாயிருந்தது. 1938ம் வருஷம் செப்டம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் நியுரென்

பெர்கிலில் நடைபெற்ற நாஜி காங்கிரஸுக்கு பாலஸ்தீனத்திலிருந்து நூறு அராபியர்கள் வரவழைக்கப் பட்டு கௌரவமாக உபசரிக்கப் பட்டார்கள். தவிர, பாலஸ்தீனத்தில் கலகம் நடைபெறத் தொடங்கிய காலத்திலிருந்து, சிரியா, லெபனேன் முதலிய நாடுகளில் இத்தலியின் பிரதிநிதிகளும், ஜெர்மனியின் பிரதிநிதிகளும் அதிக சுறுசுறுப்பா யிருந்தார்கள் என்றும், இதன் பயனுகவே, பாலஸ்தீனத்தின் சில பாகங்களில் யூதர்களின் மீதிருந்த துவேஷம் வளர்ந்து ஸ்திரீகளும் குழந்தைகளுங்கூடக் கொல்லப் பட்டார்க ளென்றும் சொல்லப்படுகின்றன.

பிரிட்டன், இனி என்ன செய்வதென்று யோசித்தது. கீழைப் பிரதேசங்களில் அது செலுத்தி வந்த அதிகாரத்திற்கும் அநுபவித்து வந்த கௌரவத்திற்கு மல்லவோ குழி தோண்டப் படுகிறது. ஆகவே இன்னும், கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை யென்று தீர்மானித்தது. 1938ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் குடியேற்ற நாட்டு மந்திரியாகிய ஸ்ரீ மால்கோம் மாக்டோனல்ட் பாலஸ்தீனத்திற்கும் இதற்குப் பிரதி மரியாதை செலுத்துவதுபோல், பாலஸ்தீன ஹைகமிஷனரான ஸர் ஹாரோல்ட் மக்மைக்கேல் லண்டனுக்கும் விஜயஞ் செய்தார்கள். புதிய ராணுவப் படைகள் பல பாலஸ்தீனத்திற்கு வந்து சேர்ந்தன. அடக்கு முறைகள் முன்னிலும் வேகமாகப் பிரயோகிக்கப்பட்டன. ஹைகமிஷனருக்கு விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு அவை

மூலம் அவசர உத்திரவுகள் பிறந்தன; ராணுவ கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்பட்டன; ஆயுத மெடுத்துச் செல்வோருக்கு மரண தண்டனை யென்று சொல்லப் பட்டது; பத்திரிகைகள் பலத்த கண் காணிப்பில் வைக்கப்பட்டன; சில பிரதேசங்களில் 24 மணி நேரமும் ஜனங்கள் அவரவர் வீடுகளைவிட்டு வெளியே வரக்கூடாதென்று உத்திரவிடப்பட்டது. விசேஷ உத்திரவுகள் பெற்றாலன்றி எங்கும் பிரயாணஞ்செய்ய முடியாது. கலகஞ் செய்தவர்களுடைய சொத்துக் கள் பறிமுதல் செய்யப்பட்டன. சந்தேகிக்கப்பட்ட நபர்களிருக்கும் கிராமங்களுக்குப் பொதுவாக அப ராதம் விதிக்கப்பட்டது. எந்த வீட்டிலேனும் கலகக்காரர்கள் இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டால் அந்த வீடு உடனே தகர்க்கப்பட்டது. 1938ம் வருஷம் கடைசி பாகத்தில் சில இடங்களில் ஆகாய விமானங்கள் கூட, கலகத்தை அடக்கும் பொருட்டு உபயோகிக்கப்பட்டன. பிரிட்டிஷ் துருப்புகளுக்கும் யூதர்களுக்கும் அடிக்கடி உயிர்ச் சேதங்கள் ஏற்பட்ட வண்ணமாகத்தா னிருக்கின்றன. 'பாலஸ்தீன் போஸ்ட்' என்ற ஒரு பத்திரிகை கணித்த கணக்குப் படி 1938ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ஒரு வருஷத்தில், பாலஸ்தீன முழுவதி லும் 2,000 பேர் கொல்லப்பட்டனர்; 1700 பேருக் குக் காயம் ஏற்பட்டிருக்கிறது. கொல்லப்பட்டவர் களில் 486 பேர் அராபியப் பொது ஜனங்கள்; 1,138 பேர் அராபிய கலகக்காரர்கள்; 292 பேர் யூதர்கள்.

## VIII

## சமரஸ மகாநாடு

பாலஸ்தீனத்தில் அராபியர்களின் கலகம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கையிலும், அதனை அரசாங்கத்தார் அடக்கிக் கொண்டு வந்த போழ்தும், யூதர்கள் சும்மா யிருக்கவில்லை. உலகத்தின் பல பாகங்களி லிருந்தும் தங்களுக்குச் சாதகமான அபிப்பிராயங்களைத் திரட்டி வந்தார்கள். அமெரிக்காவி லிருந்து இவர்களுக்கு அதிகமான ஆதரவு கிடைத்தது. பாலஸ்தீனத்தில் 'மாண்டேடரி' நிருவாகத்தை மாற்றி யமைப்பதாகிற உத்தேசம் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு உண்டெனின் அதற்கு முதலில் அமெரிக்காவின் சம்மதத்தைப் பெறுதல் அவசியமென்று அமெரிக்கா ஐக்கிய அரசாங்கத்தார் தெரிவித்தனர். இது, யூதர்களுக்குப் பெரிய ஆதரவளித்தது போலல்லவா? தவிர, போலந்திலிருந்தும் இன்னும் சில நாடுகளி லிருந்தும் யூதர்கள் சிறு சிறு படையினராகச் சேர்ந்து பாலஸ்தீனத்திற்கு வந்தார்கள். அராபியர்களுடன் எதிர்த்துப் போராடும் யூதக் கூட்டத்தினரோடு இவர்கள் சேர்ந்து கொண்டார்கள். போலந்தின் தலை நகரமான வார்ஸாவி லிருந்து, யூதர்கள் சார்பாக ஓர்

அறிக்கை பிறந்தது. இதில், எல்லா யூதர்களும் ஆயுத மேற்று பாலஸ்தீன யூதர்களுக்காகப் போர் புரிய வேண்டு மென்றும், பாலஸ்தீனத்தில் ஏராள மான யூதர்கள் குடிபுக வேண்டுமென்றும், பாலஸ் தீனத்தையும் ட்ரான்ஸ் ஜார்டோனியாவையும் சேர்த்து யூத நாடாக்க வேண்டு மென்றும் குறிப்பிட் டிருந்தார்கள். இது தவிர, யூத இளைஞர்களைப் பாலஸ் தீனத்திலும் இன்னும் பிற இடங்களிலும் குடிபுகுத்த, லண்டனில் ரெடிங் சீமாட்டியின் பெரு முயற்சியில், ஒரு லட்சம் பவுன் நிதி யொன்று திரட்டப்பட்டது. இங்ஙனம் யூதர்கள் பல திறப்பட்ட முயற்சிகளைச் செய்ததோடு, அராபியர்களின் எதிர்ப்பையும் பலமுக மாகச் சமாளித்து வந்தனர்.

இந்த நிலையில் வுட்ஹெட் கமிஷன் அறிக்கை வெளியாயிற்று. 1938ம் வருஷம் மார்ச் மாதம் நிய மனம் செய்யப்பெற்ற இந்தக் கமிஷனனது, நவம்பர் மாதம் ஒன்பதாந் தேதி தன் அறிக்கையை வெளி யிட்டது. மிகுந்த அவ நம்பிக்கையோடுதான், வுட் ஹெட் கமிஷனர் தங்கள் அறிக்கையை வெளியிட் டனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. 'எந்த நிபந்தனையின் மீதும், அராபியர்கள் மட்டுமோ, அல்லது அராபியர்களும் யூதர்களும் சேர்ந்தோ பிரி வினையை அங்கீகரிப்பார்களா வென்பது சந்தேக மாகவே இருக்கிறது. அப்படி பிரிவினையை ஏற்றுக் கொள்ளா விட்டால் என்ன செய்வது என்ற பிரச்னைக் குப் பரிகாரந் தேடிக் கொடுப்பது எங்கள் வேலையல்ல' என்கிறது இந்தக்கமிஷனின் அறிக்கை. தவிர, இந்தக்

கமிஷனர், ஒரு முகமான சிபார்சுகளைச் செய்யவில்லை யென்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. பெரும் பான்மையோர் அறிக்கை யென்றும், சிறு பான்மை யோர் அறிக்கை யென்றும் பிறந்தன.

வுட்ஹெட் கமிஷன் அறிக்கை யானது, பீல் கமிஷன் அறிக்கையின் சிபார்சுகள் அநுஷ்டானத் திற்குக் கொண்டு வர முடியாதவை யென்று கூறி அதனை நிராகரித்து விட்டது. அதற்குப் பதிலாக, இது புதிய மதிரியானதொரு பிரிவினையைச் செய்ய வேண்டுமென்று கூறியது. இந்தப் பிரிவினை முறை வருமாறு:—

1. பாலஸ்தீனத்தின் வட பாகம் பிரிட்டிஷ் மாண்டேடரி' நிருவாகத்திற் குட்பட்டிருக்க வேண்டும்.

2. அங்ஙனமே, பாலஸ்தீனத்தின் தெற் குப் பாகமும் (நெகெப்) பிரிட்டிஷ் 'மாண்டே டரி' நிருவாகத்திற்குட் பட்டிருக்க வேண்டும்.

3. பாலஸ்தீனத்தின் மத்திய பாகத்தை மூன்று பிரிவாக்கி, ஒன்றை யூதர் நாடாகவும், இன்னொன்றை அராபிய நாடாகவும், பிறி தொன்றை ஜெருசலேம் பகுதியாகவும் வகுக்க வேண்டும்.

இவ்வாறு பிரிவினை செய்வதால் எந்தச் சமூகத் தாருக்கும் எந்த விதமான இடையூறும் ஏற்படாதென் பதற்கு வுட்ஹெட் கமிஷன் பின் வரும் ஆதாரங்களை எடுத்துக் காட்டுகிறது:—

*1. பாலஸ்தீனத்தின் வட பிரதேசத்தைப் பிரிப்பது, யூதர்களுக்கோ அராபியர்களுக்கோ தீமை செய்வதாக முடியும். மற்றும், யாராவது ஒரு சமூகத்தினருக்கே இந்தப் பாகத்தை அப்படியே ஒப்புக் கொடுத்து விட முடியாது.*

*2. 'நெகெப்' என்கிற தெற்குப் பிரதேசத்தை யூதர்களுக்கென்று ஒதுக்கிக்கொடுக்க முடியாது. அதற்குப் பதில் அராபியர்களுக்குக் கொடுப்பது யூதர்களுக்குப் பாதகஞ் செய்வதாகும். ஏனென்றால், இந்தப் பிரதேசத்தில் தற்போதுள்ள பிரதேசங்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் யூதர்களை இங்குக் குடியேற்றுவது சுலப சாத்தியமானதாகும்.*

*3. ஆகையால் பாலஸ்தீனத்தின் வடபாகமும் தென் பாகமும் 'மாண்டேடரி' நிருவாகத்திற்குட்பட்டதாகவே இருக்க வேண்டும்.*

வுட்ஹெட் கமிஷனுடைய இந்தப் பிரிவினைத் திட்டப்படி, பாலஸ்தீனத்தின் வட பாகமும் தென் பாகமும் பிரிட்டிஷாருடைய ஆதிக்கத்துக்குட்பட்டிருக்கும். மத்தியிலுள்ள பிரதேசம் அராபிய நாடாக்கப்படும். அராபிய நாட்டு எல்லைக்குள்ளாகவே, கடலோரமாக ஒரு சிறு பிரதேசம் யூதர் நாடாக அமையும். இந்த யூதர் நாட்டுக்கு மத்தியில், ஜெருசலேம், பெத்லெஹம் முதலிய புண்ணிய ஸ்தலங்கள் நிறைந்த பிரதேசம், பிரிட்டிஷ் 'மாண்டேடரி' நிருவாகத்திற்குட்பட்டிருக்கும். புண்ணிய ஸ்தலங்களைப் பாதுகாப்பதாகிற பொறுப்பு பிரிட்டிஷாரைச் சேர்ந்ததே யாத

லால், இந்த ஜெருசலேம் பகுதி, இங்ஙனம் பிரிட்டனுடைய நிரந்தர நிருவாகத்திற்குட் படுத்தப் பெற வேண்டுமென்று காரணங் கூறப்பட்டது.

எந்த முகாந்திரத்தைக் கொண்டும் பிரிவினையை விரும்பாத அராபியர்கள், வுட்ஹெட் கமிஷனுடைய பிரிவினைத் திட்டத்தை மட்டும் அங்கீகரிப்பரென்று எதிர்பார்க்க முடியாதல்லவா? இதற்கேற்றாற் போல் 1938ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் வாரத்திலிருந்து பாலஸ்தீனப் போராட்டம் வலுத்து நிற்கிறது. நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து மூன்று நாட்கள் வரை, அராபியர்கள் பொது வேலை நிறுத்தமொன்று வெற்றிகரமாக நடத்தி, தங்கள் அதிருப்தியைக் காட்டிக் கொண்டார்கள்.

வுட்ஹெட் கமிஷனுடைய சிபார்சுகள், பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் முந்திய அபிப்பிராயங்களைக் கூட மாற்றி விட்டதென்று சொல்ல வேண்டும். 1938ம் வருஷம் நவம்பர் மாதம் 10ந் தேதி, பிரிட்டிஷ் அரசாங்கம், தனது குடியேற்ற நாட்டு மந்திரி ஸ்ரீ மால்கோம் மாக்டோனல்ட் மூலம், பாலஸ்தீன விஷயமாக இனி, தான் அநுசரிக்கப் போகும் கொள்கையைப் பின் வரும் அறிக்கை வாயிலாக வெளியிட்டது:—

1. அராபியர்களுக்கென்றும் யூதர்களுக்கென்றும் தனித் தனி நாடுகள் ஏற்படுத்திக் கொடுக்குமாறு பாலஸ்தீனத்தைப் பிரிப்பது, அரசியல் காரணங்களை முன்னிட்டும், நிருவாக சௌகரியங்களை உத்தேசித்தும், பொருளாதார

நிலைமைகளைப் பொறுத்தும் அநுபவ சாத்திய மற்றதாகும்.

2. பாலஸ்தீனத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சங்கடங்களுக்குப் பரிகாரமாக வேறு மார்க்கங்கள் காணப்படுகிற வரையில், அந்த நாட்டின் அரசாங்க நிருவாகப் பொறுப்பைப் பிரிட்டிஷ் அரசாங்கமே தொடர்ந்து நடத்தும்.

3. பாலஸ்தீன எதிர் காலப் பிரச்னைகளைப் பற்றி—அங்குக் குடிபுகும் உரிமை விஷயம் உள்பட—கலந்தாலோசிக்க பாலஸ்தீன அராபியர்கள், அதற்கு அடுத்தாற் போலுள்ள நாடுகள் ஆகிய இவற்றின் பிரதிநிதிகளும், யூதஸ்தாபனங்களின் பிரதி நிதிகளும் அடங்கிய ஒரு மகாநாட்டை லண்டனில் உடனே பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கூட்டுவர்.

4. இந்த மகா நாட்டின் பயனாக, நியாயமான ஒரு காலத்திற்குள் அராபிர்களுக்கும் யூதர்களுக்கும் சமரஸம் ஏற்படா விட்டால், பிரிட்டிஷ் அரசாங்கத்தார், தங்களுடைய அநுபவத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு, தாங்கள் எதிர்காலத்தில் அநுஷ்டிக்கப்போகும் முறைகள் இன்னின்னவை யென்பதை வெளியிடுவர்.

இந்த மகாநாடு வெற்றிகரமாக முடியுமா வென்ற சந்தேகம், பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கே ஏற்பட்டிருக்கிற தென்பது, மேற்படி அறிக்கையின் நான்

காவது பகுதியிலிருந்தே தெரிகிறதல்லவா? இதே மாதிரியான சந்தேகம், அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஏற்பட்டிருப்பதற்கு ஆதாரங்கள் இல்லாமல் இல்லை. முதலாவது, அராபியப் பிரதிநிதிகளாக வருவோரில், அரசாங்கத்தாருக்குப் பிடித்தமில்லாதவர் இருந்தால் அவர்களை விலக்கும் உரிமை அரசாங்கத்திற்கு உண்டு. இரண்டாவது, அராபிய தேசிய இயக்கத்தின் உண்மையான பிரதிநிதியென்று அழைக்கப் படுகிற ஜெருசலேம் 'கிராண்ட் மப்டி' மகா நாட்டுக்கு அழைக்கப் படவில்லை. மூன்றாவது, 'கிராண்ட் மப்டி'யின் பிரதிநிதிகளாக மகாநாட்டுக்கு வருவோர், மற்றப் பிரதிநிதிகளைப் போல் எல்லா உரிமைகளையும் பெறுவார்களா வென்ற சந்தேகம் பாலஸ்தீனிய அராபியர்களிடையே பரவியிருக்கிறது. நான்காவது, பாலஸ்தீனத்தைச் சுற்றியுள்ள இஸ்லாமிய நாடுகளாகிய எகிப்து, ஈராக், அரேபியா, எமன், ட்ரான்ஸ் ஜார்டோனியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் மகா நாட்டுக்கு வரவழைக்கப்படுகிறார்கள் என்பது ஒரு விதத்தில் திருப்திதான். ஆனல் பாலஸ்தீனத்தோடு, மேற்படி நாடுகளைவிட அதிகமான தொடர்பு கொண்ட சிரியா, லெபனேன் நாடுகளின் பிரதிநிதிகள் ஏன் மகா நாட்டிற்கு வரவழைக்கப்படவில்லை? ஐந்தாவது, இந்த மகாநாடு, சர்வ கட்சியினரும் சம நிலையிலிருந்து பேசக் கூடிய ஒரு வட்ட மேஜை மகாநாடாயிருப்பதற்குப் பதிலாக, குடியேற்ற நாட்டு மந்திரியும் யூதர்களும் ஒரு கட்சியினராகவும், மேற்படி குடியேற்ற நாட்டு மந்திரியும் அராபியப் பிரதிநிதிகளும் எதிர்க் கட்சியினராகவும்

இருந்து வாதஞ் செய்வார்களானால், எவ்வளவு தூரம் இந்த மகா நாடு கோரிய பலனைக் கொடுக்கு மென்று அரசியல் தீர்க்கதரிசிகள் சந்தேகிக்கிறார்கள். யூதர்கள், அராபியர்கள், பிரிட்டிஷார் ஆகிய மூன்று சாரா ரும் மூன்று கட்சியினராக மகா நாட்டு மேஜையைச் சுற்றியமர்ந்து ஒரு முடிவு காண்டலே சிறப்பு என்பது இவர்கள் கருத்து. ஆனால் மகா நாடு, இந்த முறையில் நடை பெறாது போலிருக்கிறதே.

இந்தப் பாலஸ்தீன மகா நாட்டைப் பற்றி, அராபிய விஷயங்களில் பெரிய நிபுணன் என்று கருதப் படுகிற எச். எஸ். ஜே. பில்பி, என்பவன் பின் வரும் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறான் :—

> லண்டன் மகா நாட்டில், பாலஸ்தீனத்தின் எதிர்கால வாழ்வு, நீதியை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுமா அல்லது வாள் பலத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுமா வென்பது தெரிந்து விடும். பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராட வேண்டு மென்ற எண்ணம் அராபியர்களுக்கு இல்லை. ஆனால் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு சண்டையிடும் நிலைமையில் அவர்கள் வைக்கப்படுவார்களானால், நிச்சயமாக அவர்கள் சண்டை செய்வார்கள். அப்படி யுத்தம் நடை பெறுமானால், அது சிலர் கருதுகிறபடி அவ்வளவு மோசமாயிராது. அராபியாவில் லாரென்ஸ் என்பவனுக்கு ஏதேனும் புகழ் ஏற்பட்டிருக்குமானால், அதற்குக் காரணம், அவன், சிறந்த ராணுவ ஏற்பாடுகளை

விட, அராபியர்கள் ஒளிந்து கொண்டு சண்டை செய்வதிலேயுள்ள அநுகூலத்தை உணர்ந்திருந்ததே யாகும். ஐரோப்பிய யுத்த காலத்தில் இவன் கற்றுக் கொண்ட இந்த அநுபவத்தை, சென்ற வருஷம் பாலஸ்தீனத்தில் அராபியர்கள் நன்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். 1938ம் வருஷம் ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பாலஸ்தீனத்தில் எவ்வளவு சேதம் உண்டாயிற்றென்பதைப் பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சில புள்ளி விவரங்களை வெளியிட்டிருக்கின்றனர். பிரிட்டிஷ் துருப்புகளால் 400 'கொள்ளைக்காரர்கள்' கொல்லப்பட்டிருக்கிறார்கள். கலகக்காரர்களோ, 29 பிரிட்டிஷாரையும், 144 யூதர்களையும், 230 அராபியர்களையும்கொன்றிருக்கிறார்கள். வுட்ஹெட் கமிஷன் அறிக்கைப்படி, 1938ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் ஜுலை மாதம் வரையில், பிரிட்டிஷார், யூதர், அராபியர் ஆகியோர் 316 பேர் மரண மடைந்திருக்கின்றனர். ஆனால் கலகக்காரர்களில் எத்தனை பேர் இறந்து போயினர் என்பதைக் கமிஷன் குறிப்பிடவே யில்லை. பாலஸ்தீனத்தில் மொத்தம் இருபதினாயிரம் பிரிட்டிஷ் துருப்புகளும், கலகக்காரர்களில் ஐயாயிரம் பேருமே இருக்கிறார்களென்பதை நாம் நினைக்கிற போது இந்தப் புள்ளி விவரங்கள் ருசிகரமாயில்லையா?

பாலஸ்தீனத்தில் எதிரெதிர்க் கட்சியினராகப் பிரிந்துள்ள அராபியர்களும் பிரிட்டிஷ் அர

சாங்கத்தினரும், மனிதனுக்கு மனிதன் என்ற
முறையில் நேருக்கு நேர் நிற்கிற போது சரி
சமான வீரர்களே. ஆனால் அரசாங்கத்தாருக்கு,
ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளைப்
போடலாம் என்ற அநுகூலம் இருக்கிறது. அரா
பியர்களுக்கோ, தலை மறைவாகப் பதுங்கிக்
கொள்வதற் கேற்ற பள்ளத் தாக்குகள் முதலி
யனவும், அராபியப் பொது ஜனங்களுடைய
பூரண அநுதாபமும் துணையாக இருக்கின்றன.
ஆகையால், எப்பொழுதும் நெருப்பையே கக்கிக்
கொண்டிருக்கிற சுபாவமுடைய ஒருவன்தான்,
யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டு
மென்று சொல்வான். மகா நாட்டில் சமரஸப்
பேச்சுகள் நடை பெறுவதற்கு ஒரு நிபந்தனை
யாக, கலகத்தை நிறுத்த வேண்டுமென்று அர
சாங்கத்தார் வற்புறுத்தாதிருந்தது, அரசாங்கத்
தாருடைய புத்தி சாலித்தனத்தையே காட்டுகி
கிறது. நியாயம் வழங்குவதினாலேயே யுத்தத்தை
நிறுத்த முடியும்.*

லண்டன் மகாநாடு எவ்வாறு முடிவு பெற்ற
போதிலும், அதன் சிபார்சுகள் யாருக்குச் சாதக
மாகவோ, பாதகமாகவோ இருந்தபோதிலும், பாலஸ்
தீனத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நிரந்தரமான
ஒரு பிடிப்பை வைத்துக் கொண்டிருப்பர் என்பது
மட்டும் நிச்சயம். சென்ற இரண்டு நூற்றாண்டுக

---

* World Review—January 1939.

ளாகவே மத்தியதரைக் கடலின் கிழக்குக் கரையோரப் பிரதேசங்களின் மீது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பார்வை விழுந்து வந்திருக்கிறது. தங்களுடைய ஏகாதிபத்திய எண்ணங்கள் நிறைவேறுவதற்கநுகுணமாகவே, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பழைய துருக்கி சாம்ராஜ்யத்தை ஆதரித்தும், சைப்ரஸ் தீவைச் சுவாதீனப் படுத்தியும், எகிப்திலும் பாரசீக வளை குடாவிலும் தலையிட்டும், துருக்கிக்கு விரோதமாக அராபியர்களைக் கிளப்பிவிட்டும் பலவிதமான முறைகளைக் கையாண்டு வந்திருக்கின்றனர். இங்ஙனம் பலவிதமான முறைகள் கையாளப்பட்டு வந்த போதிலும், பிரிட்டனின் அடிப்படையான நோக்கம் மட்டும் ஒன்றுகவே இருந்து வந்திருக்கிறது. அதாவது, ஏகாதிபத்திய காரணங்களுக்காக அராபிய உலகத்தில் பிரிட்டனுடைய ஆதிக்கம் ஓங்கி நிற்க வேண்டுமென்பதுதான். இந்த நோக்கமே ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு கீழைப் பிரதேசங்களில் பிரிட்டன் அநுசரித்து வந்த ராஜதந்திர முறைகளுக்கெல்லாம் அடிப்படையான காரணமாயிருந்திருக்கிறது. ஆனுல் ஐரோப்பிய யுத்தத்தின் கடைசிபாகத்தில்—அதாவது 1917ம் வருஷத்தில்—பிரிட்டனுக்கு யூதர்களுடைய உதவி அவசியம் தேவையாயிருந்தது. இதனுல், பிரிட்டன், தன்னுடைய ஏகாதிபத்திய முறைகளில் சில மாற்றங்கள் செய்து கொள்ள வேண்டுவது அவசியமாயிற்று.

பாலஸ்தீனத்தின் நிருவாகத்தை பிரிட்டன் திடீரென்று ஏற்றுக் கொண்டு விடவில்லை. ஏற்கனவே

செய்து கொள்ளப் பட்டிருந்த மூன்றுவித ஒப்பந்தங்கள், 'மாண்டேடரி' நிருவாகத்திற்கு மூல காரணங்களா யிருந்தன.

(1) 1915ம் வருஷத்தில், அராபியர்களுடைய சுதந்திரம் அங்கீகரிக்கப் பட்டது.

(2) 1916ம் வருஷம் மே மாதம் பிரிட்டனும் பிரான்ஸும் ஒரு ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டன. அராபியப் பிரதேசங்களை, பிரிட்டனும் பிரான்ஸும் பங்கிட்டுக் கொள்வதென்பதே இந்த ஒப்பந்தத்தின் சாரம். அதாவது, பாலஸ்தீனத்தைச் சர்வதேச அரசாங்க நிருவாகத்திற் குட்படுத்துவதென்றும், ஆனல் ஹைபா துறைமுகத்தைச் சுற்றியுள்ள ஒரு சிறு பிரதேசம் மட்டும் பிரிட்டனுடைய சுவாதீனத்திலிருப்பதென்றும், பாக்தாத் வரையிலுள்ள தெற்கு ஈராக் பிரதேச முழுவதையும் பிரிட்டனும், ஹைபாவிலிருந்து மெர்ஸீனு வரையிலுள்ள கடலோரப் பிரதேசத்தை பிரான்ஸும் எடுத்துக் கொள்வதென்றும் மேற்படி ரகசிய ஒப்பந்தம் கூறியது.

(3) 1917ம் வருஷம் நவம்பர் மாதம் பிறந்த பால்பர் அறிக்கை.

இந்த ஒப்பந்தங்கள், அறிக்கைகள் முதலியவற்றின் பரிணாமமாகவே, பாலஸ்தீனம், ஈராக் முதலியன பிரிட்டனின் மேற்பார்வைக்கும், சிரியா, லெபனோன் முதலியன பிரான்ஸின் மேற்பார்வைக்கும் போய்ச் சேர்ந்தன. மற்றும், ஹைபா துறைமுகம், தன்னுடைய சுவாதீனத்திலிருக்க வேண்டுமென்ற எண்ணம்

1916ம் வருஷத்திலிருந்தே பிரிட்டனுக்கு இருந்திருக்கிறது. ஹைபா துறைமுகம் பிரிட்டிஷாருடைய நிருவாகத்திலிருக்க வேண்டுமென்பதைப் பற்றி, பீல் கமிஷனும், வுட்ஹெட் கமிஷனும் அபிப்பிராய வேற்றுமை கொள்ளவில்லை. மத்தியதரைக்கடலோரமாயுள்ள பிரதேசத்தை யூதர்களின் ஆதிக்கத்தில் விடுவதுதான், பிரிட்டனுடைய ஏகாதிபத்திய நலனுக்கு உகந்ததாகும். தன்னுடைய கொள்கைகளுக்கிசைந்தவாறு அந்த யூதநாட்டு நிருவாகம் நடைபெறுமென்ற நம்பிக்கை பிரிட்டனுக்கு இருக்கிறது. பாலஸ்தீனத்தில் யூதர்கள் குடியேறும் விஷயத்தில் 1920ம் வருஷ முதற் கொண்டு பிரிட்டன் அதிகமான சிரத்தை காட்டிவருவது இந்த நம்பிக்கையினால்தான் என்று ராஜதந்திரிகள் கூறுகிறார்கள்.

சென்ற சில வருஷங்களாகவே பாலஸ்தீனத்தின் முக்கியத்துவம் அதிகமாகிக் கொண்டு வருகிறது. எகிப்தில் தேசீய இயக்கம் வெற்றிபெற்று அதற்கும் பிரிட்டனுக்கும் ஒருவித சிநேக ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, மத்தியதரைக்கடலின் கிழக்குப் பிரதேசங்களில் தனது பிடிப்பைத் தளர விடாமல் பார்த்துக் கொள்வது பிரிட்டனுக்குச் சிறிது சிரமமாகவே இருக்கிறது. இந்தப் பிடிப்பை தளர்த்திக் கொடுக்கவும் முடியவில்லை. அதற்குமாறாக இன்னும் இறுக்க வேண்டி யிருக்கிறது. ஏனென்றால், மத்தியதரைக்கடலின் மேற்குப் பிரதேசங்களில் இத்தலி கண் வைக்கத் தொடங்கி விட்டது. இவைப் பிரதேசங்களில் பிரிட்டனுக்கு உள்ள செல்வாக்குக்கு, அது போட்டி

யாக வரும்போலிருக்கிறது. முஸோலினியும், அவனுடைய பாசிஸ்ட் சகபாடிகளும் இந்தத் தோரணையிலேயே, சில வருஷங்களாகப் பேசிக் கொண்டு வருகிறார்கள். தவிர, ஹைபா துறைமுகம், பிரிட்டனுக்கு இப்பொழுது மிகவும் முக்கியமான இடம். ஏனென்றால் மோசூலிலிருந்து தொடங்கும் பெட்ரோல் குழாய்கள் இங்குதான் வந்து முடிகின்றன.* மற்றும், ஏராளமான கப்பற் படைகளைக் கொண்டு வந்து நிறுத்துவதற்கு ஹைபா துறைமுகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த எண்ணத்துடனேயே இதன் துறைமுகம் விசாலிக்கப்பட்டது. உலக யுத்தம் ஒருவாறு ஏற்படுமானால், மத்திய தரைக்கடல் வழியாகக் கீழ் நாடுகளுடன் தான் வைத்துக் கொண்டிருக்கும் தொடர்பானது எவ்விதத்திலும் பாதகமடையாமல் இருக்க வேண்டுமென்பது பிரிட்டனின் கவலை. இதனாலேயே பாலஸ்தீனத்தையும், ஹைபா துறைமுகத்தையும் அது முக்கியமாகக் கருதுகிறது. தளபதி ரிச்மண்ட் என்ற ஒரு ராணுவ நிபுணன் கூறும் கருத்து இங்குக் கவனிக்கத்தக்கது:—

> குறைவான முயற்சியுடன், மத்திய தரைக் கடல் முழுவதிலும் நாம் தாராளமாகப் பழகக்

---

* மோசூலில், பெட்ரோல் கிணறுகள் இருக்கும் இடத்திற்கு கிர்குக் (Kirkuk) என்று பெயர். இங்கிருந்து மணிக்கு 900 டன் விகிதம், பழுப்பும் கருப்பும் கலந்த ஒருவகை எண்ணெய் 'பம்ப்' செய்யப்படுகிறது. இது, 620 மைல் தூரம் பன்னிரண்டு அங்குல உள் அகல முள்ள குழாய் வழியாக ஹைபா துறைமுகத்தில் கட்டப் பெற்றிருக்கும் பெரிய 'டாங்கு'களில் (Storage Tanks) வந்து சேர்கிறது. இங்கு பெட்ரோலாகச் சுத்தஞ் செய்யப்பட்டு, கப்பல் வழியாக வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுகிறது.

கூடிய நிலைமை ஏற்பட வேண்டும். இதற்குத் தகுதியாக, பாது காப்பு ஸ்தலங்களும், கடற் படைக்கும் ராணுவத்திற்கும் போதுமான வளவு சாமான்கள் 'சப்ளை' செய்யக் கூடிய போக்கு வரத்து மார்க்கங்களும் நமது சுவாதீனத்தில் இருக்க வேண்டும்.

இது தவிர, மேனாட்டுக்கும் கீழ் நாட்டுக்கு மிடையிலே யுள்ள எல்லா ஆகாய விமான மார்க்கங்களும் பாலஸ்தீனத்தில் சந்திக்கின்றன. அடுத்து வரும் யுத்தத்தில் இஃதொரு முக்கியமான அநுகூலமல்லவா? எப்படியும், பிரிட்டனானது, உலக வல்லரசுகளில் ஒன்றாக இன்னுஞ் சிறிது காலம் மதிக்கப்பட வேண்டுமானால், அதற்கு பாலஸ்தீனம் மிகவும் அவசியமாகும். இதுவே பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின் கருத்து.

அரசியல் வாதிகளின் கருத்து ஒருபுற மிருக்கட்டும். அரசியலின்மேல சம்பந்தப் படாதவர்கள்கூட அடுத்துவரும் உலக மகா யுத்தத்தில் பாலஸ்தீனந்தான் முக்கிய போர்க்களமாயிருக்கு மென்றும், இங்குதான், இந்த யுத்தத்தின் வெற்றியோ தோல்வியோ முடிவு கட்டப்படு மென்றும் கூறி யிருக்கிறார்கள். ‡ இந்த அபிப்பிராயங்களை ஆராய்ச்சி உலகம், எவ்வளவு தூரம் அங்கீகரிக்கும் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். பாலஸ்தீனத்தின் மீது இதுகாறும் ஐரோப்பிய வல்லரசுகள்—சிறப்பாக

‡ Cheiro's World Predictions.

பிரிட்டன்—செலுத்திவந்த கண்ணோட்டம் இனி தீட்சண்யமாக இருக்கும் என்பதில் சந்தேகமிராது.

பாலஸ்தீனத்தின் எதிர்கால வாழ்வு எவ்வாறிருந்த போதிலும், தற்போது அங்கு நடைபெறும் போராட்டத்தில், இந்தியாவின் அநுதாபம் அராபியர்கள் பக்கமே இருக்கிறது. இதற்கு ஓர் எடுத்துக் காட்டாக, மகாத்மா காந்தி, 26-12-38 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் பாலஸ்தீனத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள பாகத்தை மட்டும் எடுத்துக் காட்டி இந்நூலை முடிப்போம்:—

> இங்கிலாந்து, எப்படி இங்கிலீஷ்காரர்களுக்குச் சொந்தமானதோ, பிரான்ஸ் எவ்வாறு பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமானதோ அப்படியே பாலஸ்தீனமும் அராபியர்களுக்குச் சொந்தமானது. அராபியர்களிடையே யூதர்களைக் கொண்டு புகுத்துவது தவறு; மனிதத் தன்மை யற்றது. இப்பொழுது பாலஸ்தீனத்தில் நடை பெறும் விவகாரங்களை எந்த விதமான தர்ம நியாயத்தைக் கொண்டும் சரியென்று சொல்ல முடியாது. 'மாண்டேடரி' நிருவாகத்திற்கு எவ்வித ஆதாரமுமில்லை. சென்ற யுத்தந்தான் இதற்கு ஆதாரம். பாலஸ்தீனம் முழுவதையுமோ அல்லது அதில் ஒரு பகுதியையோ யூதர்களின் தேசிய ஸ்தலமாக்க வேண்டுமென்பதற்காக, பெருந்தன்மை வாய்ந்த அராபியர்களை அடக்குவதென்பது, மனித சமூகத்திற்கு இழைக்கிற ஒரு குற்றமாகும்.

# 'மாண்டேடெட்' நாடுகள்

| எந்த நாடு | எந்த நாட்டின் மேற்பார்வையில் இருக்கின்றது? | விஸ்தீரணம் சதுர மைல் | ஜனத் தொகை |
|---|---|---|---|
| **பிரிவு அ** | | | |
| பாலஸ்தீனம் | பிரிட்டன் | 10,000 | 1,400,000 |
| ட்ரான்ஸ்ஜார்டோனியா | ,, | 34,740 | 300,000 |
| சிரியா | பிரான்ஸ் | 58,546 | 2,224,136 |
| லெபனோன் | ,, | 3,861 | 854,693 |
| **பிரிவு ஆ** | | | |
| முன்னர் ஜெர்மனியின் கீழ் இருந்த நாடுகள்—மத்திய கிழக்கு ஆப்ரிக்காவில் | | | |
| காமரூன்ஸ் | பிரிட்டன் | 34,256 | 800,000 |
| டோகோலாண்ட் | ,, | 12,600 | 293,671 |
| தாங்கநிகா | ,, | 373,000 | 5,065,544 |
| தெற்கு காமரூன்ஸ் | பிரான்ஸ் | 166,489 | 2,340,000 |
| கிழக்கு டோகோலாண்ட் | ,, | 21,893 | 382,500 |
| ருவாந்தா-உருந்தி | பெல்ஜியம் | 20,550 | 3,276,983 |
| **பிரிவு இ** | | | |
| ஜெர்மன் தென் மேற்கு ஆப்ரிக்கா | தென் ஆப்ரிக்கா | 322,768 | 350,000 |
| மேற்கு சாமோவா | நியூஜிலந்து | 1,150 | 54,778 |
| நவ்ரு தீவு | ஆஸ்திரேலியா | 5396 ஏக்ரா | 2,920 |
| நியு கையானா | ,, | 93,000 | 505,002 |
| மத்திய ரேகைக்கு வடக்கிலுள்ள தீவுகள் | ஜப்பான் | 833 | 113,154 |